Deviyin KANMANI -Tamil Fortnightly JANUARY-1, 2011 Regd. No. TN/CH(C)/360/09-11 Registered With Registrar of News papers for India Under No.49510/89 Published every 1st and 15th of every month.

## என்னைப்பற்றி...



எனது முதல் நாவலில் இருந்து ஆதரவு அளித்துவரும் கண்மணிக்கும் வாசகர்களுக்கும் நன்றி!

அதேபோல், வர்ணிகாவும், சித்தார்த்தனும் தங்களை ஈர்ப்பார்கள் என்று நம்புகிறேன். படித்துவிட்டு விமர்சனம் செய்யுங்கள், காத்திருக்கிறேன்.

அன்புடன்
**லதா சரவணன்.**

lathasharn@gmail.com,
sharnlatha@yahoo.com

தேவியின் கண்மணி

லதா சரவணன்

ரூ.7



# உன் பேரைச் சொல்லும் போதே...

# உன் பேரைச் சொல்லும் போதே..

"அமைதி! உலகில் பலரும் தேடி ஓடும் மூன்றெழுத்து மந்திரம். கண்ணாமூச்சி ஆடி எப்போதாவது ஒரு முறை மாட்டிக் கொள்ளும் வலைமீன்! ஆலயம் அமைதியின் உறைவிடம் என்பது இறை நம்பிக்கை கொண்டவர்களின் கருத்து! அது மறுக்க முடியாத உண்மையும் கூட! எத்தனையோ இன்னல்களையும், கவலைகளையும் மனம் கொண்டிருந்தாலும் ஆண்டவன் முன் ஒரு

விநாடி கைகூப்பி நிற்கும் தருணம் எப்பேர்ப்பட்ட மனமும் அமைதியடைகிறதல்லவா? அந்த அனுபவத்தை திரும்பவும் பெறத்தானே மனம் மீண்டும் மீண்டும் ஆண்டவன் சன்னதிக்கு வரத் துடிக்கிறது..."

ஆலய மண்டபத்தில் சொற்பொழிவாளரின் அறிவுரையைக் கேட்டுக் கொண்டிருக்கும் போதே தாயின் தோளைத் தட்டி, "கிளம்புவோமா அம்மா"... என்று கேட்டாள் வர்ணிகா!

"ஏண்டி! உனக்கு இத்தனை அவசரம் நீ போய் பிரகாரம் சுத்து. இன்னும் கொஞ்ச நேரத்தில் முடிந்து விடும்". சிறு கெஞ்சலோடு தாய் மறுபடியும் திரும்பிக் கொள்ள, சரிந்த துப்பட்டாவை சீராக்கி நகர்ந்தாள்.

அடிக்கடி வரும் கோவில்தான் என்றாலும், மாதத்திற்கு இருமுறை யாரேனும் உபாசகர் கொண்டு சொற்பொழிவு நடத்துவது வழக்கம். அம்மா தவறாமல் ஆஜராகி விடுவார்கள். முன்பெல்லாம் படிப்பைக் காரணம் காட்டி மறுத்து விடுகிறவள். இப்போது கல்லூரிப் படிப்பு முடிந்து வீட்டில் இருப்பதால் வர வேண்டிய கட்டாயம்.

என்னதான் காத்துக் கொள்வதாய் காட்டிக் கொண்டா

## லதா சரவணன்



லும் கோவிலுக்கு வருவது அவளுக்குப் பிடித்தமான ஒரு விஷயம் தான்! சொற்பொழிவு முடிய எட்டு மணி ஆகி விடுவதால் அம்மாவைத் தனியே விடவும் மனமின்றி காத்து இருந்தாள்.

நாகர் சிலைக்கு அருகில் கை கூப்பி வணங்கும் பாவனையில் ஒரு கால் மண்டியிட்டு நின்ற அந்த கை உடைந்த சிலையின் அருகில் வந்தாள்.

கவனிப்பாரற்று தூசு படர்ந்து போய் இருந்தது அச்சிலை. ஆனால் அதன் முகத்தில் மட்டும் ஏதோவொரு அழகிய பொலிவு இருந்தது. இங்கு வரும் நாள் முதலே அந்த சிலையை அவள் கவனிப்பது உண்டு!

முதன் முதலாய் பார்க்கும் போதே ஏதோ ஈர்ப்பு எழ, அங்கு வரும் போது எல்லாம் அச்சிலையுடன் ஏதாகிலும் பேசுவதை வழக்கமாய் கொண்டிருந்தாள் வர்ணிகா. வியப்பு என்னவெனில் அதற்கு காஞ்சனா என்று பெயர் கூட இட்டு இருந்தாள்.

பாரு காஞ்சனா! அம்மா கூட கோயிலுக்கு வந்தாலே இப்படித் தான் தாமதமாகி விடும். ஆமாம், இன்று கோவிலில் ஏதாவது ருசிகர சம்பவம் நடந்ததா? சிலையிடம் மாறாத சிரிப்பு ஒன்று வெளிப்பட்டது- அடுத்த முறை வரும்போது உனை சீர்செய்து துடைத்து வைக்க சொல்ல வேண்டும். சிலையின் கண்கள் உயிர்ப்பெற்று அசைவதைப் போல் இருந்தது.

சன்னமான குரலில் அவள் சிலையுடன் பேசிக் கொண்டு இருந்ததைக் கண்டு நகைத்தன. இரண்டு விழிகள். ஆனால் தன்னையும் மீறி அவ்வாறு இளநகை புரிந்ததே தவறென்று மனம் சாடிட உடனே அவ்விடம் விட்டு நகர்ந்தன நெடிய கால்கள்.

அதற்குள் பரிமளாவின் குரல் கேட்கவும் சிலையிடம் விடை பெற்று இவளும் நகர்ந்தாள். நல்லவேளை கிளம்பிட்டீங்க. ஆனா நேரமாயிடுச்சு. இதே அர்ச்சனை வீட்டிலே அப்பாகிட்டே கேட்கப் போகுது பாருங்க!

இவ ஒருத்தி! கூட்டத்தினை விலக்கிக் கொண்டு மீண்டும் ஒரு முறை அன்னையை நோக்கி கரம் குவித்து நமஸ்கரித்து விட்டு வெளியே வந்தனர்.

"பரிமளாம்மா!" அர்ச்சகர் தன் குடுமியோடு வியர்வை பெருகிய உடலை வெண்மையான டவல் கொண்டு மூடியபடி வந்தார்.

"சொல்லுங்க சாமி!"

"நாளை மறுநாள் சனிப்பிரதோஷம். மற்ற பிரதோஷங்களை விடவும், சனிப்பிரதோஷம் நூறு பிரதோஷத்திற்கு சமம். நீங்க போன முறையே பூஜைக்குண்டான செலவுகளையெல்லாம் ஏற்றுக் கொள்வதாய் சொல்லியிருந்தீர்கள்.

"ஆமாம் சாமி, நல்ல வேளை ஞாபகப்படுத்தினீங்க. வர்ணிகாம்மா!" என்றதும் தன் கைப்பையை அம்மாவிடம் திணித்து

விட்டு. ''நீங்க கொடுத்திட்டு வாங்க நான் போய் வண்டியை எடுக்கி றேன் ''என்று நகர்ந்தாள்.

இளம் மஞ்சள் நிற சல்வாரில் கற்கள் கொண்டு வேலைப்பாடு செய்யப்பட்டு இருந்தும், தோளில் புரண்ட கூந்தலில் ஒற்றை மஞ் சள் ரோஜா, காதுகளில் அசைந்திடும் பேஷன் அணிகலன், திராட்சை கண்களும், செர்ரி பழமென சிவந்த உதடுகளும், எலுமிச்சை நிறமும் பார்ப்போரை சுண்டி இழுக்கும் அழகு உடையவள் வர்ணிகா.

தமிழ் மீது கொண்டுள்ள பற்றால் தமிழ் இலக்கியம் பயின்றவள். காற்றில் பறந்த துப்பட்டாவை இழுத்துக் கட்டியபடி வண்டியைத் திருப்பிட, அத்தெரு ரோமியோக்களில் ஒருவன் ''டேய் அங்கே பாருடா மச்சான் மாம்பழம் மாதிரி இருக்கா? ம்...! எவனுக்கு கொடுத்து வச்சிருக்கோ?''

''மெதுவா பேசுடா மச்சி! ஆளு சரியான ராங்கிக்காரி, போனவா ரம் இதே தெருமுனையிலே நம்ம சேகர் இவகிட்டே நல்லா வாங்கி னான்.

''இவதானா அது!? என்டா என்கிட்டே முன்னாடியே சொல் லலை, பொம்பிளை அவளுக்கு இத்தனை திமிரா? ''அவர்கள் பேசி யபடி இருக்கும் போதே வர்ணிகா அவன் புறம் சென்றாள்.

''சொன்னா? என்ன பிரதர் செய்திருப்பே?'' இந்த நேரடிக் கேள் வியை எதிர்பார்க்காத அவர்கள் பதில் பேச முடியாமல் திகைத்தனர். ''பேசுங்க பிரதர்? என் முதுகுக்கு பின்னாடி அத்தனை பேசுனீங்க? இப்போ நானே நேரில் வந்து நிக்குறேன் அமைதியா இருக்கீங்க?''

''அது வந்து நீங்க என் நண்பனை ...

''நான் தான் அடிச்சேன்..''

''அதெப்படி ஒரு ஆம்பிளையை அடிக்கலாம் நீ?''

''ஆம்பிளைக்கு அர்த்தம் தெரியுமா? உனக்கு?

மீசை முளைச்சிட்டதாலோ, உடல் வலிமையினால் மட்டும் அது நிரூபிக்கப்படாது. உன் துணிவு பிறரைக் காக்கத்தான் இருக்கணும். கவுக்க இருக்க கூடாது. பார்க், பீச்சுன்னு தொடங்கி கடைசியிலே கோயில்லேயும் உங்க கமெண்ட்டுகளை தொடங்கிட்டா எப்படி?

இருந்தாலும்... அடிச்சிருக்க வேண்டாம்...!

மயிலே மயிலேன்னா இறகு போடதே. அன்னிக்கு வாங்கினதுல அவன் இப்போ வரலை பார்த்தியா?''

''மேடம் பிளீஸ் நீங்க போங்க அவன் ஏதோ தப்பா பேசிட் டான்!''

அவர்கள் அவசரமாய் கலைய இவளும் வண்டியருகில் நின்ற தாயிடம் வந்தாள்.

''ஏண்டி உன் வம்பை கோயில்லேயும் துவங்கிட்டியா?''

''வம்பில்லைம்மா! ஒரு கேள்வி கேட்டான் .. பதில் சொன் னேன்.''



''என்ன கேள்வி?''

''இதெல்லாம் வயசுப்பிள்ளைங்க சமாச்சாரம்! உங்களுக்கு ஏன்? பேசாம வண்டியிலே ஏறுங்க!''

''கழுதை உனக்கு வர வர வாய் ரொம்ப நீளம். எல்லாம் உங்க அப்பா ரொம்ப தர்றார் செல்லம்!'' வழியில் குட்டி விநாயகர் கோவில் வரவும் பரிமளா கன்னத்தில் போட்டுக் கொள்ள வர்ணிகா சிரித்தாள்.

''ஏன்டி சிரிக்கிறே?''

''கோவில்லதான் இத்தனை நேரம் சாமி கும்பிட்டீங்க? போதாதா? சந்து பொந்துலே இருக்கிறே விக்கிரகத்தை கூட விடறதில்லையா?'' ''பக்தி கொண்ட மனசு பெரிசு சின்னதெல்லாம் பார்க்காது வர் ணிகா.''

''அய்யோ அம்மா ரோட்டோரமா நம்ம ஆளுங்க பண்ற சுகாதா கேட்டை தாங்க முடியாமத்தான் ஒரு தெருவுக்கு நாலு கோவில் முளைச்சி இருக்கு. கடவுள் மேல நம்பிக்கையில்லாதது மாதிரியே பேசுறியே?''

''நம்பிக்கை மனசிலே இருக்கு 10 மணி நேரம் கோவில்ல இருந் தாத்தான் கடவுள் அருள் புரிவான்னு இல்லே, 10 நிமிஷம் கண்மூடி வணங்கினாலே போதும்.''

''அப்போ நான் செய்வதெல்லாம் பிரார்த்தனை இல்லையா?''

வண்டியை ஸ்டாண்ட் போட்டபடியே ''நான் அப்படி சொல்ல லம்மா?'' என்றாள்.

அதற்குள் ஜெயராமன் வந்து ''என்னப் பரிமளா இவ்வளவு தாம தம்?''

''கோவில்ல விசேஷங்க? ஏன் என்னாச்சு?''

''ராமநாதன் வந்திருக்கான்?''

''யாரு? சென்னையில் உள்ள வங்க நண்பரா?''

''ம்..''

''என்ன திமர்னு?''

''இவர் தான் என்னை தூங்கு மூஞ்சியாக்கினவர்''

''எப்படி?''

''வேலை வாங்கி கொடுத் தவர் அவர் தானே?''

-பி.பாலாஜி கணேஷ், சிதம்பரம்.



''தெரியலை ஆனா ரொம்பவும் சோர்ந்து தெரியறான். நீயா எதையும் கேட்க வேண்டாம். அவனா பேசட்டும்!''

''யாருப்பா வந்திருப்பது?''

''என் நண்பன் ராமநாதன், வா உன்னைத்தான் முதலில் அறிமுகப்படுத்தணும்.''

நடுத்தரமான அந்த வீட்டின் ஹாலைக் கடந்து அடுத்த அறையை அடைந்தனர். சற்றே வழுக்கை கொண்ட தலையும், பிரேமிட்ட கண்ணாடியுமாய் உயரமான அந்த மனிதர் அமர்ந்து இருந்த விதம் கம்பீரமாய் இருந்தாலும், சிரிப்பில் மெல்லிய சோகம் இழையோடியது போல் தோன்றியது வர்ணிகாவிற்கு!

''வாங்கண்ணா... வாங்க''

''இப்போதான் வழி தெரிஞ்சுதா? நலம்தானே...!''

''ம்... நீங்க எப்படி இருக்கீங்க.''

''ஜெயா இது உன் மகதானே என்னமாய் வளர்ந்திட்டா?''

''வணக்கம் அங்கிள்?''

''வணக்கம்மா! உன் மக ரொம்பவும் அழகுதான்.''

''நீங்க மட்டும் என்ன அங்கிள், வயசுதான் ஏறுதுன்னா பர்சனாலிட்டியும் போட்டி போட்டி போகுதே!''

''ஏய்? என்னடி பெரியவங்கன்னு மரியாதை இல்லே? அண்ணி, பிள்ளைங்க எல்லாம்...''

''நலம் தான்ம்மா..?''

''ஏம்மா? வர்ணிகா அம்மாவை என்ன பண்ணின இத்தனை கோபமா இருக்கா? இன்னைக்கு கோயிலில் இருந்து சீக்கிரமா கூட்டிட்டு வந்திட்டேன் அதான்! எதுக்கு வேஸ்டா நேரத்தை செலவிடணும்?''

''ஆமாம்மா... உன்னையும் உங்க அப்பாவையும் மாதிரி கால்ல வெந்நீர் ஊத்திகிட்டா வரமுடியும்.'' பிரிட்ஜில் இருந்த ஆரஞ்சுப் பழச் சாற்றை டம்ளரில் வார்த்து விநியோகித்தாள் பரிமளா!

''அம்மா பக்தி தானா வரணும். தம்பட்டம் அடிக்க கூடாது. இம்மாதிரி இடைத்தரகர்கள் மூலம் பக்தி வளருதோ இல்லையோ கலகம் வளருது. இன்னைக்கு அர்ச்சனைக்கு கொடுத்த பணத்தை நாலு ஏழைப் பிள்ளைங்களோடு வயிற்றுப் பசியைத் தீர்க்கலாமே!''

''நல்ல பேசுறேம்மா...'' ராமநாதன் அவளைப் பாராட்ட...!

''நீங்க வேற பாராட்டுறீங்களா? ஏற்கனவே உங்க நண்பர் ரொம்பவும் செல்லம் கொடுத்து கெடுத்து வச்சிருக்கிறார். ஆண் பிள்ளை மாதிரி எதிலும் மூர்க்கம், அசட்டு தைரியம்.''

''இந்தக் காலத்துப் பிள்ளைங்க எத்தனை வேகமாக இருக்காங்களோ? அதே நேரத்தில் விவேகமாகவும் இருக்காங்க? ''

''கரெக்டா சொன்னீங்க அங்கிள்!''

''அம்மா எப்பவுமே இப்படித்தான். நீங்களும் அப்பா மாதிரியே அழகா பேசுறீங்க?''

''சரிண்ணா...நீங்க பேசிட்டிருங்க. நான் சமையலை முடிச்சிட்டு... வந்திடறேன்.'' பரிமளா நகர, ''ஜெயா நாம ரெண்டு பேரும் ஒரு வாக் போகலாமா? ''என்றார் ராமநாதன்.

''நாளைக்கு ஆபீஸ் லீவு சொல்லிடணும் இன்னா ஒரு சின்ன வேலை இருக்கு முடிச்சிர்றேன். நீ நம்ம வர்ணிகாவை கூட்டிட்டு போயேன். இன்பேக்ட் நல்ல பேச்சுத் துணையா இருக்கும்.''

ராமநாதன் தலையை அசைக்க வர்ணிகா உடனே தயாரானாள்.

மகளும் நண்பருமாய் கிளம்பிட பரிமளா கணவரை வியப்பாய் பார்த்தாள். ''என்னங்க முன்னமே நாளை லீவு போடுவதாய் தானே பேச்சு. ஆனா திடீரென மாத்தி பேசி அவன் கூட ஏன் வர்ணிகாவை அனுப்பினேன்னு கேட்குறியா?''

பரிமளா தலையசைக்க ''அவன் கிட்ட நான் வந்ததுமே பேசினேன்மா..? பெரியவன் சித்தார்த்தனுக்கு தன் உறவிலே பெண் ஒருத்தியை கல்யாணம் செய்ய முடிவு செய்து இருக்கான். ஆனா என்ன காரணமோ அந்த கல்யாணம் நின்னுட்டுது. அவனே கல்யாணமே வேண்டாம்னுட்டு சொல்லுறாம்மா...''

''கலாவிற்கு அதிக நடமாட்டம் இல்லையா? கவலையே உருவாய் வந்து இருக்கான். இது புரியாமல் நீ ஏதாவது கேட்டிடுவியோன்னுதான் நான் போகலை. வர்ணிகா கூட பேசினால் அவன் மனம் சமாதானம் அடையும். ''

கணவரின் பேச்சு புரிய பரிமளாவும், தலையசைத்து விட்டு சமையலை கவனிக்க புறப்பட்டாள்.

2

''ஏன் அங்கிள் பேசாமலே வர்றீங்க?''

''என்ன பேசலாம்னு யோசிக்கிறேன். இந்தக் காலத்து புள்ளைங்களுக்கு பழைய விசயங்களை அலசுதல் பிடிக்காதே.'' ''நான்

''என்னங்க நம்ம மகன் வேலைக்காரியோட ஓடிட்டாங்க!''

''சரி விடு அவனாவது வாய்க்கு ருசியா நல்லா சாப்பிடட்டும்''

-பி.கவிதா, சிதம்பரம்



கோவில் பற்றி பேசினதை சொல்றீங்களா?

அங்கிள் எனக்கும் பக்தி உண்டு. பட்டையா விபூதி பூசிக்கிறதுக்கும், மணிக்கணக்காக கோவிலில் விழுந்து கிடக்கிறதும், பூஜை, புனஸ்காரம்னு செலவு பண்ற பணத்தை ஆதாவற்றவங்களுக்கு தரலாமே?'' ''ஆனா பக்தி வரும் போது இதையெல்லாம் அடங்குதேம்மா?'' ''அங்கிள் பழைய பூஜை முறையில் கூட ஆதி காலத்தில் வேடன் இறைவனுக்கு இறைச்சியைத்தான் படைத்தானாம். வழிபாடு முறை எல்லாம் மனிதனால் தான் உண்டானது. எந்த கடவுளும் உடலை வருத்தி பிரார்த்தனை செய்ய சொல்ல வில்லையே?.'' ''உண்மைதான். அதிலும் நம்ம ஜனங்களோட பக்தியைப் பற்றி ஜென்னில் ஒரு கதை உண்டு.

கடவுள் கிட்டே ஒரு துறவி இறைவா நீ ஏன் மனிதர்களுக்கு நிம்மதியான வாழ்வை தரலேன்னு கேட்டாராம். அதற்கு கடவுள் ஒரு நாள் முழுவதும் என் சந்நிதியில் இருந்து பார் பதில் கிடைக்கும் என்று சொன்னாராம். மறுநாள் இரவு கடவுள் அவர் முன் தோன்றி பார்த்தாயா? மனிதர்கள் என்னிடம் பணம் வேண்டாம், புகழ் வேண்டாம் என்றுதான் கேட்கிறார்களே தவிர யாராவது ஒருத்தர் நிம்மதியான வாழ்க்கை வேண்டும் என்று கேட்கவில்லையே என்றாராம். யோசிக்க நம்ம ஆளுங்க.. பக்தியும், பயத்தையும் போட்டு குழப்பறாங்க.

உன் கிட்ட பேசினா மனசு லேசாயிடுச்சு. வர்ணிகா, ரொம்ப தூரம் நடந்துட்டோமோ? வா வீட்டிற்கு போவோம். ''ராமநாதனின் மனதினில் ஒரு புதிய எண்ணம் தோன்றியது. அதைப்பற்றி பேசி நண்பனிடமும் அவன் மனைவியிடமும் அனுமதி கேட்க விரைந்தார் ராமநாதன்.

ஒருவன் தன்னுள்ளே அமைதியை காணாத போதுதான் அதை வெளியில் தேடுகிறான். இன்பமும், துன்பமும் நமக்குள்ளே தான் இருக்கின்றன என்று உணர்ந்தால், கவலைகள் அலைக்கழிக்காது. அப்படித்தான் மனதில் உள்ள குழப்பத்திற்கு ஒரு தீர்வு தேடித்தான் ராமநாதனின் மனம் தூண்டியது. ஆனால் அதற்கு தீர்வு நண்பனின் மகன் என்றுதான் தோன்றியது. சில நிகழ்வுகள் அப்படித்தான். ஏன்? எதற்கு? என்று காரணம் புரியாமல் போனாலும் அதைப்பற்றி சொன்னவே மனம் துடிக்கும். வர்ணிகாவுடன் மேலும் இரண்டு நாட்களில் அரசியல்,சினிமா, புத்தகம் வாசிப்பு, இலக்கியம் என சகலமும் அலசிய பிறகு அவர் முடிவே பண்ணிவிட்டார்.

வர்ணிகாவை தன்னுடன் அழைத்துச் செல்வதென்று நண்பனிடம் அதைப்பற்றி பேசிட தக்க தருணம் பார்த்து இருந்தார். சற்றைக் கெல்லாம் வர்ணிகாவின் செல்போன் அலறியது. சொல்லடி என் இதயம் என்று ..!

''ஹலோ''



''காலையிலேயே முகூர்த்தம்! பயந்து செத்துக்கிட்டு இருக்கேன். நீ என்னடி பண்றே! டோண்ட் வொர்ரி. நாளை நாளும், ரவியும் அங்கே இருப்போம். எல்லாம் நாம் திட்டமிட்டபடிதான் நடக்கும். மாப்பிள்ளை எப்படி இருக்கார்.'''' அவருக்கென்ன..? எனக்குத்தான் பக்கத்திலே நிக்கவே புடிக்கலை. ஒருநாள்தான் அட்ஜஸ்ட் பண்ணிக்கோ. சரிடி ரொம்ப நேரம் கண் விழிக்காதே? கல்யாண பொண்ணு ஜொலிக்க வேண்டாமா?''

''இன்டலா?''

''இல்லை கல்யாணப் பெண்ணே குட்நைட் ..'' இணைப்பை துண்டித்து விட்டு படுத்தாள்.

மண்டபம் களைகட்டி இருந்தது. வாசலிலேயே பிரமாண்டமான வண்ண வண்ண பூக்கள் கொண்டு மணமக்களின் பெயரும், திருமண தேதியும் அமைக்கப்பட்டிருந்த அட்டை ஜொலிக்க, பட்டுடுத்தி நகைகள் அணிந்து, சந்தனமும், பன்னீரும் குழைத்து காத்திருந்த பெண்கள்.

நெடுநாளைய உறவுகளை சந்தித்து தாங்கள் கவலைகளை மறந்து இன்புறும் மனிதர்கள் என இடமே கலகலப்பாய் இருந்தது. நாற்காலிகள் வரிசையாக அடுக்கப்பட்டு இருக்க, ரவி ஒரு மூலையில் படபடமாய் அமர்ந்து இருந்தான். கண்கள் மணமகளின் அறை வாசலிலேயே பார்த்து இருந்தது.

''என்னடியிது? பாவி இது கல்யாணப் பொண்ணு சந்தோஷமா முகத்தை வச்சிக்கிட்டு இல்லாம இப்படி இருக்கியே?''

''முகூர்த்தம் நெருங்கிடுச்சி. ரவி இன்னும் வரலை?''

''வரலைன்னு யார் சொன்னது. வெளியேதான் காத்திட்டுருக்கான்.''

''உண்மையாகவா வர்ணி எல்லாம் நல்லபடியா நடக்குமா?''

தோழியின் கைகளை பற்றியபடி கேட்டாள்.

'யாம் இருக்க பயமேன்' டயலாக் நல்லாதான் இருக்கு.

''தொண தொண பேசாம மூஞ்சிய சிரிச்ச மாதிரி வைய்! ''

அப்புறம் ரவி பார்த்துட்டு பயந்து ஓடப்போறான்.

''நேரமாச்சு பெண்ணை அழைச்சுட்டு வாங்க'' ஐயர் குரல் கொடுக்க

தைரியமாய் வா என்று மாலதியை அரவணைச்சபடி கூட்டி போனாள் வர்ணிகா.

மணவறையில் அமர்ந்து மந்திரம் கூறினான் சேகர். நேரம் கடக்க கடக்க கண்கள் கலங்கின. மாலதிக்கு. மாப்பிள்ளை அவளைக் கண்டு புன்னகைத்தான். மாங்கல்யம் எல்லோராலும் ஆசிர்வதிக்கப்பட்டு மணமேடைக்கு வந்தது. அதைக் கையில் எடுத்த சேகர், ஒரு நிதானித்து பின், ரவி இங்கே வாங்க என்று உரக்க அழைத்தான். அதற்காகவே காத்திருந்தவன் போல ரவியும் மேடையை நோக்கி நடக்க மண்டபமே திகைப்பில் ஆழ்ந்தது.

''என்னடா சேகரா! அவனை ஏன் கூப்பிடறே?''

மணமகனின் தாய் அலற...! ''அம்மா என்னை மன்னித்து விடுங்கள். மாலதியும் ரவியும் ஒருவரையொருவர் விரும்புறாங்க! அவளுடைய சம்மதம் இல்லாமல்தான் இந்தத் திருமணமே நடக்குது. இது தப்புன்னு தோணுது/ அதனால...''

''தம்பி அவ சின்னப் பொண்ணு நல்லது, கெட்டது எதுன்னு தெரியாது. இந்த பய ரவிக்கு நல்ல வேலையும் இல்லை. உறவும் இல்லை...''

''அங்கிள் உங்க பொண்ணை மாப்பிள்ளைக்கு தானே தரப்போறீங்க? இல்லை சொந்த பந்தத்திற்கு தானோ?''

''நீ இதிலே தலையிடாதேம்மா? பெத்தவங்க மனசு உனக்கு தெரியாது? மாலதிக்கு நல்ல வசதியான மாப்பிள்ளை பார்த்து இருக்கீங்க?, ஆனா அவரை அவளுக்குப் பிடிச்சிருக்கான்னு கேட்டீங்களா?''

''மனசை விடும்மா இப்ப இருக்கிற மன நிலையிலே வெறும் மனசை மட்டும் வைச்சிட்டு ஒண்ணும் பண்ண முடியாது''

''நம்ம திருமண பந்தமே இரு மனசோட ஒப்பந்தத்தில்தானே நடக்குது.

நம்பிக்கையும், மனசும் இருந்தா எதையும் சாதிக்கலாம். பிடிக்காத கல்யாணத்தைப் பண்ணிகிட்டு மனசை கொன்னுட்டு நடைபிணமா வாழுற வாழ்வைத்தான் விரும்புறீங்களா?

சின்ன விஷயங்களில் எல்லாம் அவ ஆசையை நிறைவேற்றி விட்டு வாழ்வின் முக்கியமான கட்டத்திலே கஷ்டப்படுத்துறீங்களே?''

''மாலதியோட இன்பத்தை அழிக்கணும்ங்கிறது என் எண்ணம் இல்லைம்மா. என் பெண்ணின் எதிர்காலம் சந்தோஷம் பற்றித்தான். அன்பும் ஆசையும் அரிசி பருப்பு வாங்கித்தராதே?''

''இப்போ உங்களோட கவலையென்ன ரவிக்கு நல்ல வேலையில்லை அவ்வளவுதானே நான் ஏற்பாடு பண்றேன்.''

அத்தனை நேரம் கூட்டத்தில் பார்வையாளனாய் கலந்திருந்த மணமகன் சேகர் பேசினான். ''ஸார்! அவங்கதான் அத்தனை உறுதியாய் சொல்றாங்களே, உண்மையில் இந்த கல்யாணத்னாலே பாதிக்கப்படப் போறது நான்தான். நானே விட்டுத் தரும் போது நீங்க அடம் பிடிப்பது நல்லாயில்லை!

மூணாவது மனுஷன் நான் அக்கறை படும் அளவிற்கு கூட நீங்க உங்கப் பெண்ணிற்காக மெனக்கெடலையே?''

''சரி தம்பி இப்போ ஆயிரம் நியாயம் தர்மம் பேசலாம். ஒரு தகப்பனா என்னோட எதிர்பார்ப்பு நிறைவேறினா மாலதியோட விருப்பத்திற்கு நான் சம்பாதிக்கிறேன்.''

''என்ன அங்கிள் இப்போ பத்திரமா எழுதித் தர முடியும்? ''

கோபமாய் கேட்டாள் வர்ணிகா!



3

எக்ஸ்யூஸ்மீ அமைதியாய் இருந்த இடத்தில் காற்றைப் போல் வேகமாய், மிருதுவாய் வந்தது அந்தக் குரல். எல்லோர் கவனமும் அவன்புறம் திரும்பியது. வெள்ளை பேன்ட், டெரிகாட்டன் ஒயிட் சட்டையில் பளிரென்று இருந்தான் அவன்.

மாநிறம், கூர்மையான கண்கள், எடுப்பான நாசி, வெள்ளை ஷர்ட்டில் கூலிங் கிளாஸ் ஒன்று குடிகொண்டு இருந்தது. ''வணக்கம் நான் மாப்பிள்ளை சேகரோட நண்பன். இங்கே நடந்ததையெல்லாம் பார்த்துகிட்டுதான் இருந்தேன்.

நான் சாப்ட்வேர் சொல்யூசன்ஸின் மேனேஜிங் டைரக்டர். என்னோட கம்பெனிக்கு பெங்களூர், மெட்ராஸ்ன்னு நிறைய பிரான்ஞ்சஸ் இருக்கு. மிஸ்டர் ரவிக்கு உங்க பொண்ணைத் தர வேலை மட்டும் தடையாய் இருந்தால் இப்பவே வேலை போட்டு தருகிறேன்.''

அவன் தீர்மானமாய் பேசியதோடு தன் முகவரி அட்டையை அவரிடம் தந்தான்.

''ஸார் இருந்தாலும்... சம்மந்தி வீட்லே? ஏன்னா இதில் அவங்க மரியாதையும் அடங்கி இருக்கே?''

''அங்கிள் அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் இன்னொருத்தரை விரும்பறேன்னு சொன்ன பிறகும் வலுக்கட்டாயமாய் அந்த பெண்ணை கல்யாணம் செய்வது தவறு. அதற்கு இந்தக் கல்யாணம் நிற்பதே மேல்!''

எல்லா குழப்பங்களும் ஒரு முடிவிற்கு வர அனைவர் முகத்திலும் ஒரு நிம்மதி பரவியது. வேறு எந்தத் தடையின்றி ரவி மாலதி திருமணம் இனிதே நடைபெற்றது.

தோழியின் கையைப் பற்றி வாழ்த்து கூறியவள், மணமகனிற்கும், அவன் நண்பனுக்கும் நன்றி உரைக்க அந்த நெடியவனைத் தேடி

''டாக்டர் எனக்கு எதை பார்த்தாலும் எமனை பார்க்குற மாதிரியே இருக்கு''

''சரி கொஞ்ச நாழி என்னை பார்க்காம திரும்பி உட்காருங்க''

-பி.கவிதா, சிதம்பரம்.



னாள். மண்டபம் வாசலில் அவன் செல்வது தெரிய வேகமாய் ஓடி வந்தாள்.

''ஸார்.. ஒரு நிமிஷம் ப்ளீஸ்...!''

குரல் கேட்டு திரும்பியவன் தன் முன்பு மூச்சு வாங்கி நிற்பவளைக் கண்டு எவ்வித சலனமின்றி பார்த்தான்.

''ரொம்ப நன்றி ஸார். கடைசி நேரத்திலே வந்து எங்களை காப்பாத்திட்டீங்க. ஐ'ம் வர்ணிகா? நீங்க? உங்க பெயர்?''

''எதுக்கு''?

ஒரு நிமிஷம் திகைத்து பின் ''பெயர் எதுக்கு கூப்பிடத்தானே?''

''அவசியம் தெரிந்து கொள்ளணுமா?''

''ஆமாம்...!'' என்றாள் அழுத்தமாய்! சித்தார்த்தன்.

''மிஸ்டர் சித்தார்த்! நீங்க பெரிய பிஸினஸ் மேனா இருக்கலாம். ஆனா உங்களை மதிச்சு ஒருத்தர் பேசும் போது சரியா பேசாம போறது நாகரிகமா?''

''நன்றி சொல்ல மட்டும்தான் உங்களை அழைத்தேன்''

திரும்பிய அவன் தோளை அழுத்தி திருப்பினான்

''மிஸ்டர் கையை விடுங்க''

''நீ பண்ணினது மட்டும் நியாயமா?''

அவள் விழிகளை உயர்த்திப் பார்த்தாள்.

''நான் என்ன தப்பு பண்ணினேன்!''

வாயிற்புறம் கூட்டம் சேர,

ஏறக்குறைய வர்ணிகாவை இழுத்துக் கொண்டு மண்டபத்தின் மறுபுறம் சென்றான்.

''உன் மனசில் என்ன பெரிய ஜான்ஸி ராணின்னு நினைப்பா? கோயில் வாசல்ல ஆம்பிளைங்கிட்டே சண்டைக்குப் போறே? உதவி பண்றதா நினைச்சிட்டு என் நண்பனோட கல்யாணத்தில் கலாட்டா செய்திட்டே?''

''புரியாத மாதிரி பேசாதீங்க? மாலதி வேறொருத்தரை விரும்பறது தெரிஞ்சும் இந்தக் கல்யாணம் நடப்பது நல்லதா?

உங்க நண்பரே காதலோட அருமையை புரிஞ்சிகிட்டு விலகிட்டாரு?''

''என்ன பெரிய காதல் அதுதான் தெருவுக்கு தெரு நாலுபேர் செய்றாங்களே?

இந்த கல்யாணத்திலே விருப்பம் இல்லேன்னா தனியே சொல்லியிருக்கணுமே தவிர, இப்படி நிறைஞ்ச சபையிலே சொன்னா அவனுக்கும் எத்தனை கனவுகள் இருந்திருக்கும்.

உன் தோழியோட வாழ்க்கையை பெரிசா நினைச்ச நீ சேகரோட பெத்தவங்களை நினைச்சியா? உறவுகள் மத்தியில் எத்தனை பெரிய தலைக்குனிவு? உங்களை மாதிரி பெண்களுக்கு எல்லாம் தன்னலம் தானே பெரிது.''



வர்ணிகாவுக்கு என்ன பேசுவது என்றே புரியலை. நன்றி சொல்ல வந்ததிற்கு இத்தனை பெரிய குற்றம் சுமத்துகிறானே?

அவன் சொல்வதிலும் உண்மை இருக்கிறதுதான். சபையிலேயே சொல்லாமல் அறையிலே சொன்னால் நியாயம் கிடைக்காமலும் போயிருக்கலாம். அதை இவனிடம் விவாதிக்க இது இடமும் இல்லை.

தகுந்த தருணமும் இல்லை.

இவள் யோசித்து நொடியில் ''உங்க நன்றி எனக்குத் தேவையில்லை. ரவிக்கு வேலை கூட என் நண்பனின் தியாகத்திற்காகத் தான்!''

சென்றவன் பின் திரும்பி வந்து,கையில் கனமான பரிசுப் பொருளைத் திணித்து விட்டு, ''இதை உன் தோழியிடம் தந்து விடு!'' என்று விடுவிடுவென்று நடந்தான்.

இத்தனை இளகியவனிடத்தில் இறுகிய கல்லாய் ஒரு இதயமா? ஏன் இத்தனை சீற்றம் என்மேல்? நல்லதைப் பாராட்டத் தெரியாத மூர்க்கத்தனம் பெற்றவனா இவன்? மேற்கொண்டு அவனைப் பற்றி யோசிக்க விடாமல் தோழியர் இருவர் வந்து இழுத்துப் போனார்கள் வர்ணிகாவை!

மாலை நேரம்!

மகிழ மரத்தின் அடியில் அமர்ந்து புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தாள் வர்ணிகா!

தன்முறையில் தோழியின் மணம் முடிந்து போய் அவளும் ஹனிமூன் போய் விட்டாள். சேகர் தன் நண்பன் சித்தார்த்தனைப் பற்றி ஓஹோவென்று பேசினான்.

தன்னிடம் அவன் நடந்து கொண்டதைப் பார்க்கும் போது சேகர் கூறிய குணமெல்லாம் இருக்குமா என்று சந்தேகமாய் இருந்தது வர்ணிகாவிற்கு. படிக்கும் புத்தகத்திலும் மனம் லயிக்கவில்லை. ராமநாதனும், ஜெயராமனும் அருகில் நெருங்கினார்கள்.

ராமநாதன் அவளின் தலையை ஆதரவாய் வருடினார்.

''வாங்க அங்கிள்!''

''ஏதாவது முக்கியமா படிக்கிறீயாம்மா?''

''அரு.ராமநாதனின் ''வீரபாண்டியனின் மனைவி'' பாண்டியர் வரலாறும், சரித்திர புகழும்!''

''நான் கூட படிச்சிருக்கேன், ஆனா இப்போ இதையெல்லாம் தேடிப்படிக்கிறவங்க குறைச்சல்!''

''அங்கிள் தமிழ் மாதிரி

இனிமையான மொழி ஏதாவது இருக்கா என்ன?

எத்தனை இலக்கியங்கள், புதினங்கள், வீரம், காதல் என்றெல்லாம் எத்தனை சுவைகள்? இதையெல்லாம் விட்டுவிட்டு, ஆங்கில பிரபலங்களை பெயர் சொல்றதுல பெருமைப்படுறவங்களை எல்

லாம் நான் மதிப்பதே இல்லை!''

''வர்ணிம்மா! அங்கிள்..!

உங்கிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேச வந்திருக்கார்!'' தந்தை பேச்சைத் தொடங்கிட, கையிலிருந்த புதினத்தை மூடிவைத்துவிட்டு ராமநாதனின் முகத்தைப் பார்த்தாள்.

''அம்மாடி! சுத்திவளைச்சுப் பேசாம நேரா விஷயத்திற்கே வந்திடறேன். எனக்கு மொத்தம் இரண்டு பிள்ளைகள். எங்களை மாதிரி சந்தோஷமா இருந்தவங்களும் கிடையாதும்மா. யார் கண்ணுபட்டுதோ! பெரியவனுக்கு சொந்தத்திலேயே பொண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிட முடிவு பண்ணினேன்

ஆனா அந்தக் கல்யாணம் நின்னுபோச்சு, அவ ஏற்கனவே ஒரு பையனை...! மணமேடைவரை வந்தக் கல்யாணம் நின்னுபோனதிலே என் மகன் கல்யாணமே வேண்டான்னுட்டான். என் மனைவி கலாவுக்கும் உடம்பு சுகமில்லாமப் போச்சு! கலகலன்னு இருந்த வீட்ல யாரும் சரியா பேசக்கூட முடியறது இல்லைம்மா. சின்னவனும் படிப்பை முடிச்சிட்டு பொறுப்பில்லாம ஊர் சுத்துறான்.

நம்பிக்கை இல்லாமத்தான் வந்தேன் ஆனா உன்னைப் பார்த்த பிறகு இழந்த என் சந்தோஷத்தை மீண்டும் பெற்றுத்தர உன்னால் முடியும்னு நம்பறேன்.''

''நீங்க சொல்ல வர்றது எனக்குப் புரியலை அங்கிள்''

''வர்ணிகா! உன்னோட இயல்பு, சுபாவம் எல்லாமே என் மனசுக்கு இதமா இருந்தது. நீ என் கூட சென்னைக்கு வந்திரும்மா!''

''நானா..! என்னால அங்கே என்ன செய்ய முடியும் அங்கிள்?''

''தன்பலம் தனக்கு தெரியாதும்மா! நீ வர்றதினால எந்த விதத்திலே பிரச்சனை தரும்முன்னு தெரியலை! ஆனா என் உள்மனசு உறுதியா சொல்லுது. உன் பேரண்ட்சும் சம்மதம் தெரிவிச்சிட்டாங்க''

வர்ணிகா பெற்றவர்களைப் பார்த்தாள் ''வர்ணிம்மா எப்படியும் நீ இப்போதைக்கு வேலைக்கு போகலைன்னு சொல்லிட்டே. இங்கே இருந்தா மாலதி மாதிரி வேறயாருக்காவது உதவுறேன்னு பிரச்சனைகளில் மாட்டிப்பேன்னு உங்கம்மா பயப்படறா. தவிரவும் இதுவும் உனக்கு ஒரு புது அனுபவமா இருக்குமே!'' தந்தை சொல்ல ஆமோதிப்பதாய் தலை அசைத்தாள் மகள்.

''அங்கிள், அப்பா சொல்வதால் மட்டும் இல்லை எனக்கும் சவாலான வாழ்வுதான் பிடிக்கும். இங்கே கழிக்கப்போற விடுமுறை ஒரு இடத்தில் கழிக்கப் போறேன். அவ்வளவுதானே! அம்மா அப்பாவே ஓ.கே. சொன்னப்புறம் என்ன கவலை எப்ப கிளம்பணும்?''

''ரொம்ப நன்றிம்மா!''

''அங்கிள் நான் செய்யும் செயல் ஆக்கப்பூர்வமாகவும், பிறருக்கு உதவும் படியும் இருக்கணும்னு நினைக்கிறவ நான். நான் நினைச்சதை சாதிப்பேன்னு தான் வர்ணிகாங்கிற பேரை வச்சிருங்காங்க! உங்க பிள்ளையைப் பற்றிய கவலையை எங்கிட்டே விடுங்க.''

ராமநாதன் ஒரு புன்னகையோடு உறங்கப்போக, இத்தனை நல்ல மனிதரின் மனதை வருத்தும் அந்த மகன் யார்? இருக்கட்டும் அவனைப் பார்த்து லெப்ட் அண்ட் ரைட் வாங்குறேன் என்ற நினைப்போடு நாவலில் ஆழ்ந்தாள் வர்ணிகா.

மாற்றங்கள் நிகழ்வது வாழ்வில் புதிதல்ல! வாழ்வின் அநேக அத்தியாயங்கள் மாற்றப்பட்ட வழித்தடங்களின் ஓரம்தானே புதிதாய் பூக்கின்றன.

வர்ணிகாவின் இந்த இடமாற்றம் அவளுக்கு சோதனைகளையும் எதிர்காலமே மாற்றி அமைக்கும் படியாகவும் அமையப் போவதை அந்நேரம் அவள் அதை அறிய வாய்ப்பில்லையே?

## 4

சென்னைக்கு வந்து இறங்கியதுமே மனம் ஒருவித லயிப்பில சடுபட்டது. தோழிகளோடு சிலமுறை சென்னை வந்து இருப்பவள்தான்! ஆனால், இம்முறை ஏனோ இனம் புரியாத ஒரு படபடப்பு தோன்றியது. அதன் காரணம் என்னவென்று புரியவில்லை.

விமானநிலையம் விட்டு வெளியே வந்ததும். ''என்ன அங்கிள் நம்மை பிக்கப்பண்ணிக்க வண்டி வரும்னு சொன்னீங்க?''

''ஆமாம்மா? பெரியவன் வர்றதா சொன்னான். அம்மாடி அவன் கொஞ்சம் முரட்டு சுபாவம் உள்ளவன்! இப்போ கொஞ்ச நாளா நடந்த பிரச்சனையாலே இன்னமும் முரட்டுதனம் அதிகமாயிட்டது- அதனால ஏதாவது பேசிட்டா மனசிலே வச்சிக்காதே!'' தயக்கத்தோடு அவர் பேசிட.

''எங்க ஹோட்டல்ல இருக்கிற சர்வர் எல்லாம் ரொம்ப சகஜமா பழகுவாங்க...''

''சரி அதுக்காக பாக்கெட்டுல கையை விட்டா டிப்ஸ் எடுக்குறது''

-பி.கவிதா, சிதம்பரம்



தான் வருவது அந்த முதல் மகனுக்குப் பிடிக்கவில்லையென்பதை உணர்ந்தாலும், அவர் முன்பு அதை காட்டிடாமல்

'' இதெல்லாம் நீங்க சொல்லணுமா அங்கிள்? நான் பார்த்துக்கறேன். எனக்கு கழுதை பொறுமை, ஆமா உங்க மகனுக்கு நான் வர்றது தெரியுமா?''

அவர் எச்சரிக்கையுடன் ''இன்னமும் வீட்டில் விவரமா சொல்லலைம்மா?''

''அப்போ இன்னைக்கு ஒரு குட்டிபோர் இருக்குன்னு சொல்லுங்க''

ராமநாதன் சிரித்தார். ''நீ போய் வெளியில் வெயிட் பண்ணும்மா. நம்ம கார் நம்பர் டி.என்.02-3026 ஒயிட் இண்டியா'' என்றார். ''நான் லக்கேஜ் கலெக்ட் பண்ணிட்டு வந்திடறேன்''என்று நடக்க இவள் வெளியே வந்தாள்.

இரண்டு கார்களுக்கு இடையில் வெள்ளை நிற இண்டிகா டி.என்.02-3026 சொருகி வைக்கப்பட்டு இருக்க. துள்ளலோடு நடந்தவளின் துப்பட்டா காற்றில் பறந்து அருகில் வந்த அந்த ஆடவனின் முகத்தில் அலையாக படர்ந்துவிலக...

'' அச்சச்சோ ஸாரி ஸார் இந்தக் காத்து!'' என்று ஆரம்பித்தவள் தன்னை மறந்து அவனைக்கண்டதும் ''அச்சச்சோ விசுவாமித்ரன்!'' என்றாள்.....

''ஏய்? என் பெயர் சித்தார்த்தன்''! என்றான் முகம் கடுகடுக்க,

''சந்தோஷம்! ஆனால், இப்போது நான் உங்கள் பெயரைக் கேட்க வேண்டிய அளவுக்கு அவகாசம் இல்லை. சாவகாசமாய் இன்னொரு நாள் கேட்டுக் கொள்கிறேன்.''

''ரொம்பவும் திமிர் உனக்கு, ஆம்பிளைப் பிள்ளைன்னு கூட தோணாம பேசாம வாய்க்கு வாய் எதிர்த்துப் பேசுறே? துப்பட்டாவை பறக்காம வச்சுக்கிறதுக்கு என்ன?''

''காத்து பலமா வீசினதால நடந்ததுன்னு பேசாம போவீங்களா? அதை விட்டுட்டு?...,!''

''உங்கிட்டே போய்வாய் கொடுத்ததுக்கு என்னை?...!''

''ஸாரி.. அதெல்லாம் நான் சொல்ல முடியாது. என்கிட்டே சண்டை போடறதை நிறுத்திட்டு வந்து வேலையை கவனிங்க, நான் முக்கியமான ஒருத்தரைத் தேடணும்.''

''என்ன முக்கியமான ஆளு? உன் லவ்வர்தானே..! உன்னை மாதிரி பொண்ணுங்களுக்கு எல்லாம் இதுதானே வேலை?''

''ஆமா ஸார், ஆனா ஒரு சின்ன திருத்தம் அவர் என் லவ்வர் இல்லை. எங்கள் அங்கிள் பையன்! இருந்து பார்த்துட்டுப் போங்க, சிரிச்ச முகமா எப்படி இருக்கிறதுன்னு சொல்லித் தருவார்''

அவன் ஏதோ மறுத்துப் பேசுவதற்குள் ராமநாதன் வந்துவிட,

''வா சித்தார்த் கொஞ்சம் லேட்டாயிடுச்சு போவோமா?''



'' பரவாயில்லைப்பா போகலாம்..!''

''ம்...'' தலையசைத்து கிளம்பியவர் சிலை பிடித்தாற்போல் நின்றிருந்த வர்ணிகாவின் தோளைத்தட்டி'' வாம்மா போகலாம்'' என்றார்.

சித்தார்த்தன் கேள்வியோடு தந்தையை நோக்கினான். ''இதுதான் என் நண்பன் ஜெயராமனின் மகள் வர்ணிகா''

''வர்ணிகாம்மா இது என் மகன் சித்தார்த்தன்.''

''ஆனா மேடம் யாரோ அங்கிள் வீட்டிற்குப் போவதாய்..!''

''நம்ம வீட்டிற்குத்தான் வர்றாப்பா?''

வர்ணிகாவிற்கு ஒருகணம் எதும் புரியவில்லை. கடவுளே இருந்திருந்து இவனிடமா வம்பளந்தேன். இன்னமும் போகப்போக என்னாகுமோ?

அவளின் யோசிப்பை உணர்ந்தவன் போல், ''உங்க நண்பரின் மகளுக்கு மரியாதையே தெரியாதோ? யாரோ எதையோ பார்ப்பது போல் திகைத்து நிற்கிறாளே?''

அவன் திகைத்து நின்றதைப் பார்த்து ஏளனம் செய்கிறான் என்பதை உணர்ந்து '' வணக்கம் ''என்று கரம் குவித்தாள் அடக்கமாய்!

''ம்.. '' வேறு வழியின்றி அவனும் கைகூப்பினான் '' தம்பி வீட்டில் போய் மீதியை பேசிக்கலாமா?'' தந்தை கேட்க, மூவரும் காருக்குள் அமர்ந்தனர்.

சித்தார்த்தன் காரைக் கிளம்பினான். அவள் முகம் இறுகிப் போய் இருந்தாலும் கண்களில் ஏதோ அசாத்திய ஒளி தோன்றியது. ஆனால் அது நல்லதிற்கா கெட்டதிற்கா என்று புரியவில்லை. வர்ணிகாவிற்கு!

அழகான பெரிய வீடு! பெரிய கிரில் கேட்டைக் கடந்து வீட்டை அடையவே ஒரு நிமிட பயணம் தேவையாய் இருந்தது. சுற்றிலும் தோட்டமும், பூங்காவுமாய் சில பறவைகள் வேறு மாலை நேரமாகையால் ரம்மியமாய் இருந்தது. ஆனால் இதை முழுமையாய் ரசிக்கும் மனம்தான் அவளிடம் இல்லை.

''வாம்மா!'' வா...... தந்தை உள்ளே தாயைப் பார்த்து விவரம் சொல்ல சென்றுவிட தயங்கியபடி நின்றவளிடம், ''ஏன் ஆரத்தி எடுக்க வேண்டுமா? ஆளை அழைக்கவா'' என்றான்

''தோட்டம் அழகாய் இருக்கிறது'' என்று சமாளித்தபடியே உள்ளே நுழைந்தாள்.

நல்லவேளை மேற்கொண்டு ஏதும் கேள்வி கேட்காமல் தந்தையிடம் சென்றான் தனயன்.

''அப்பா நீங்க செய்யறது நல்லதாப்படலை! உங்க நண்பரின் மகள் இப்போ இங்கே வரவேண்டிய அவசியம் என்ன?''

''டேய் மெதுவா பேசுடா அந்தப் பொண்ணு காதிலே விழுந்திடப் போகுது''

''விழட்டும் எனக்கு அதைப்பற்றி கவலை இல்லை''

''உனக்கு எதைப்பற்றித்தான் கவலை?''

''அப்பா...!''

''நம்ம வீடு எத்தனை கலகலப்பாய் இருக்க வேண்டியது. என்றோ ஒருநாள் நடந்த சம்பவத்திற்காக இரண்டு வருடமாய் நீ காக்கும் விரதம் என்னையும், உன் அம்மாவையும் வருத்துவது உனக்குப் புரியவில்லையா?''

''அதுக்கும் இதுக்கும் என்னப்பா சம்பந்தம்?''

''தம்பி, நீ வேலை வேலைன்னு போயிடறே? இளங்கோ பாதி நாள் வீட்டில் தங்கறதே இல்லை.? கவலையில்லாம பேரன் பேத்திகளை கொஞ்ச வேண்டிய வயசுலே நாங்க தனிமையில் வாடறோம். வர்ணிகா அற்புதமான பெண். கொஞ்ச நேரம் அவளோட துடிப்பான பேச்சைக் கேட்டாலே, எல்லா கவலையும் மறந்து போகும்.''

''போனமுறை அம்மாவைப் பார்த்த டாக்டர் என்ன சொன்னார்? உடலை விடவும் மனக்கவலைதான் பாதிச்சிருக்குன்னு சொல்லலை. எங்க கவலைக்கு அவ வருகை மருந்து போல.!''

''அவளுடைய அன்பும் பேச்சும் எங்களுக்கு ஆறுதலா இருக்கும். உனக்குப் பிடிக்கலைன்னா நீ அவகிட்டே பேச வேண்டாம்.''

'' அதுக்கில்லைப்பா அவ ஒரு வயசுப் பொண்ணு இங்கே தங்க வைப்பதால்..!''

''ஒரு பிரச்சனையும் வராது. அதான் நானும், அம்மாவும் இருக்கோமே சித்து...!'' அவன் மவுனமாய் இருந்தான்.

''இந்த சின்ன நிம்மதி கூட எங்களுக்கு கிடைக்கக் கூடாதுன்னு நீ நினைச்சா இப்பவே அவளை அனுப்பிடறேன்.''

''வேண்டாம்!'' இறுகிய குரலோடு வெளியே வந்தவன், மீன் தொட்டியில் மீன்களை ரசனையோடு பார்த்தவளிடம் சென்றான். தொண்டையைக் கனைத்தான்.

''ம்.. '' என்றாள்.

''நீ புத்திசாலிதான் அத்தனை தூரம் பேசியதற்கு பயங்கர கோபமாய் இருந்தேன்.''

'' நீங்க கோபப்படாம இருந்தால் தான் அதிசயம். அதுசரி பாராட்டு எதற்கோ?''

''என்னையே உன் முன்னால் கை கூப்ப வைத்து விட்டாயே அதற்கு. நீ எப்படி விஷ்பண்ணினாலும் சின்ன தலையசைப்போடு நகர்ந்திருப்பேன். ஆனால் கை கூப்பி வணக்கம் சொல்லும்போது பதில் வணக்கம் செலுத்தாதது பண்பில்லையே?''

''உங்களுக்கே தொடர்பில்லாத விஷயங்கள் பற்றியெல்லாம் பேசுகிறீர்கள்''

''இந்த வாய்த்துடுக்கையெல்லாம் குறைத்துக் கொண்டு இரு.''

''உத்தரவு'' என்றாள் வாய் பொத்தி!

'' உன்னைப் போல் நல்ல பெண் என்றுபோற்றி புகழ்கிறார்



அப்பா.'' சலித்துக் கொண்டு நகர்ந்தவளைக் கண்டு புன்னகைப் பூத்தாள் வர்ணிகா.

'' என்ன வர்ணாம்மா மிரட்டுகிறானா?''

''ம்... அவரை விடுங்கள் அத்தையும் இளங்கோவும் எங்கே?''

''உள்ளே தான் இருக்காங்க! வாம்மா'' இருவரும் நுழைந்தனர். அது ஹாலின் கடைசி அறை. விசாலமாய் குளிரூட்டப்பட்டு இருந்தது. அறை பூராவும் எங்கே தேடியும் தூசி துரும்பு இன்றி வெகு சுத்தமாய் இருந்தது. வெண்ணிறமான படுக்கையறை.

அருகிலிருந்த சிறு பலகையில் மருந்து பாட்டில்களும், தண்ணீர் குவளையும் இடம்பெற்று இருந்தன. அருகில் ஒரு இளைஞன் சித்தார்த்தனில் பாதி அச்சு இருந்தது.

'' வாம்மா...!'' ஈனஸ்வரத்தில் பேசிய கலா எழுந்து அமர தலையணையை முதுகிற்கு வாகாய் வைத்தபடி வசதி செய்தார் ராமநாதன்.

''வீட்லே அம்மா அப்பா எல்லாரும் நலமா!''

'' நலம் இப்போ உங்க உடம்பு பரவாயில்லையா?''

''என்னமோம்மா நானும் கஷ்டப்பட்டு இருக்கிறவங்களையும் வேதனைப்படுத்திட்டு இருக்கேன்.''

''ஏம்மா இப்படி பேசுறே?''

''விடுங்க மாமா மனசிலே இருக்கிறதை எல்லாம் வெளியே கொட்டிடட்டும் அப்போதான் பாரம்குறையும். கவலைதான் பெரிய அரக்கன் அதை அழிப்பதுதான் புத்திசாலித்தனம்''

''ஹாய் அயம் இளங்கோ!'' அதுவரையில் பேசாமல் இருந்த இளைஞன் பேசினான்.

''ஐ'ம் வர்ணிகா!'' நீட்டிய கைகளைப் பற்றிக் குலுக்கினான், அவள் கையைக் காட்டிலும் இளங்கோவன் கை மென்மையாய் இருந்தது.

''நானும் அப்பா என்னை உங்களுக்கு அறிமுகப்படுத்தி வைப்பாருன்னு பார்த்தேன். கண்டுக்கவே இல்லை. அதனாலே நானே...!''

''இவனும் உன்னைப் போலம்மா நிறைய பேசுவான். ஆனால்

''உன் அழகைப் பார்த்து ரொம்ப உருகிட்டாரா''

''யாரு டி?''

''வெண்ணெய் வியாபாரி மகன் டி!''

-பி.கவிதா, சிதம்பரம்.



உன்போல சமுதாய கருத்து இருக்காது.''

''எங்கப்பா நிறைய பொய் சொல்லுவார். நீ எதையும் நம்பாதே வர்ணீ இல்லேன்னா பாரு ஒரு பொண்ணு வந்திருக்கான்னுதான் சொன்னாரு. அவ ரொம்பவும் கலகலப்பு அழகுன்னு சொல்லவே இல்லையே!''

வர்ணிகா அவனின் குறும்பு கலந்த பேச்சை ரசித்து சிரித்தாள்.

''அவன் சரியான வாலும்மா?!''

''பார்த்தாலே தெரியுது.''

''நீயும் அப்பா கட்சியா? கடவுளே..!''

''சரிம்மா! நீ போய் குளிச்சிட்டு ரெஸ்ட் எடு பயணக் களைப்பு தீரும்''

''என் வர்ணீ பெங்களூர்லேர்ந்து நடந்து வந்தியாயென்ன?; களைப்பு இறைப்புன்னு சொல்றார் அப்பா!''

''சும்மாயிருடா...!''

அவர்கள் பேசியபடி இருக்கும் போதே, சோமு அங்கே டிபன் காபியோடு நுழைந்தார்.

''ஆஹா என்ன சோமு அண்ணா உங்க ஸ்பெஷல் ரவா உப்புமா வாசனை மூக்கைத் துளைக்குது.''

''பெரியதம்பி ஏதோ புது விருந்தாளி வந்து இருக்காராம்? அவங்களுக்கு டிபன் செய்யணும்னு சொன்னார். இவங்க...!''

''நம்ம அய்யாவோட நண்பரின் மகள்.''

''வணக்கம்மா...'' பெரியவர் கை கூப்பினார்.

''வணக்கம் அண்ணா...!''

''வர்ணீ நீ சோமு அண்ணாவோட டிபன் சாப்பிட்டேன்னா இந்த வீட்டை விட்டு போக மனசே வராது'' சோமு வெட்கப்பட்டப்படியே சிரித்தார் ''சின்னதம்பி எப்பவும் இப்படித்தான் வாய் ஓயாம என்னை கிண்டல் செய்திட்டே இருக்கும்.''

''வர்ணாம்மா இது சோமு 20 வருடத்திற்கு மேலா இங்கேதான் வேலை பாக்குறார். எங்க குடும்பத்திலே ஒருத்தர் மாதிரி''

''உங்க மகன் வயலும் வாழ்வும் மாதிரி பேசுறான்''

''எப்படி?''

''பச்சை, பச்சையா பேசுறான்''

-பி.கவிதா, சிதம்பரம்





''நல்லவங்க வாழுற இங்கே இருக்க நான்தாம்மா புண்ணியம் செய்து இருக்கணும் கூடிய விரைவில் இங்கே ஒரு சுபகாரியம் நடத்திட்டா மனசுக்கு இதமாய் இருக்கும்'' உண்மையான உள்ளன்போடு அவர் பேசியதை கேட்டதும், இத்தனை பேரின் மனதிலும் கஷ்டம் சேர்த்த அவனை விடக் கூடாதுங்கிற எண்ணம் கொண்டாள் வர்ணிகா.

## 5

அன்றைய இரவு ஒன்றும் அத்தனை கடினமானதாய் இல்லை. ஆனால் நள்ளிரவு வரை உறக்கம்தான் வரவில்லை. மனதில் சித்தார்த்தனைப் பற்றி எண்ணங்கள் புரண்டன.

அழகன் தான், ஆனால் முகத்தில் இருக்கும் இறுக்கம் மறைந்தால் இன்னமும் இளமையாய்த் தெரிவான். ஆனால் ஏன் இந்த முரட்டு குணம். தேனாய் கொட்டினாலும் வந்திருப்பவளின் பரிவுணர்ந்து அவன் நடந்த விதம், ஒரு பெண் தன்னை மறுப்பதால் இத்தனை மனம் கலங்கி இருக்கிறான் என்றால், அந்தப் பெண்ணின் மீது அவ்வளவு காதலோ!

மெல்ல பொறாமை எட்டிப் பார்த்தது அவளிடம்! ச்சி! என்ன மனம் எனக்கு! யாரோ யாரையோ வெறுத்ததற்கு நான் ஏன் வருந்த வேண்டும்? இருந்தாலும் அழகும், அந்தஸ்தும் கொண்ட ஆண்மகனை ஒரு பெண் வேண்டாமென்று சொல்ல என்ன காரணமாக இருக்கும்? இதைப்பற்றி யாரிடம் விசாரிப்பது என்ற யோசனையில் உறங்கியும் போனாள்.

மறுநாள் காலை ஐந்து மணிக்கே முழிப்பு வந்துவிட்டது வர்ணிகாவுக்கு. இப்போது எழுந்து என்ன செய்வது? அங்கே அப்பாவும் அவளுமாய் நடைப்பயிற்சிக்கு செல்லுவார்கள். சரி தோட்டத்திலேயே உலாவலாம் என்று எண்ணியவள் முகம் கழுவி இரவு உடையைக் களைந்து ஜாகிங் உடைக்கு மாறி கீழிறங்கினாள்.

அவள் எதிர்பார்த்தது போலவே 5.45 ஆகியும் அந்த வீடு இன்னமும் கண் முழிக்காமலே இருந்தது. கலா அத்தையும், மாமாவும் வயதானவர்கள், இந்தக் காலை வேளை உறக்கம் அவர்களுக்கு முக்கியமே! ஆனால், இளங்கோவும், சித்தார்த்தனும் எங்கே? உடற்பயிற்சி செய்யும் பழக்கம் எதும் இல்லை யென்றால் ஏன் எழ வேண்டும்?

பக்கத்து அறை கதவு லேசாய் திறந்திருக்கு யார்? என்று கண்களை ஓட்டினாள். குஷன் மெத்தையில் குப்புறப்படுத்து இருந்தான் இளங்கோ, 'குழந்தைத்தனம் மாறாத வசீகர முகம், அவன் உறங்கும் விதமும் வளர்ந்த குழந்தை போலவே தோன்றியது செயலும் அதே போல்தானோ'

சிரித்தபடியே நடந்தான். செழிப்பாய், கரும்பச்சையாய் கொடிகள், இருளும் ஒளியும் கலந்த அதிகாலை பனிமையும், இலையின் மேல் உறங்கும் பனித்துளியின் சில்லிப்பு, வண்டுகளின் ரீங்காரம், என இயற்கையின் ஓவியமாய் திகழ்ந்த இடம் தனை ரசித்தவாறே நடந்தவள் வியர்க்க விறுவிறுக்க வந்தவனைக் கண்டதும் சிநேகமாய் புன்னகைத்தாள்.

''பரவாயில்லையே! வாக்கிங் போகும் நல்ல பழக்கங்கள் எல்லாம் இருக்கு போல!'' சீண்டுவது போல் ஆரம்பித்தான்.

''சிறுவயதில் இருந்தே பழகியது'' மேற்கொண்டு நடக்கப் போனான் அவன்.

''இங்கே, வந்த காரணம் உனக்கே தெரியுமா?'' நேரடியான கேள்வியில் இடறினாலும் உடனே சமாளித்தாள்.

''மாமா தான் விடுமுறையில் எங்க வீட்டுக்குவான்னு கூப்பிட்டார்.''

''சோஷியல் சர்வீஸா? இதுதான் உனக்கு வேலையா? வேற ஏதாவது பிரயோசனமான வேலை வெட்டின்னு போயிருந்தா ஹேர்பின், கிரீம், லிப்ஸ்டிக் செலவெல்லாம் மிஞ்சுமே!''

''பெண்களைப்பற்றி தெரியாதுன்னு நினைத்தேன் உபயோகிக்கும் பொருள் முதற்கொண்டு சொல்றீங்களே?''

''வெறுக்கவும் சில விஷயங்கள் தெரிந்திருக்கலாமே?''

''உண்மைதான் .... யாரோ, ஒருவர் உண்டாக்கிய மனக் காயத்தால் எல்லோரையும் வெறுப்பது எந்தவிதத்தில் நியாயம்?''

''என்னை பொறுத்தவரையில் பெண்கள் எல்லாருமே சுயநலவாதிகள்!''

''உங்களைப் பெற்றவரும் பெண்தானே!''

''நான் சொல்வது நவீனகால யுவதிகளைப் பற்றி! உதாரணமாய் உன்னைப்பற்றி உன் தோழியைப்பற்றி..!''

''தன் விருப்பத்தை ஒருபெண் தெளிவாய் உரைத்தால் அது சுயநலமா? எதிர்காலம் பற்றி அவள் தன்முடிவை எடுப்பது தவறா?''

''பிறரை பாதிக்காத வரையில்!'' அவன் கிளம்பிட, இந்தமுறை இவள் தடுத்தாள். ''நான் இங்கே வந்திருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லை தானே?''

''என்னோட விருப்பு வெறுப்பு பற்றி உனக்கென்ன கவலை?''

''நான் இங்கே வரக் காரணமே உங்க அப்பாதான். அத்தையோட உடல் நலம் பற்றி சொன்னதால நான். கவலையோட இருக்கிறவங்களை ஆறுதல் படுத்தலான்னுதான் வந்தேன்!''

''ஓ.. ஆறுதல் யாத்திரை?'' அவன் கேலி செய்துவிட்டு சென்றான். வர்ணிகாவிற்கு மனம் வலித்தது. மேற்கொண்டு நடக்க மனமின்றி, அறைக்குள் நுழைந்தாள். குளித்து உடைமாற்றி கீழிறங்கி வர சோமு காபி கொண்டு வந்து தந்தார்.



''இந்தாங்க அம்மா...!''

''நீங்க எப்போ வந்தீங்க அண்ணா?'' இப்பத்தாம்மா, வந்தேன் அம்மாவுக்கு ஹார்லிக்ஸ் கரைச்சி வச்சிருக்கேன். நீங்க குடிங்கம்மா''

''நானே அத்தைக்கு கொண்டுபோய் தர்றேன்'' சோமுவின் கையிலிருந்து அதைப் பெற்றுக் கொண்டு உள்ளே சென்றாள்.

கலா மெல்ல எழுந்து முகம் கழுவி பல்விளக்கி மெத்தையிலேயே ஆயாசமாய் அமர்ந்திருந்தார்.

''குட்மார்னிங் அத்தை'' கலா, பதிலுக்கு சோர்வாய் புன்னகை புரிய, ''பிரஷ் பண்ணிட்டீங்களா?''

''ம்...!''

''முதல்ல இந்த ஹார்லிக்ஸை குடிங்க தெம்பா இருக்கும்''

''குளிக்கிறீங்களா அத்தை?''

''மூன்று நாளைக்கு ஒருதடவை நர்ஸ் ஒருத்தங்க வந்து குளிக்க வைப்பாங்க?''

''என்னது? மூணு நாளைக்கு ஒருதடவையா? தினமும் ஒருதடவை வெதுவெதுப்பான நீரில் குளிச்சாலே உங்க உடம்பும், மனசும் தெம்பாகுமே! வாங்க நான் உதவி செய்யறேன்!''

''உனக்கு எம்மா வீண் சிரமம்''

''இதிலென்ன சிரமம் அத்தை, மனசு சுறுசுறுப்பா இருந்தாலே பாதி நோய் குணமாயிடும் முதல்ல மனசிலே இருக்கிற வலியை மறங்க. நல்லது விரைவில் நடக்கும்''

''அது உன்னைப் பார்த்தவுடனேயே எனக்கு தெரிஞ்சிபோச்சு, எப்பவுமே சுறுசுறுப்பா இருக்கிற உன்னை பார்த்தாலே தன்னாலே உற்சாகம் வந்திடுது''

வர்ணிகா பேசியபடியே, அத்தம்மாளை குளிக்கவைத்து மெல்லிய காட்டன் புடவைக்கு மாற்றி மஞ்சள்பூசி, பொட்டிட்டு, நீளமான வெள்ளி நரையோடிய கூந்தலை நுனியில் முடிச்சிட்டாள். ''போங்க

''தலைவர் இன்னிக்கு மேடையில சட்டை போடாம பேசப் போறாரே ஏன்?''

''இன்னிக்கு மேடையில என்னோட சுயரூபத்தை பார்க்கலாம்ன்னு சொல்லியிருந்தாரே...!''

-பி.கவிதா, சிதம்பரம்



கண்ணாடியில் பாருங்க! எத்தனை மங்களகரமா இருக்கீங்க. உங்களை பத்தியே நம்பிக்கை இல்லாம சோர்ந்து போய் இருந்தீங்களே.!''

'' போம்மா! ''கலா வெட்கப்பட, சோமு கொண்டு வந்த இட்லியை தேங்காய்ப்பாலில் ஊறவைத்து ஊட்டினாள்.

''ஸ்பூன்லேயே தாம்மா பரவால்ல...''

'' அத்தை கரண்டியில் சாப்பிடுவதை விடவும் கையால உணவு சாப்பிடும் போது ஒரு அன்னியோன்யம் இருக்கும். உணவு சிந்தாது ஒரு திருப்தியும் கிடைக்கும். விஞ்ஞான பூர்வமா சொல்லப்போனா, கையால உணவு உண்ணும் சமயம் கைகளுக்கு சின்ன உடற்பயிற்சியும், நம்ம விரல்களில் சுரக்கும் சில சுரப்பிகளால், தைரியமும், தன்னம்பிக்கையும் மனம் அடையும் என்று சொல்றாங்க''

அதே நேரம் சித்தார்த்தன் உள்ளே நுழைந்தான். தாயும், மகனுமாய் ஏதேனும் பேசட்டும் என்று கலாவின் வாயைத் துடைத்து சாப்பிட்ட பாத்திரங்களை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

''டிபன் சாப்பிட்டியா தம்பி?''

''ம்... ஆச்சும்மா, '' மாத்திரைப் பட்டையை உரித்து அவரிடம் நீட்டினான்.

''நீங்க ரெஸ்ட் எடுங்க நான் ஆபீஸ் போயிட்டு வந்திடறேன்.'' அம்மாவின் தலையைக் கோதிவிட்டபடி நகர்ந்தான்

ஹாலில் அமர்ந்திருந்தவளிடம் நெருங்கி நன்றி என்றான்.

''எதுக்கு?''

''ரொம்ப நாளைக்கு அப்புறம் அம்மாவோட முகத்தில் பிரகாசமும், அமைதியும் தெரிகிறது. நீ வந்த முதல்நாளே அவங்க மனசிலே இடம்பிடிச்சிட்டே!''

அவன் மௌனமாய் அவன் பேசியதைக் கேட்டுக் கொண்டாளே தவிர மறுமொழி பேசவில்லை.

''கோபமா?''

''இல்லையே? நான் இங்கே வந்தது அத்தைக்காகத்தான், உங்ககிட்டே வாதாடவும் பாராட்டுப் பத்திரம் பெறவும் இல்லை. உங்களுக்கு ஆயிரம் வேலைகள் இருக்கும். என்னிடம் பேசி உங்க நேரத்தை வீணாக்க வேண்டாம்.'' முகத்தில் எவ்வித உணர்வும் காட்டாமல் அவள் பேசி சென்றுவிட சித்தார்த்தன் முகம் மாறி வெளியேறினான்.

## 6

அலுவலகம் சென்றுவிட்டால், சித்தார்த்தனுக்கு எந்த நினைவும் வருவதில்லை. சிறியதாய் தொடங்கிய தொழில்தான் இந்த ஐந்து வருடங்களில் ஆலமரமாய் வளர்ந்து நிற்கிறது. கம்ப்யூட்டர் இன்ஜினியரிங் படித்த கையோடு துவங்கியது ஸாப்ட்வேர் சொல்யூஷன்ஸ், அது



கால் சென்டர் காலத்தின் ஆதிக்கம் துவங்கிய நேரம்!

கம்ப்யூட்டர் உதிரி பாகங்களை தயாரிக்கும் தொழில்தான் ராமநாதன் செய்தது. எனவே இயந்திரங்களுக்கு எந்த விலையும் தரவில்லை. மாறாய் நாற்காலி, மேசைகள், ஆபீஸ் டெகரேஷன், சம்பளம் என்று முதல்மாத செலவுக் கணக்கை, கண்டவனுக்கு வரவை காட்டிலும் செலவு கணிசமாய் உயர்ந்து இருப்பது தெரியவந்தது.

புது தொழில், எல்லாவற்றையும் அவனே செய்யும் பளு என்று இருக்கும். சமயம் தான் சந்தியா கடைசி வருடகல்லூரிப்படிப்பில் இருந்தபடியே உதவியும் புரிந்தாள். சொந்த அத்தை மகள் என்பதால் கூடுதல் ஒட்டுதல் வேறு! அவர்கள் இருவரும் பழகியதைக் காணும் போது காதலர்கள் என்றே தோன்றும்.

அத்தனை அன்னியோன்யமும், அன்பும் இழையோடும்! அவன் சாப்பிடாமல் வேலை புரிந்தால் வம்பிழுத்து சாப்பிட வைப்பாள். அப்படியெல்லாம் உறவாடியவள், உறவுகளும், நண்பர்களும் ஒன்றுகூடி மணமேடை வரைவந்து தன்னை தவிக்கவிட்டுப் போனதன் காரணம் காதல்!

அந்த இழப்பில் இருந்து அவன் வெளியே வர எத்தனையோ காலங்கள் கடந்தன. நண்பர்களின் பரிகாசம், உறவுகளின் சீண்டல், அன்னை, தந்தையின் சோகமான பார்வை இவற்றில் இருந்தெல்லாம் அவனை மீட்டது இந்த வேலைதான். 50 கம்ப்யூட்டரில் துவங்கி இன்று இரண்டு கிளைகளை நிர்வகிக்கும் திறன் இதெல்லாம் சாமானியமானதா?

எல்லா வித வேதனைகளையும், கவலைகளையும் இந்த கட்டிடத்திற்குள் வந்தால் அவன் மறந்தே போவானே! அப்படிப்பட்டவன் இன்று சலனமடைவது வியப்பாய் இருந்தது. வர்ணிகாவை பெங்களூர் சென்றிருந்தபோது முதன் முதலாய் கோவிலில் கண்ட போது அவளிடம் ஒரு ஈர்ப்பு துவங்கியது. ஆனால் அதை தவறென்று மனம் சுட்டி காட்டியதை உணர்ந்த போதும், மீண்டும் அவளின் சந்திப்பு, குறும்பு பேச்சு, சரிக்கு சரியாய் வாயாடல் என்று! உண்மையில் அப்பா சொன்னதைப் போல் அவளுடன் பேசினாலும், மனம் உற்சாகம் கொள்வது உண்டு. ஆனால் சந்தியாவினால் ஏற்பட்ட காயமே ஆறவில்லை. மறுபடியும் யாரிடமும் அவமானப்பட தயாராய் இல்லாத மனம் எச்சரிக்கை மணி அடித்தது.

இனம்புரியா ஏதோவொன்று மனதைப் பிசைந்தது. தலையை சிலுப்பி உணர்வுகளை விரட்டிப் போராடினான். அவனுடைய தனி உதவியாளர் கோபியை அழைத்தான். இந்த கால்சென்டரின் முதல் பொறுப்பும் அவன் தான். சுறுசுறுப்பான இளைஞன்.

'' கோபி! ''

''குட்மார்னிங் சார் ''

'' ம்... இப்போ பிராசஸ் நடந்த வேலை எல்லாம் முடிஞ்சிட்

டதா?''

'' ஜான் கம்ப்யூட்டர்ஸ் ஆர்டர் இன்னும் ஒரு பிரிவு இருக்கு. மொத்தம் 300 டிரைனர்ஸ் வைச்சு நடத்தறோம். ஒவ்வொரு குழுவிலும் 30 பேர் வேலை வேகமாகத்தான் நடக்கிறது. அவங்க டீம் லீடர்கம் நல்ல ரிசல்ட் தந்திருக்காங்க. அநேகமா நாளையே முடிந்திடும்.''

'' நல்லது. கணக்கு பிரிவு மேலாளர், வணிகப் பிரிவு மேலாளர் இரண்டு பேரையும் வரச் சொல்லுங்க. ''

மேஜை மேன் ஊர்ந்தபடி இருக்க அந்த தவளை டிஸைன் கொண்ட போனை அழுத்தி இருவரையும் வரச் சொல்லி விட்டு அவன் கையெழுத்து இட வேண்டிய பைலையும், புத்தகத்தையும் எதிரே வைத்தான்.

அனுமதி கேட்ட பின் டை கட்டிய இரு ஆசாமிகள் உள்ளே நுழைந்தனர்.

''மிஸ்டர் மேகநாதன். ஜான் கம்ப்யூட்டர்ஸ்சில் இருந்து இரண்டு செக் கிளியர் ஆகி இருக்கு. ஆனா நீங்க கடைசி செக்கை இரண்டு தரம் எண்ட்ரி போட்டு இருக்கீங்க. அது ஸ்டேட்மெண்ட் ஆயிருக்கு. இதனால நமக்கு லாஸ் ஒருபுறம், மேலும் ஒரு தடவைக்கு இரண்டு முறையிலும் பிரிண்டிங்கில் நீங்க கண்டுபிடிக்கலையே ஏன்? ''

''ஸாரி சார். இனிமே இதுபோல் நடக்காது. ரீ எண்ட்ரி போட்டுட்டேன். ''

'' குட் கோபி. இரவு பணியில் வேலை பார்க்குற எல்லாருக்கும் இந்த மாதத்தில் இருந்து சம்பளத்தில் இருந்து 10 சதவீதம் அதிகமாக் கிடுங்க. போன முறை கேன்டீனில் சாப்பாடு சரியில்லைன்னு சொன்னாங்களே? இப்போ எப்படி? ''

'' சரி பண்ணியாச்சு ஸார். ''

'' ரவி நம்ம கிளையண்ட்ஸ் எல்லாம் எப்படி பழகுறாங்க? வியாபாரத்தை தாண்டியும் ஒரு நட்பு ரீதியா பழகுங்க. ''

''போனமுறை கூட நம்ம கிளையண்ட்ஸ்க்காக ஒரு சின்ன பார்ட்டி ஏற்பாடு பண்ணினேன். நம்ம சேவையும், அணுகுமுறையும் திருப்திகரமா இருப்பதா சொல்றாங்க. ''

''குட் புதிதா ஏதோ ஆர்டர் வந்ததா கோபி சொன்னாரே. ''

'' ஆமா சார் பெரோட் சிஸ்டம்ஸ் மெடிக்கல் கிளைம் சம்பந்தமா ஒரு பிராஜெக்ட் தந்திருக்காங்க. ஆனா ஜான் கம்ப்யூட்டர்ஸ் ஒர்க் முடிந்த பிறகு தான். ''


''அது தான் நாளை முடிந்து விடும்ன்னு கோபி சொன்னாரே? ''

''சார் ஏற்கனவே இன்னொரு ஸ்லாட்டும் அலாட் பண்ணியிருக்கு. எப்படியும் ஒரு மாதம் ஆகும். ஆனா பெரோட் சிஸ்டம்ஸ் 3 மாதத்திற்குள்ளாகவே பிராஜெக்ட் முடியணுமின்னு சொல்றார். ''

'' ஓஹோ! இப்போ நம்மோட ஸ்ட்ரெந்த் என்ன? ''

'' 1500 பேர் இரண்டு பிராஞ்சிலும், பெங்களூரிலும் இரண்டு





பிராஜக்ட் நடப்பில் உள்ளதால் போஸ்பாண்ட் செய்யவும் இயலாது. ''

'' சரி கோபி இன்னும் ஆட்களை சேருங்க. ஏற்கனவே இருக்கிற முன் அனுபவம் உள்ளவர்களோடு 20 பேரை சேர்த்து 50 பேர் கொண்ட குழுக்களாக தீர்மானிங்க. பார்ட் டைம் வேலை, ஆன்லைன் துவங்குங்க! நாளைக்கே பெரோட்டில் காண்டிராக்ட் சைனாகனும். ''

''யெஸ் சார், ''

'' ரவி நம்ம ஒர்க்கர்சுக்கு சரியா லீவு தர்றதில்லைன்னு கம்ப்ளைண்ட் பண்ணியிருக்கார். பெயர் முகில். ''

''சார் நீங்க சொல்ற முகில் அடிக்கடி லீவு எடுக்கிறாராம். அதனால அவரோட குழுவில் இருக்கிறவங்க ஓவர் டைம் செய்ய வேண்டியதாகி விடுகிறது. ஏற்கனவே ஒருமுறை வசந்தி எச்சரித்தும் அவர் கேட்கலை. இந்த முறை லீவு தராததால உங்ககிட்ட புகார் பண்ணிட்டார். ''

'' சரி நான் அந்த டீம் லீடர் வசந்தி கிட்டே பேசிக்கிறேன். நீங்க போகலாம். ''

அவர்கள் இருவரும் விடைபெற்று சென்று விட கோபி தயங்கினான்.

'' என்ன விஷயம்? ''

'' ஸார் நம்ம ஆபீசுக்கு ஆள் ஏற்றிக் கொண்டு வர்ற கார் டிரைவர் சிலர் சரியில்லைன்னு லேடீஸ் புகார் பண்றாங்க? ''

'' என்னவாம்? ''

'' தேவையில்லாத சில கமெண்ட்ஸ் பேசறாங்களாம். ''

'' டிராவல்ஸ் முதலாளியிடம் பேசினீங்களா? ''

'' பேசிட்டோம் சார். இரண்டு பேர் சொன்ன இடத்தில் இறக்கி விடலைங்கறதுக்காக பொய் புகார் செய்யறதா சொல்றான். ''

'' சரி கோபி இரண்டு நாள் நம்ம காரை எடுத்திட்டு போய் நீ பாரு. மீதியை பிறகு முடிவு பண்ணலாம். ''

அடுத்தடுத்த வேலைகளில் காலையில் வர்ணிகாவைப் பற்றிய சஞ்சலத்தைக் கூட மறந்தே போனான்.

வர்ணிகா அங்கு வந்து பத்து நாட்களுக்கு மேலாகிவிட்டது. கூடுமானவரையில் கலாவுடனே நேரத்தை கழித்தாள். நல்ல புத்தகங்களை வாசித்து காட்டுவது, அறையின் வெறுமையை அகற்றி இனிமையான பழைய பாடல்களை இசையை மெலிதாக இழைய விட்டாள். சாயங்கால நேரம் ஒரு பத்து நிமிடம் தோட்டத்தில் நடைபயிற்சி ராமநாதனோடும், அரட்டை என்று நாட்கள் இலகுவாய் பறந்தன.

ஆனால் சித்தார்த்தனிடம் மட்டும் அவள் பேசுவது இல்லை. அவன் உள்ள இடங்களை கூடுமானவரையில் தவிர்த்தே வந்தாள். அவனும் இவள் இருக்கும் இடம் தேடி வந்து வம்பு செய்பவனும் இல்லையே!



மதிய நேரம் அனைவரும் ஓய்வெடுக்க, இவள் மட்டும் தனிமையாய்! என்ன செய்யலாம். அந்த வீட்டின் ஹால் சற்று விசாலமானது என்பதால் ஆங்காங்கே சிறிய டேபிள்களில் பூச்சாடிகள் இடம் பெற்று இருக்கும்.

சற்றே நிறமிழந்து அழுக்கு படிந்த பிளாஸ்டிக் பூக்கள். தோட்டத்தில் உலவும் போது அழகான பூக்களின் அணிவகுப்பை கண்டது நினைவுக்கு வர,

அங்கே சென்று நீண்ட காம்புகள் கொண்ட பூக்களைப் பறித்தாள். ஒன்றாய் இதழ் விரித்து சீராக்கி, படிகாரத்துகளை பூச்சாடியில் போட்டு தண்ணீர் ஊற்றி பூக்களை சீராய் அடுக்கினாள். அதன் மணமும், அழகும் ஜோராய் இருந்தது.

அடுத்து வரவேற்பறை வெறிச்சோடி போய் இருக்க,

'' சோமு அண்ணா? இங்கே கொஞ்சம் வாங்களேன் ''

'' என்னம்மா? ''

'' எனக்கு ஒரு முக்காலி வேண்டும். அப்புறம் பெரிய இடுப்பு அகன்ற பாத்திரமும். ''

'' ஸ்டோர் ரூமில் இருக்கும்மா வா. வந்து எடுத்து தருகிறேன். '' இருவரும் வீட்டின் பின்புறம் உள்ள ஸ்டோர் ரூம் சென்றனர். இரண்டு அடுக்குகளாய் தடுக்கப்பட்டு இருந்த அவ்வறையில் ஒரு புறம் மளிகை பொருட்களும், மறுபுறம் மரச்சாமான்களும் அடுக்கியிருந்தன.

வட்ட வடிவம் கொண்ட பிரவுன் நிறமுடைய சிறிய 5 அடி உயர முக்காலியை எடுத்தாள். பின் பித்தளையில் அவள் கேட்டது போன்ற பாத்திரமும் இருந்ததால் இரண்டையும் சோமுவிடம் கொடுத்து விட்டு திரும்பும் போது தான் அறையின் மூலையில் இருந்த சித்திரம் ஒன்று அவள் கவனத்தை ஈர்த்தது.

அதைக் கையில் எடுத்து தன் துப்பட்டாவால் தூசியை துடைத்தாள். மரச்சட்டங்களுக்கு நடுவில் அழகாய் தத்ரூபமாய் அந்த ஓவி

''பேஷண்டுக்கு மயக்க மருந்து கொடுத்தீங்களா நர்ஸ்...''

''ஏன் டாக்டர் வீண் செலவுன்னு கண்ணடிச்சேன் மயங்கிட்டாரு''

-பி.பாலாஜிகணேஷ், சிதம்பரம்



யம் நெஞ்சை பிசைந்தது.

இருண்ட வானில் ஆங்காங்கே வெண் திட்டுக்களாய் பனிமேகங்கள் அதன் நடுவில் வட்டமாய் ஒளிவீசியபடி நிலா! அந்த வெண்பனிங்கு நிலவில் அழகான இளம் ஜோடிகள் தன் காதலை பரிமாறிக்கொள்வது போல வெகு அற்புதமாய் இருந்தது அந்த ஓவியம்.

'' இத்தனை அழகா இருக்கிற இந்த ஓவியத்தை யார் சோமு அண்ணா இங்கே போட்டது? ''

'' இது பெரியதம்பி வரைஞ்சது. முன்னேயெல்லாம் எப்பவும் எதையாவது வரைஞ்சுகிட்டே இருக்கும். இப்போ என்னவோ இதையெல்லாம் தொடறதே இல்லை. ''

சித்தார்த்தனா? அவனிடம் இத்தனை அழகான கலையா? கல் போன்று இருக்கும் மனதில் என்ன ரசனை? கண்களை விட்டு அகலவே முடியாதபடி இருந்த அந்த ஓவியத்தை மறுபடியும் ஒருமுறை பார்த்தாள்.

'' இதையேன் இங்கே பழைய பொருட்களுக்கு நடுவில் போட்டு வைக்கணும். அப்படியொன்றும் இது நிறம் மங்கியதாய் கூட தெரியவில்லையே? '' அவர் மௌனமாய் இருந்தார். ஓவியத்தின் லேமினேஷன் பூச்சு சற்று இளகியிருந்தது. அதன் பிறகு சோமுவிடம் அவள் எதையும் கேட்கவில்லை. முக்காலியில் தேங்காய் எண்ணெய் நட்வி பஞ்சினால் அழுந்த துடைக்க அது பளிச்சிட்டது. அதை வரவேற்பறையின் நடுவில் வைத்து விட்டு, வாயகன்ற பித்தளைப் பாத்திரத்தையும் அதன் மேல் வைத்து நீர் பரப்பினாள்.

# 7

'' ஏய் வர்ணி என்ன பண்றே? மீன் விடப் போறியா? இல்ல குழந்தைகள் மழையிலே கப்பல் விடுமே அது போல...''

'' இப்போ தான் நீங்க சாப்பிட வரலையேன்னு நினைச்சேன். ''

'' நம்ம இரண்டு பேருக்கும் ஒரே வயது தான் இருக்கும். எதுக்கு நீங்க-வாங்க எல்லாம் வேண்டாமே?''

''கரெக்ட் இளங்கோ! எனக்கும் ஒரு தோழமையான ஆள் தேவை தான்! வரவேற்பறையில் இந்த மாதிரி கொட்டி வைத்து அதில் வண்ண வண்ண பூக்களை மிதக்க விட்டால்...''

'' வாஸ்துவா? ''

'' அப்படியும் சொல்லலாம். ஆனால் நான் ரசனையோடு செய்தேன். பொதுவா ஒருத்தர் நம்ம கூட சண்டை போட வர்றார்னு வைச்சுக்கோயேன் இந்த அழகான நிலை கண்டு நிதானிப்பார்கள். அவங்க கோபமும் குறையும்.''



'' அதற்குள் நாம களத்தில் இறங்கிடலாமில்லை. பார்க்க சின்ன வயசா சின்ன பொண்ணா தெரியறே. ஆனா செயல் எல்லாம் பெரிய மனிதரின் செயலாத் தெரியுது. தலைக்கு டை எல்லாம் போட்டு ஏமாத்துறியா என்ன?''

'' பிறப்பு சான்றிதழ் தரவா? ''

'' ஏதேது? எதற்கும் தயார்தான் போல? ''

இவள் கலகலவென்று நகைத்தாள். பேசியபடியே அழகான பூக்களைப் பறித்து வந்து இதழ்களைப் பிரித்தனள்.

'' உண்மையைச் சொல்லணும்மின்னா உங்கிட்டே ஏதோவொரு பவர் இருக்கு வர்ணி. ''

'' ஏன்? என் பின்னாடி ஏதாவது ஒளிவட்டம் உன் கண்ணுக்கு தெரியுதா? ''

''கிண்டலா? இன்பேக்ட் எங்க வீடு எத்தனை சந்தோஷமாய் இன்பமாய் இருக்கும் தெரியுமா? அம்மா, அப்பா, அண்ணா, நான்னு எப்பவும் வேடிக்கையாக பேசிட்டு, சிரிச்சுக்கிட்டே இருப்போம். எப்போ அந்தக் கல்யாணம் நின்னு போனதோ அப்பவே மொத்த சந்தோஷமும் போச்சு. கூடவே அம்மாவுக்கும் முடியலை. அண்ணன் அடியோட மாறிட்டான். இப்போயெல்லாம் வீட்ல அவன் பேசற வார்த்தைகளை விரல் விட்டு எண்ணிடலாம். ''

''இளங்கோ! உங்க அண்ணா படித்தவர். ஒரு பெண் தன்னை வேண்டான்னு ஒதுக்கிட்ட காரணத்திற்காக இப்படி இடிஞ்சு போய் இருக்க வேண்டாமே! ஊரில் வேறு பெண்ணே இல்லையா என்ன?''

இதழ் பிரித்த பூக்களை ஒவ்வொன்றாய் நீரில் மிதக்க விட்டபடியே மேற்கொண்டு பேசினான் இளங்கோ! ''சந்தியா எங்க மாமா பெண். சின்ன வயதில் இருந்தே ரொம்பவும் நெருக்கம். பள்ளிப் படிப்பை கூட நாங்க மூவரும் ஒன்றாகத் தான் படித்தோம். ''

''கல்லூரிக்கு போகும் சமயம் தான் சந்தியா பெண்கள் கலை கல்லூரி சென்றாள். அப்போ தான் ராஜாங்கிற பையனை விரும்பி இருக்கிறாள். முறைப்பெண் என்பதால் சிறிய வயதிலேயே சந்தியாவிற்கு தான் அண்ணன் என்ற பேச்சு பெரியவர்களால் உலா வந்தது- ஆனால் அண்ணாவும் அவளும் கூட நல்லபடியாய் பழகினார்கள்.

படிப்பு முடிந்து தொழிலில் கூட அண்ணாவுக்கு உதவினாள். இரண்டு பேருடைய ரசனையும், முடிவுகளும் ஒரே மாதிரி ஒரே வேவ்லென்தில் இருக்கும். திருமண பேச்செடுத்த போது கூட பெரிதா எந்த தடையும் இடைஞ்சலும் அவள் சொல்லவில்லை! ஆனால் சகஜமாக பழகி மணவறை வரை வந்து விட்டு கடைசி நிமிடத்தி அவள் செய்த காரியம் அண்ணனை தலை நிமிர முடியாமலே செய்து விட்டது. எல்லாம் மூடி வைத்தே கழுத்தை அறுத்து விட்டாள். ''

'' இளங்கோ நான் ஒண்ணு கேக்கட்டுமா? அந்த சந்தியாவை

இவர் விரும்பினாரா? ''

'' அப்படி நிச்சயமாய் சொல்ல முடியாது வர்ணி! இன்பெக்டர் என் கிட்டே அண்ணன் எந்த அளவுக்கு பழகினானோ அதே நெருக்கம் சந்தியாவுடனும் உண்டு. அவ ஏதாவது ஆசைப்பட்டு கேட்டா உடனே வாங்கித் தந்திடுவான். குழந்தையோட பழகுறமாதிரி பேச வான். அப்படி இருப்பவனை தூக்கி எறிய அவளுக்கு எப்படித்தான் மனம் வந்ததுன்னு தெரியலை. ''

சித்துவை நினைக்கையில் வர்ணிகாவிற்கும் பாவமாய்த்தான் இருந்தது. தொழிலிலும், படிப்பிலும் வெற்றியோடு வலம் வரும் ஆண்மகன், வாழ்வின் முக்கிய கட்டமான திருமணத்தில் அடைந்த தோல்வி அவனை அடியோடு அசைத்து விட்டதே!

'' அந்த மட்டில் நடந்து விட்ட கசப்பான நிகழ்விற்கு ஆறுதலாய் மனதை தீய எண்ணங்களுக்கு பழக்கப்படுத்தாமல் தொழிலில் கவ னத்தை திருப்பி இருக்கிறான். ''

'' நீ சொன்னாற் போலவே இந்தப் பூந்தொட்டி அழகோடு மன திற்கு இதமாகவும் இருக்கிறது. ''

'' நன்றி! நீ சாப்பிடலையே இளங்கோ! எடுத்து வைக்கவா? ''

'' வேண்டாம். வெளியே சாப்பிட்டாச்சு! நீயும் ரெஸ்ட் எடு! '' அவன் மாடிப்பக்கம் சென்றான். வர்ணிகா ஏதேதோ யோசனையில் சிலைகளை எல்லாம் ஒழுங்குபடுத்தினாள்.

ஒருமாத காலம் வேகமாக ஓடிவிட்டது. கலா முன்பை போல் அறையிலேயே அடைந்து கிடைக்காமல் காரில் கோவிலுக்கு செல் வது உண்டு. மாமா முகத்தில் மலர்ச்சி. ''கொஞ்ச கொஞ்சமா இந்த வீட்டை நீ சீராக்கிட்டு வர்றே வர்ணிகா. ''

'' அத்தையோட உடம்பைக் காட்டிலும் மனசு தான் பலவீனம் அடைஞ்சு இருந்தது. அதை தூண்டி விட்டேன். பிரகாசமாக ஜொலிக் கிறது. ''

'' அதே போல் பெரியவனுக்கும் கல்யாணமும் பண்ணிப் பார்க் கணும்மா. ''

மெல்ல கருங்கி இருந்த அவர் கைகளை பற்றிய படி ''நல்லதே நடக்கும் மாமா. ''

'' அம்மா, அப்பாவிற்கு பேசுனியா? ''

'' ம்...! பேசினேன். அப்பாவுக்கு எப்படியும் சில நாள் லீவு கிடைக்க,வாய்ப்பு உண்டாம். இங்க வர்றதா சொன்னார். ''

'' மாமா சோபா கர்ட்டன்ஸ் எல்லாம் பழையதா தெரியுது. சில மெட்டீரியல்ஸ் வாங்கணும். ''

'' நாளைக்கு சண்டே! அதற்கு மறுநாள் போறேன். அப்புறம் கார் வேண்டாம். ''

'' ஏம்மா வழி ஏதும் மறந்திடும்னு நெனைக்கிறியா? ''

'' என்ன மாமா நானென்ன சின்னப் பொண்ணா. எத்தனை வசதி



கள் இங்கேயிருக்கு? ''

'' சரிம்மா துணைக்கு வேண்டுமானால் இளங்கோவையும் கூட் டிட்டு போ! '' அவன் தலையசைத்தான். ராமநாதன் கூறியது போல் முன்பிருந்த இறுக்கம் மறைந்து நிலைமை சீராய் இருந்தது ஞாயிறு மாலை வரை!

எத்தனை பணிகள் இருந்தாலும் ஞாயிறு 5 மணிக்கு பிறகு சித் தார்த்தனும், இளங்கோவும் வீட்டில் இருப்பார்கள். இரவு உணவு ஒன் றாய் உண்பார்கள்.

தொலைக்காட்சி நிகழ்வுகளைப் பார்த்தபடி அனைவரும் இருக்க, வாயிலில் கார் வரும் அரவம் கேட்டது.

வந்தவர் ராமநாதனின் தொழில் முறை நண்பர் '' வாங்க சிவநே சன் ''

'' நல்லாயிருக்கியாப்பா, என்ன ஆபீஸ் பக்கம் ஆளையே காணோம்? ''

'' கொஞ்சம் வேலை. அப்புறம் ரக்ஷனா எப்படி இருக்கா? ''

'' ம். டிகிரி முடிச்சுட்டா. ரக்ஷனாவுக்கு உம் பெரிய பையனை கேட்டு வந்திருக்கேன். சிவநேசன் நேரடியா விஷயத்திற்கே வந்து விட பெற்றோர் ஆவலுடன் மகனின் முகம் பார்த்தனர். சித்தார்த்த னின் முகம் எவ்வித உணர்வையும் வெளிக்காட்டவில்லை!

'' சிவநேசா நடந்த விஷயம் அனைத்தும் உனக்குத் தெரியும் தானே! அதனால நீ சம்பந்தப்பட்டவனையே கேளு? ''

'' தம்பி அப்பாவுக்கு விருப்பம் இருந்தா உனக்கு சம்மதமா? ''

அவர் மேற்கொண்டு பேசத் தொடங்கும் முன்பே '' அங்கிள் தயவு செய்து இந்த எண்ணம் இனியும் வேண்டாம். நட்பு எனும் முறையிலேயே நமது உறவு தொடரட்டும் சரியா? ''

'' சித்தார்த்... ''

'' அப்பா! ப்ளீஸ் அங்கிள் நீங்களும் தவறா நினைக்க வேண்டாம்.

''நான் அந்த டாக்டர் கிட்ட வைத்தியம் பார்த்த பிறகு லட் சாதிபதியாயிட்டேன்''

''நல்ல கைராசியா?''

''நீங்க வேற முன்னாடி நான் கோடீஸ்வரனா இருந் தேன்''

-பி.பாலாஜிகணேஷ், சிதம்பரம்.



திருமணம் என்பது உங்கள் சம்பந்தப்பட்டது மட்டுமல்ல, என் சம்பந்தப்பட்டதும் கூட. என் கவனம் இப்போது தொழிலில் தான்! ''

'' ஒருமுறை ரக்ஷனாவுடன் பேசினா உன் மனம் மாறலாம் ''

'' இப்போ எனக்கு திருமண எண்ணமும் இல்லை, நேரமும் இல்லை. '' முகத்தில் அடித்தாற்போல் வந்த பதிலில் அமைதியானார் சிவநேசன்.

'' இன்னும் எத்தனை நாளைக்குத் தான் நீ எங்களை வதைக்கப் போறே? ''

'' எனக்குப் புரியலைப்பா? நானென்ன பெண் பிள்ளையா? கல்யாண சந்தை! வயசு கூடிட்டே போகுதேன்னு எல்லாம் சொல்லி அவசரப்படறதுக்கு? ''

'' பெண்ணோ, ஆணோ எல்லாத்துக்கும் ஒரு காலநேரம் இருக்குடா? யாரோ ஒருத்தி கல்யாணம் பண்ணாம போனா அதுக்கு? ''

'' அப்பா பழைய விஷயம் எதையும் நினைவூட்ட வேண்டாம். நான் அதை மறக்க நினைக்கிறேன். ''

'' மறக்க நினைக்கிற நீ கல்யாணம் வேண்டான்னு ஏன் சொல்லணும்? ''

'' என்னோட காயங்கள் ஆறும் வரையிலாவது பொறுக்க கூடாதாப்பா? ''

'' பயமாயிருக்குப்பா. ஏற்கனவே என் உடம்புல சக்தியில்ல. ''

''நீ இப்படி விலக விலக மனசும் சோர்ந்து சீக்கிரம் போயிடுவேனோன்னு...! ''

'' அம்மா... ''

'' இனிமே நாங்க யாரும் உன்னை தொந்தரவு செய்யப் போறதில்லை. '' ஆளாளுக்கு அவரவர் அறைக்கு சென்றுவிட, மீண்டும் அங்கே இறுக்கமான சூழ்நிலை நிலவியது.

மறுநாள்.

வீட்டிற்கு தேவையான சில பொருட்களை வாங்க வெளியே சென்றவள் திரும்பிட தாமதமாகிவிட்டது. இரவு எட்டு மணி டாக்சிக்காக காத்திருந்தவள் முன்னால் தாறுமாறாய் வந்து நின்ற கால் டாக்சியில் இருந்து இரண்டு பெண்கள் இறங்கினார்கள். இரவு 8 மணிக்கே அங்கு சாலை வெறிச்சோடிப்போய் இருந்தது. அவர்களுக்குள் ஏதோ வாக்குவாதம் நடைபெறுவது போல தோன்ற, அவர்கள் புறம் நடந்தாள்.

'' இதோ பாரு உனக்கென்ன மனசில பெரிய இவன்னு நினைப்போ இலோசா உன் மேல கை உரசினா எகிறுறே? நான் சொன்னது நினைவிருக்கட்டும். அட்ஜஸ் பண்ணலைன்னா அசிங்கப்படுத்திடுவேன். ''

பேசிக்கொண்டிருக்கும் போதே வர்ணிகா குறுக்கிட்டாள் '' என்ன விஷயம் சிஸ்டர்ஸ் ''



'' நாங்க இரண்டு பேரும் கால் சென்டர்ல வேலை பார்க்கிறோம். இந்நாளு எங்களை பிக்-அப் பண்ற டிரைவர் ரொம்பவும் அசிங்கமா தொடவும் செய்றான். '' அந்த பெண் அழுதாள்.

'' உங்க பாஸ்கிட்டே சொல்ல வேண்டியது தானே? ''

'' சொன்னோம். இதுவரையில் எந்த ஸ்டெப்பும் எடுக்கலை. ''

'' உங்க ஆபிஸ் போன் நெம்பர் என்ன? ''

அவர்கள் எண்களை சொல்ல கையிலிருந்த செல்லைத் தட்டியவள்.

'' நீ யாரும்மா? இவளுங்களுக்கு வக்காலத்தா? யார் வந்தாலும் எங்களை ஒண்ணும் பண்ண முடியாது. ''

டிரைவரை அலட்சியப்படுத்தி மறுமுனையின் ஹலோவிற்கு காத்திருந்து.

'' உங்க கிட்டே இமீன் உங்க எம்.டி.கிட்ட பேசணும். ''

'' நீங்க யாருன்னு தெரிஞ்சுக்கலாமா? மேடம்? ''

'' அவசியம் சொன்னாத் தான் லைன் தருவீங்களோ? ''

'' எஸ் மேடம் கம்பெனி ரூல்ஸ். என்ன விஷயம்? ''

'' ரூல்ஸ் பேசினா மட்டும் போதாது. என்ன விஷயம்? எதற்காக பேச அவசரப்படறாங்கன்னு யோசிக்கணும் ''

பதிலுக்கு எரிச்சலாய் கோபி பேசுவது கண்டு சித்தார்த் சைகையிலேயே யார் என்று கேட்க,

ஸ்பீக்கர் பட்டனைத் தட்டினாள்.

'' ப்ளீஸ் கோபப்படாம நீங்க யாரு? எம்.டி.க்கு என்ன உறவுன்னு சொன்னா? '' கோபி முடிக்கும் முன்

'' ம்... அவரோட பொண்டாட்டின்னாத் தான் போன் எடுப்பீங்களா? ''

அதுவரையில் அசட்டையாய் இருந்த சித்தார்த்தன் கூர்மையானான்.

'' வாட்? '' கோபி.

''டாக்டர் தயவு பண்ணி இரும்பு சத்து டானிக் மட்டும் வேண்டாம்''

''வேற என்னவேணும்?''

''சில்வர் சத்து, பித்தளை சத்து டானிக்கா கொடுங்க''

-பி.பாலாஜிகணேஷ், சிதம்பரம்



" அதிர்ச்சியெல்லாம் சாவகாசமா அடையலாம். உங்க ஆபீஸ் பக்கத்தில் இருக்கிற பஸ் ஸ்டாப்பில் இருந்து தான் பேசுறேன். இன்னும் ஐந்து நிமிசத்தில் நீங்களோ, எம்.டி.யோ இங்கே வரணும். இல்லைன்னா போலீசோட நான் அங்கே வரவேண்டியிருக்கும். " அத்துடன் செல்லை அணைத்தான்.

" சார் " குழப்பமாய் எம்.டி.யை பார்த்தான் கோபி.

" நீங்க முன்னாடி போங்க கோபி! நானும் காருக்குள்ளேயே இருக்கிறேன். அந்தப் பெண்ணின் குரல் வெகு பரிச்சயமாய் தோன்றியது. என் யூகம் மட்டுமே சரியென்றால் எத்தனை திமிர் அவளுக்கு?" மனதில் எழுந்த கோபத்தோடு கிளம்பினான் சித்தார்த்தன்.

## 8

**கோ**பி இறங்கி செல்ல காரினுள் இருந்தபடியே நடப்பவற்றை சித்து கவனித்தான்.

கோபி ஓட்டமும், நடையுமாய் வந்தவன் " அகிலா நீங்க இங்கே? " அந்தப் பெண்களிடம் பேசிட,

" ஹலோ மிஸ்டர் யார் நீங்க? " என்றாள்.

" ஐயாம் கோபி சாப்ட்வேர் சொல்யூஷன்ஸ் பிப் செகரட்டரி. "

" என் சார் உங்ககிட்ட ஒர்க் பண்ற ஸ்டாப் அதுவும் லேடீஸ் அவங்க பாதுகாப்பு உங்க பொறுப்பு இல்லையா? இதைக் கூட கவனிக்காம ஆபீஸ்லே என்ன நிர்வாகம் பண்றீங்க? "

"மேடம் நீங்க என்ன விஷயம்னு இன்னும் சொல்லலை?"

" நீங்க ஏற்பாடு பண்ணியிருக்கிற டிரைவர் பொறுக்கித் தனமா அசிங்கமா நடந்துக்கிறான் தெரியுமா? இவனுக்கு அட்ஜஸ் பண்ணணுமாம். ராஸ்கல். "

" மேடம் முன்பே நாங்க இவனை வார்ன் பண்ணியிருக்கோம். இப்போ"

"சார் பப்ளிக் ப்ளேஸ்னு கூட பார்க்காம இப்படி வல்கரா பிஹேவ் பண்றவனை எப்படி நீங்க வெறும் வார்னிங்கோட விடலாம்? "

"இல்லே சார் இந்தம்மா பொய் சொல்லுது. ஒரு வாரமா இதை இந்த ரோட்டோரமா பார்த்திட்டு இருக்கேன். இன்னைக்கு என்னமோ இதுங்களை கூட்டு சேர்த்துக்கிட்டு " அவன் அந்த வார்த்தையை பேசி முடிக்கும் முன்னரே பளாரென ஒரு அறை விட்டாள் வர்ணிகா.

கோபியே ஒரு அடி மிரண்டு பின் வாங்கினான்.

" நீ ராஸ்கல் தப்பு செய்திட்டு அசிங்கமாவா பேசுறே? பொம்



பிள்ளைன்னா அத்தனை மட்டமா? " மேலும் இரண்டு அறைகளில் பொறி கலங்கி விட்டான் அவன். மேற்கொண்டும் ஆவேசமாய் கையை ஓங்க, யாரோ அவளின் கைகளைப் பற்றினார்கள்.

அதே கோபத்தோடு திரும்பி கையை உதறியவள், சித்தார்த்தனைக் கண்டதும் திகைத்து பின்பு, " இவன்.... "

" தெரியும் " என்றான் அழுத்தமாய்.

அதற்குள் இரண்டு போலீஸ்காரர்கள் வந்தனர். " சார் இவன் கால் சென்டர் டிரைவர். இந்தப் பெண்களிடம் முறைகேடாக நடந்து கொண்டான். ஆனால் இந்த பொண்ணுங்க பேர் எதுவும் வெளியே வரவேண்டாம். "

" சார் நீங்க? "

" இவர் சித்தார்த்தன். எங்க எம்.டி. " கோபி சொல்லியதும் சடாரென்று திரும்பினாள் வர்ணிகா.

அவனுடைய அலுவலகம் என்று அறியாமல் என்னவெல்லாம் பேசிவிட்டாள். ஏற்கனவே அவளிடம் இவன் கடுகடுவென்று இருப்பவன். என்ன பேசுவானோ என்று அவனைப் பார்த்தாள். அவன் இவளைப் பார்க்கவே இல்லை. பீ.சி. யிடம் பேசிவிட்டு கோபியிடம் திரும்பியவன்.

" கோபி இந்த டிராவல்ஸ் ஓனரை என்னை வந்து பார்க்கச் சொல்லு. அப்புறம் இவங்களை நீயே கொண்டு போய் வீட்டிலே டிராப் பண்ணிடு. "

" எஸ் சார் "

" கேர்ள்ஸ் நீங்களும் இந்த விஷயத்தை யாரிடமும் சொல்ல வேண்டாம். நடந்ததற்கு நான் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். இனி ஒரு போதும் இந்தத் தவறு நடக்காது. "

அவர்கள் நன்றி சொல்லி தலையசைத்து கிளம்பிவிட, வர்ணிகாவின் புறம் திரும்பினான்.

" நன்றி வர்ணா. ஆமாம் நீ எங்கே? அதுவும் இந்த நேரத்தில்?"

" வீட்டிற்கு தேவையான சில பொருட்கள் வாங்கலாம் என்று வந்தேன்."

"வாங்கியாச்சா? "

" ம்... ஆட்டோவுக்காக வெயிட் பண்றேன். "

" என்னோட கார்லயே வரலாமே. நானும் வீட்டிற்கு தான் போகிறேன். "

" அது... "

" பொண்டாட்டினு தைரியமா பேசினவங்க காரில் வர ஏன் பயப்படணும்? "

" அது வந்து கோபத்துல, அந்த ஆள் உடனே ஆக்ஷன் எடுக்கணுமின்னு தான் "

" பரவாயில்லை. ஆனாலும் உனக்கு வாய் ரொம்ப அதிகம் தான்.

என்ன மிரட்டு மிரட்டுறே? கை வேற எம்மாம் நீளம்? ''

''இதென்ன பிரமாதம்? எங்க ஊர்ல நான் தான்''

''ரவுடின்னு தெரியுமே? அதான் கோயிலே பார்த்தேனே ''

''எப்போ ''

''சரி வண்டியிலே போயிட்டே பேசலாமே? ''

'' ஒரு நிமிஷம். முன்பு ஒருமுறை நாம பேசிய போது கூட கோயில் பற்றி ஏதோ சொன்னதா ஞாபகம். ''

'' வா கட்டாயம் சொல்றேன். '' காரை நோக்கி நடக்க, அவள் தயங்கிடவும், ''தைரியமாய் என்னை நம்பி வரலாம். அவன் அடி வாங்கியதைப் பார்த்த பிறகு யாருக்கும் உன்னிடம் வாலாட்ட துணிவு வராது. நான் உள்பட...!''

சிரித்த படியே நடந்தவளிடம் கையில் இருந்த பொருட்களை வாங்கி பின்சீட்டில் வைத்தான் ''ப்ளீஸ்..!''

''ஸாரி நான் கொஞ்சம் அதிகமாகவே பேசிவிட்டேன் கோபத்தில்...!''

''பரவாயில்லை உன்னிடம் இருக்கும் தைரியம் அந்த பெண்களிடமும் இருந்திருந்தால் அவன் அப்போதே காலில் விழுந்திருப்பான். இருந்தாலும் இந்த அடி அதிகம் தான். பல்லு இருக்கோ? இல்லையோ?'' என்று சிரித்தான்.

அவள் பேசாமல் வருவது கண்டு, திரும்பி அவள் புறம்பார்க்க வர்ணிகா அவனையே பார்ப்பதைக் கண்டு ''என்ன?'' என்பது போல் புருவம் தூக்கினான்.

''ஒன்றுமில்லை?!''

''ஏதோ இருக்கிறது. சொல்லு...''

''உங்ககிட்டே சொல்லவே பயமா இருக்கு.''

''வாட் பயமா? உனக்கா?'' அவன் குலுங்க குலுங்க சிரித்தான்.

''நீ பயப்படறேன்னா சத்தியம் செய்தாலும் நான் நம்பமாட்டேன். உன்னை முதல்ல கோயில்ல பார்த்தப்போ ஏதோவொரு பெண் சிலைகிட்டே பேசிட்டு இருந்தே? இவ்வளவு குழந்தைத் தனமான்னு சிரிச்சேன். இன்பேக்ட் ரொம்ப நாளைக்கு பிறகு சிரிச்சேன்.''

''அப்புறம் வாசல்ல வைச்சு அந்த பசங்களை லெப்ட் அண்ட் ரைட் வாங்கினியே? யப்பா...!''

''எல்லாம் தெரியும் போல, நான் ஒன்று சொல்லவா?''

''ம்...''

''நீங்க சிரிக்கும் போது தான் ரொம்பவும் அழகாயிருக்கீங்க? ஜஸ்ட் ஒரு கமெண்ட் தான் தப்பா எடுத்துக்காதீங்க? ப்ளீஸ்..'' தலை சரித்து கண்சிமிட்டலும் அரைப்புன்னகையுமாய் அவள் கேட்க,

ஒரு விநாடி உற்றுப் பார்த்து விட்டு, ''ரொம்பவும் அதிகமாய் திட்டி விட்டேனோ?''

''இட்ஸ் ஓ.கே. சித்து, சித்துன்னு கூப்பிடலாமில்லையா?''



''ம் தாராளமா...! கூப்பிடலாம். நானும் எல்லாரிடமும் இயல்பாய் பழகத்தான் நினைக்கிறேன். ஆனால். ஒரு சில நேரம்...!''

''சித்து..! இருட்டறையில் ஒருத்தன் செடி வளர்த்தானாம், அதைப் பார்த்து அதிசயப்பட்டவர்கள் விவரம் கேட்க, என் அறையின் ஒரு மூலையில் சூரிய வெளிச்சம் வந்து இருந்தது அந்த வெளிச்சம் நகர நகர நானும் தொட்டியை நகர்த்தி செடி வளர்த்தேன்னு சொன்னானாம்.''

''அவனுக்கு தன்னம்பிக்கையும் அதிகம், அதே வேளையில் ஒளியிருக்கும் இடம் தேடி தன் இலக்கை அடைந்தானே அது போல் தான் நீங்களும். பெரிய அடிக்குப் பிறகு இப்போது தொழிலில் எடுக்கும் வளர்ச்சி விஸ்வரூபம் இல்லையா?''

''இதே போல், உங்களுடைய எண்ணத்தையும் மீறி பிறர் நலனிற்காக நல்ல முடிவு எடுக்கலாமே?''

''நீயும் கல்யாணத்தைப் பற்றி பேசவர்றியா?''

''அந்த எல்லைக்கு வர எனக்கு உரிமையிருக்கா?''

''என் தோல்விக்கு பிறகு நான் அதிகம் பேசியதும் உன்னிடம் தான். அதிக கோபப்பட்டதும் உன்னிடம் தான். ஆனா வர்ணா உன்னோட உறுதி எனக்கு பிடிக்குது. அதே போல் வீட்டில் நீ வந்த பிறகு நடந்த மாற்றங்கள் அம்மா, அப்பான்னு நிறைவு தான். அதுதான் உன்னிடம் ஒரு தோழமையை உண்டாக்கி இருக்குன்னு நினைக்கிறேன்.''

''நீங்க இத்தனை தூரம் மனம் விட்டு பேசுவீங்கன்னு நான் எதிர்பார்க்கலை சித்து...!''

அதற்குள் வீடு வந்து விட இருவரும் வாங்கி வந்த பொருட்களை ஆளுக் கொன்றாய் தூக்கியபடி உள்ளே நுழைய, ஹாலில் அமர்ந்திருந்த மூவரும் ஒரு முறை புருவம் தூக்கி பின் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

மறுநாள் காலை, அத்தையும், மாமாவும் கோவிலுக்கு சென்று

''உங்கப்பாவுக்கு பத்து நாளுக்கு முன்னாடி ஒரு ஊசி போட்டேன் ஆளேயே காணும்''

''இந்தாங்க டாக்டர் நாளைக்கு எங்கப்பாவுக்கு காரியம் வைச்சிருக்கோம் வந்துடுங்க''

பி.பாலாஜிகணேஷ், சிதம்பரம்.



விட, வழக்கம் போல் வர்ணிகா தான் முதல் நாள் வாங்கி வந்த பொருட்களை தயார் செய்யலானாள். கூம்பு வடிவம் கொண்ட பிளாஸ்டிக் தட்டில் மூலைக்கொரு துளைகள் இட்டு, ஒயர்களை தொங்க விட்டு சிறிய பீங்கான் பறவைகளை சற்றே இடைவெளி விட்டு இணைத்தாள்.

நடுப்பகுதியில் நீளமான மெல்லிய உருளை வடிவம் கொண்ட கம்பியை தொங்கவிட, கிணிகிணியென சப்தம் எழுந்தது. அதைத் தொங்க விட தோதான இடம் தேடினாள்.

''என்ன வர்ணீ? எப்பப்பாரு எதையாவது அங்கங்கே தொங்க விடறதே உனக்கு வேலையாப் போச்சு!''

''உனக்கு வரவர வாய் அதிகமா போச்சு!''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே, ஆமா என்ன நேற்று கிளி யோபாட்ராவும் ஹிட்லரும் ஒண்ணா சேர்ந்தாப்ல சிரிச்ச முகமாய் வந்தாப்ல இருந்திச்சு? சகஜமா அவன் பேசி வருஷங்கள் ஆகுது'' குறும்பு கொப்பளிக்கும் பார்வையில் கேட்டவனை தலையை செல்லமாய் கலைத்தாள்.

''தத்திங்! வண்டி கிடைக்காம வெயிட் பண்ணிட்டு இருந்தேன். அந்தப் பக்கமா வந்தவர் என்னை கூட்டிட்டு வந்தார். ஏன்? நானும் அவரும் ஒண்ணா வரக்கூடாதாயென்ன?'' ஸ்டூலில் ஏறி அதை முடிந்து விட்டபடியே கேட்க,

''ச்சே! நான் அப்படி சொல்லலை சும்மா கேட்டேன்.'' இழுத்தபடியே, பின் மெல்ல தயங்கி ''வேற ஒண்ணும் இல்லையா? வர்ணீ...!''

அவன் கேட்பதன் அர்த்தம் புரிந்து ஒருமுறை புருவம் தூக்கிப் பார்த்தாள். ''இளங்கோ டோண்ட் பீல் அதர்வைஸ்! முடிஞ்சா உதவி பண்ணு வம்பு செய்யாதே?''

''கோபமா வர்ணீ?''

''அதெல்லாம் இல்லை, வாசல்ல யாரோ பேசறாங்க யாருன்னு முதல்ல பாரு?''

வெளியில் இளைஞன் ஒருவன் கையில் பார்சலோடு வந்தான்.

''சார் இங்கே வர்ணிகான்னு?''

''யெஸ்... இருக்காங்க, நீங்க யாரு?''

''மேடம் ஒரு போட்டோவை லேமினேட் பண்ண சொன்னாங்க வேலை முடிஞ்சதும் டோர் டெலிவரி பண்ணலாம்னு.''


''தாங்க?''

அவன் நீட்டிய ரசிதில் கையொப்பமிட்டு விட்டு பார்சலை தாங்கிய படி வர்ணிகாவிடம் வந்தான்.

''இந்தா ஏதோ போட்டோ பிரேம் பண்ண சொன்னியாமே? ஏன் வர்ணீ நேர்ல உன் முகத்தைப் பாக்குறது போதாதுன்னு பிரேம் போட்டு கொண்டு வந்திட்டியா?''

''கொழுப்பா? இது என் படம் இல்லை?''





''பின்னே? ''அவள் கவரைப் பிரிக்க ஆர்வமாய் புகைப்படத்தைக் கண்டவனின் கண்கள் அதிர்ந்தன. ''வர்ஷி இது இது...! எப்படி உனக்கு கிடைச்சது?''

''அன்னைக்கு ஸ்டோர் ரூம் போயிருந்த போது எடுத்தேன். அழகான ஓவியம் களையிழந்து போய் பார்க்கவே கஷ்டமா போச்சு. இதிலே வரைஞ்சது சித்து வேறயா? அதான் லேமினேட் பண்ணிட்டேன். இதை நடுஹால்ல மாட்டப்போறேன்.''

''வேணாம் வர்ஷி வீண் வம்பை விலைக்கு வாங்காதே! அண்ணா இதை விரும்ப மாட்டான்.''

''என்ன பேசுறே? ஒரு போட்டோ மாட்டுவதில் என்ன பிரச்சனை வரப்போகுது?''

''விளையாடாதே இது! அண்ணன் சந்தியாவுக்கு வரைஞ்ச படம் கல்யாணத்தின் போது. இதை மறுபடியும் பார்க்க கூடாதுன்னு தான் தவிர்த்தான். மறுபடியும் இதை....!''

''இளங்கோ காயம் ஆறணும்னா அதை கீறி விடணும். வலிக்கு பயந்து கிட்டு விட்டா உள்ளே ஆழமா இறங்கிடணும். ரிஸ்க் எடுப்போமே எத்தனை நாளைக்கு தான் யோசிக்க கிட்டே இருக்கிறது?''

''உன்னோட தைரியம் எனக்கு வராது வர்ஷி! என்னவோ பயமா இருக்கு நீ கவலைப்படாதேன்னு ஈஸியா சொல்றே?''

புன்னகைத்தபடி, அந்த ஓவியத்தை ஹாலில் மாட்டி விட்டு, ''நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வர்றேன்னு...!'' படு கேசுவலாக கிளம்பினாள். கண்ணுக்கு முன்னே தொங்கும் அந்த ஓவியத்தை ஒருவித உதறலுடன் கண்டான் இளங்கோ.

## 9

**க**ணிப்பொறியில் எதையோ தட்டிக் கொண்டிருந்தவனின் முன் வந்து நின்றான் கோபி.

''சொல்லுங்க கோபி''

''ஸார்...!''

''என்ன?'' புருவம் தூக்கினான்.

''ஸார் மேடம் வந்திருக்காங்க? விசிட்டர்ஸ் ரூமில் உட்கார வச்சு இருக்கேன்.''

''மேடமா? யாரு?'' சிறு தயங்கலுக்குப் பின், ''நம்ம சந்தியா மேடம்...!'' என்றான்.

''சித்தார்த்தனின் முகம் இறுகியது. ''நான் யாரையும் பார்க்க பிரியப்படலை கோபி போகச் சொல்லு..!''

''ஸார்...!அவங்க ரொம்பவும் கவலையோட வந்த மாதிரி தெரியுது. பிளீஸ் கோபப்படாமல் கொஞ்சம் பேசி அனுப்பவமே ஸார்.''

ஒரு பெருமூச்சுடன் இருக்கையை விட்டு எழுந்தான். மனதிற்குள் ஆயிரம் போராட்டம் எழுந்தது. ஆயிரம் பேர் நிறைந்த மண்டபத்தில் தன் நிலையை இறக்கி விட்டு போனபிறகு, இன்று தான் அவளை நேரில் காணப்போகிறான்.



இரண்டு வருடங்களாக, மனதை மறந்து சிரிப்பு இயல்பு எல்லாம் துறந்து, தன் உலகமே சுருங்கிட காரணமாகிப் போனவள். எதற்காக வந்திருக்கக்கூடும்.

விசிட்டர்ஸ் அறையை திறந்து உள்ளே நுழைந்தான். மஞ்சள் நிற கசங்கிய காட்டன் புடவையில் வந்திருந்தாள் சந்தியா. அழுது அழுது கண்களும் முகமும் வீங்கிப் போய் இருந்தது. கண்ணப்பாதையில் கண்ணீருக்கான அடையாளம் தெரிந்தது.

எதிரே அமர்ந்தான், இவனை நேரில் சந்திப்பதைத் தவிர்த்து தாழ்ந்த கண்களுடன், விசும்பினாள்.

''சொல்லு சந்தியா? என்ன திடீர் விஜயம்? எனக்கு வேலையிருக்கு?''

''அத்தான் என்னை மன்னிச்சிடுங்க?''

''நான் யார் சந்தியா உன்னை மன்னிக்க? எனக்கு எந்த உரிமையும் இல்லையே?''

''நான் பண்ணது தப்புதான். உங்க மனசை ரொம்பவும் காயப்படுத்திட்டேன். ஆனா என்னோட சூழ்நிலை அப்படி?''

''என்ன பெரிய சூழ்நிலை சந்தியா? உனக்காக எதையும் செய்யக்கூடிய ஒரு குடும்பத்தை நீ தூக்கி எறிஞ்சுட்டு போய் இருக்கே? ஏன் முத நாள்ல சொல்லி இருந்தா கூட நான் எங்க வீட்ல உனக்காக சம்மதம் வாங்கி இருப்பேன்! அவமானமும் தலைகுனிவும் தவிர்த்திருக்கலாம்''

''அத்தான்! நான் சொன்னா நீங்க செய்வீங்கன்னு தெரியும். நம்ம இரண்டு பேருக்குமே ஒரு நல்ல பற்றுதல் நட்பு இருந்தது. ஆனா நான் ராஜாவை பார்த்த மாத்திரத்தில் தோன்றிய அன்பு காதலா மாறிடுச்சு, பல சந்தர்ப்பங்களில் உங்க கிட்டே இதைப் பேசணுமின்னு இருந்தேன் ஆனா சூழ்நிலை சரி ''



''என்னப்பா சர்வர் வடையிலிருந்து நூலா வருது''

''ஏன் சார் நீங்க தர்ற ஐந்து ரூபாய்க்கு போர்வையா வரும்!''

-பி.கவிதா, சிதம்பரம்

வில்லை.''
''அதுக்குள்ளே, கல்யாண விஷயத்தை பேசிட்டாங்க! நானும்
யார்கிட்டேயும் பேச முடியாமல் போயிட்டது. ஆனா நான் நெருங்க
நெருங்க பயம் வந்திட்டது. உங்க கிட்டே பேசலாம்னு வந்தப்போ.
கல்யாணப் புடவை எடுக்க நீங்க கூப்பிட்டீங்க. அந்த நிலையிலே
உண்மையை சொல்ல தைரியம் வரலை''
''ஆனா! கல்யாணம் நெருங்கிடவும் வேற வழியில்லாம நான்...!
தப்புதான் அதுக்கான தண்டனையை அனுபவிச்சிட்டேன். இப்போ
என் கணவர் ஆஸ்பிட்டலில் இருக்கார்?'' அவள் கண்களில் நீர் வழிந்
தோடியது.
''என்னாச்சு...!''
''ஆக்ஸிடெண்ட்...! காலில் பிராக்சர், என்னாலே முடிந்த வரை
யில் போராடிப் பார்த்தேன் ஆனா..! பயமாயிருக்கு அத்தான். எனக்கு
நல்லதோ கெட்டதோ எல்லாமே நீங்க செய்வது தான். அம்மா அப்
பாகிட்டே போகலை..''
''எந்த ஆஸ்பிட்டல்?''
''வீனஸ் ஆஸ்பிட்டல் அத்தான்!''
''சரி என் கூட வா...! பயப்படாதே நானிருக்கேன்'' கிளம்பியவ
னின் கண்கள் சந்தியாவை அளந்தன. எத்தனை அழகாய் நேர்த்தியாய்
உடையணிவாள் இன்று கசங்கிய புடவையும் சீவிடாத தலைமுடியும்.
வாடி வதங்கிய முகமும் பார்க்கவே பரிதாபமாய் இருந்தது. கூடவே
சற்றே மேடிட்ட வயிறு வேறு மனதை பிசைய, கிளம்பியே விட்டான்
அவளுடன் மருத்துவமனைக்கு! மருத்துவமனையில் டாக்டரை சந்
தித்து, ராஜாவின் உடல் நலம் பற்றி விசாரித்து, மேற்கொண்டு நடக்க
வேண்டிய செலவுகளையெல்லாம் தானே ஏற்றுக் கொள்வதாய் பேசி
விட்டு, சந்தியாவுடன் வெளியே வந்தான்.
அதே நேரம் எதிர்சாரியில் சில பொருட்கள் வாங்கிட வந்த வர்
ணிகா சித்துவின் கார் ஆஸ்பிட்டல் வளாத்திற்குள் நுழையவும் அதி
லிருந்து ஒரு பெண் இறங்கிடவும் சரியாய் இருந்தது. சித்து அவளு
டன் பேசுவதை அருகில் நின்று கேட்டாள்.
''சந்தியா உன் மேல எனக்கு தீராத கோபம் இருந்தது உண்மை
தான். இப்ப அந்த வெறுப்பும் இல்லை. எப்பவுமே உனக்கு ஒரு கஷ்
டமோ, பிரச்சனையோ எந்த நேரமும் என்னைக் கூப்பிடு புரியுதா?''
அவள் தலையசைத்தாள். சித்தார்த் புறப்பட வர்ணிகாவும் மெதுவாய்
நகர்ந்தாள்.
கோபம் இருக்கும் இடத்தில் தான் குணமிருக்குன்னு சொல்றது.
எத்தனை உண்மை. தன்னை வெறுத்தவளுக்கும் அருளும் குணம்
அந்த அன்பு இதில் சித்தார்த்தன் அவள் மனதில் சற்றே உயர்ந்து நின்
றான். மேலும் சில இடங்களுக்கு செல்ல வேண்டி இருப்பதால் மேற்
கொண்டு நகர்ந்தான்.



ஆனால் அங்கே வீட்டில் அவனுக்காக ஒரு பெரிய பிரளயம் காத்
திருக்கும் என்பதை அவன் அறியவில்லை. சம்பவங்கள் கோர்வை
யாய் சேர்ந்து தான் வாழ்வை நகர்த்துகிறது. சிலருக்கு அது திருப்புமு
னையாகவும், பலருக்கு அது பாவத்தின் சம்பளமாகவும் மாறி விடு
கிறது.
எதிர்வரும் துன்பங்கள் எத்தனையானாலும் எதிர்த்து நிற்கவே
மனிதன் படைக்கப்படுகிறான். முதுகெலும்பில்லாதவர்களே அதில்
முடியாமல் தோற்றுப் போகிறார்கள்.
சித்தார்த்தன் தன் பெயருக்கே விரோதமாய் மாறி இருந்தான்.
அவன் கோபம் எல்லை மீறிப் போய் இருந்தது. ''இதை இங்கே மாட்
டியது யார்? யார் செய்த வேலையிது?'' யாராலும் எந்தவொரு பதி
லும் சொல்ல முடியவில்லை.
''என்னப்பா நடக்குது இந்த வீட்லே? வேணும்னே என்னைக்
கஷ்டப்படுத்திப் பார்க்கத்தான் இப்படி செய்யுறீங்களா?''
''தம்பி இது எப்படி இங்கே வந்ததுன்னே எனக்குத் தெரியா
துப்பா?'' பெற்றோர் இருவரும் கவலை தோய்ந்த முகத்தோடு கை
விரிக்க,
''வீட்டில் நடக்கிற விஷயம் தெரியாதுன்னு, சொன்னா நம்பிட
நான் ஒண்ணும் முட்டாள் இல்லே, இளங்கோ கட்டாயம் இது
உனக்கு தெரியாமப் போகாது.''
''அண்ணா!'' இளங்கோ தடுமாறினான். உண்மையைச் சொல்லி
வர்ணிகாவை மாட்டிவிட்டால், இவனின் கோபத்தை பாவம் அந்த
சின்னப் பெண் எப்படித் தாங்குவாள்? யோசனையில் இருக்கும்
போதே, வர்ணிகா சித்துவின் வார்த்தைகளை ஏற்று அருகில் வந்தாள்.
''ஏன் சித்து இப்போ என்ன நடந்திடுச்சின்னு இப்படி பேசறீங்க?
விடுன்னு இருந்தா போட்டோ மாட்டுவதில் தப்பில்லையே?''
''உனக்கு எதுவும் தெரியாது வர்ணா. இதைப் பார்த்ததும் என்
பழைய புண்ணைக் குத்தி கிளறுவதைப் போல் இருக்குது.''
''சித்து.. பழைய நினைவுகளை ஞாபகப்படுத்தியதால் தான் இந்
தக் கோபம் இல்லையா? அப்போ பொருள் மட்டும் தான் காயப்படுத்
தும் ஆட்கள் இல்லை...!''
கூர்மையான பார்வையோடு வெளிவந்த அவளின் வார்த்தைகளில்
அவன் கோபம் அதிகரிக்க முகம் சிவந்து உடல் விறைப்பாகிபோனது.
''அப்பமன்னா!''
''இந்த போட்டோவை இங்கு வைத்தது நான்தான் சித்து.''
''நீயா?...!'' வார்த்தைகளில் அனலும் புயலும் பறந்தது. சற்றும்
யோசிக்காமல் பளாரென அறைந்தான் சித்து. அந்த இடமே ஸ்தம்
பித்து போய் விட்டது. இளங்கோ ஓடிவந்து சித்துவின் கைகளைப்
பிடித்து கொண்டான். சற்றே தடுமாறிய வர்ணிகாவை அத்தையும்.
மாமாவும் தாங்கிக் கொண்டார்கள்.

''டேய் ஒரு பெண் பிள்ளையைப் போய் கை நீட்டி அடிக்கிறியே?
நான் உன்னை இப்படி காட்டுத்தனமாகவா வளர்த்து இருக்கேன்?''
''விடுங்க மாமா, அவரோட தப்பை கண்டுபிடிச்சிட்டேன்.
போட்டிருந்த வேஷம் கலைஞ்சி போன பயம் அதை இப்படி வெளிக்
காட்டிவிட்டார்.'' அவள் தன் அறைக்குள் சென்று விட்டாள். பின்னா
டியே சென்ற தாயைத் தடுத்தான் இளங்கோ.
''வேண்டாம்மா, கொஞ்ச நேரம் வர்ணி தனியாவே இருக்கட்
டும். அப்புறமா போய் பேசுங்க?'' என்று தடுத்து விட்டான்.
''இப்படி மிருகத்தனமா நடந்துக்க கூடிய ஒரு பிள்ளை பெத்த
தற்கு நாங்கதான் கவலைப்படணும். வந்த பொண்ணும் என் கஷ்
டப்படணும்?''
''விடும்மா அவன் எப்பவுமே நம்மை நிம்மதியா இருக்க விட
மாட்டான். எதைச் சொல்லியும் அவனுக்குப் புரிய வைக்க முடியாது
வாம்மா!'' என்று மனைவியையும் அழைத்துச் சென்றார் ராமநாதன்.
சித்து அடியோடு உணர்வை இழந்து இருந்தான்.
இளங்கோ மெல்லத் தமயனின் அருகில் வந்து தோளைத் தொட்
டான். ''அவ ரொம்ப நல்ல பொண்ணு அண்ணா, உன்மேல நம்ம
குடும்பத்து மேலே ரொம்ப அக்கறை உள்ளவளும் கூட, இப்போ
கூட இந்த படத்தை இங்கே மாட்டி வச்சதற்கு காரணம் உன் வேத
னையை தூண்டி விட இல்லை''
''புழுவாய் அரிக்கும் உன் மனக்கவலையை கீறி விட்டா ஆறி
டும்னு நினைச்சா, நான் வேண்டாம்னு சொல்லியும் அவ கேட்கலை,
பாவம். யோசி அண்ணா, வர்ணி இங்கே வர்றதுக்கு முன்னாடி நம்ம
வீடு எப்படி இருந்தது. பாலைவனம் மாதிரி உன்னைப் பற்றிய கவ
லையிலே உருகிப்போன அம்மாவை நல்லபடியா திரும்பி தந்து நிம்
மதியை தந்தது அவதானே! அதை நாம உணரணும் இல்லை''
''அவளோட செய்கை உன்னைக் காயப்படுத்தி இருந்தா! நீ திட்டி
யிருக்கலாம். ஆனா கை நீட்டி அடிக்க கூடாதுன்னு தான் சொல்ல வர்

''நாளைக்கு எனக்கு கொள்ளி வைக்கப்போற பேத்தி நீ தாம்மா!''
''போங்க தாத்தா நாளைக்கு எனக்கு ஸ்கூல் உண்டு!''
-பி.கவிதா, சிதம்பரம்.





றேன். என்னை அடிக்க நீ யாருன்னு அவ கேட்டு இருந்தா நீ என்ன
செய்வே? தொழில்ல சாதிச்சா மட்டும் போதாது. வீட்டிலேயும் சாதிக்
கப் பழகிக்கோ!'' இளங்கோ சென்று விட்டான். ஆனால் அவனின் பேச்
சுகள் சித்துவை சுற்றி வந்தன.
இளங்கோ சொன்னது போல் அவளை அடிக்க எனக்கென்ன உரி
மையிருக்கிறது? நான் யார்? எந்த சூழ்நிலையிலும் கட்டுப்பாட்டுடன்
இருக்கும் நான் இன்று ஏன் உணர்ச்சி வசப்பட்டேன். அதுவும் ஒரு
பெண்ணை கை நீட்டி அடிக்கிற அளவுக்கு மூர்க்கனாகிப் போகும்படி!
எனக்கு துரோகம் இழைத்தவளுக்கு நன்மை செய்ய முடிந்த என்
னால், என் நலம் விரும்பிய பெண்ணிடம் கோபம் கொள்ள ஏன் தோன்
றியது? யார் மேல் என்னுடைய உண்மையான கோபம்? என் கையா
லாகத்தனம் தான் இப்படி வெளியாகி விட்டதோ?
ச்சீ.. இனிமேல் அந்தப் பெண்ணின் முகத்தில் நான் எப்படி விழிக்க
முடியும்? மனதை உண்மை பிசைய, அங்கு அவளிருக்கும் இடம் தேடி
மெல்ல மெல்ல விரைந்தான்.

## 10

கால்கள் தயங்கின. லேசாக சாத்தியி
ருந்த அறைக்கதவைத் திறந்தான். கட்டிலின்
மூலையில் தலையணையில் முகம் புதைத்து
இருந்தாள் வர்ணிகா! பாவம் மான் போல் துள்
ளித்திரிந்து இருந்த பெண், அருகில் சென்
றான்.
அவள் சாய்ந்திருந்த விதம் அவனை
வேதனை கொள்ள வைத்தது. கலைந்து
இருந்த கூந்தல் ஊஞ்சலாடியது. அதனைக்
கோதி விட வேண்டுமென்ற நினைப்பை மெல்ல அடக்கிக் கொண்
டான்.
வர்ணா..! இருமுறை அழைத்தும் அவள் திரும்பாததால், ஒரு
விநாடி யோசித்து சட்டென அவளருகில் அமர்ந்து வலுக்கட்டாயமாக
நாடியை பிடித்து திருப்பினான். இனிமேல் இப்படி நடக்காது
''வர்ணா...!'' என்னை மன்னித்து விடு, உன்னை அடிக்க எந்த உரி
மையும் எனக்கு இல்லை, தவறுதான் ஆனால் இனி நிதானம் இழக்
கவே மாட்டேன்.''
கண்களைத் துடைத்து விட்டு, ''இன்று உரிமையில்லை என
சொல்பவரும், அன்று எதையும் பேசலாம் என்று கூறியவரும் நீங்க
ஒருவர் தானே! ''என்றான்.
''அது...'' பிரச்சனை இப்போ உரிமையைப் பற்றியதல்ல சித்து.''
''உங்க உணர்வுகளுக்கு பிறர் தர்ற மதிப்பை நீங்களும் மத்தவங்
களுக்கு தரணும். அவன் தலையசைத்தான். என்னை ஏன் அடிச்சீங்க

சித்து" காரணம்...!''

''நான் மறக்க நினைத்ததை..!''

''பழைய பல்லவி வேண்டாம். நானும் தெரிஞ்சுக்காம எதையும்
பேசலை.'' சித்தார்த்தன் நிமிர்ந்து அவள் கண்களைப் பார்த்தான்
வர்ணிகா கண்களை நான் அறியேன் எனும் பாவனையில் மூடித்
திறந்தாள். சற்றே அவனை நெருங்கியும் அமர்ந்தாள். ''இன்றைக்கு
தவறு செய்தவங்களையும் மன்னிச்சு உதவி புரியற மகத்தான இடத்
திலே நீங்க இருக்கீங்க?!''

''வர்ணா...!''

''தெரியும் சித்து நான் உங்களைப் பார்த்தேன். உங்களை ஏமாற்றி
அவமானத்தில் தள்ளி விட்ட ஒரு பெண்ணின் துயர் துடைக்க செய்த
வற்றை எல்லாம் பார்த்தேன். அதுக்காக உங்களை எப்படி பாராட்டு
றதுன்னே தெரியலை!''

''நானொன்றும் பெரிய விஷயம் செய்திடலை வர்ணா, சந்தியா
முகவாட்டத்தை என்னால பார்க்க முடியாது. அவமேல நான் வைச்ச
அன்பை காதல்ன்னு சொல்லமாட்டேன். எங்களுக்குள் நல்ல புரிதல்,
இருந்ததுன்னு நினைச்சேன். இன்பேக்ட் ஒளிவுமறைவு எதுமில்
லைன்னு தோணிற்று!''

''நான் ராஜாவை நேசிக்கிறேன்னு அவ என்கிட்டே வெளிப்ப
டையா சொல்லி இருக்கலாம். கல்யாணம் வரை கொண்டு போய்
இருக்க மாட்டோம்''

''ஏமாற்றம் அதிகம் தான் இல்லையா?''

''தொழிலில் ஓரளவு நான் சாதிக்கத் துவங்கிய நேரம், வி.ஐ.பி.ஸ்
பிரண்ட் லின்னு பெரிய சர்க்கிள் எல்லா வட்டத்திலேயும் அவமா
னம், ரொம்ப நெருக்கமானவங்க கூட கேலியா பேச துவங்கிட்
டாங்க. இது எல்லாத்துக்குமே சந்தியா காரணம் ஆயிட்டாளேங்கிற
வேதனை பார்க்கிறவங்க மேலெல்லாம் வெறுப்பு.''

''அப்போ சந்தியா மேல உங்களுக்கு லவ் இல்லையா? விநாடி
யில் வெறுப்பும், நேசமும் மாறி மாறி வருவது காதலில் மட்டும் தான்
சித்து.''

''சந்தியாவுக்கும் எனக்கும் ஒரு ஒட்டுதல் இருந்தது. தொழில்
முறையில் அவ என்னை ஊக்குவித்ததும் ஒரு காரணம். அளவுக்கு
அதிகமான அக்கறை உண்டு அவளிடம்! சந்தியா என் வாழ்க்கைத்
துணையாய் வந்தால் என் வாழ்வு சிறக்குமென்று அம்மா கேட்ட
போது மறுக்க வேறு எந்தக் காரணமும் தெரியவில்லை.''

''ஆனாலும், சந்தியாவிடமும் கேட்டு முடிவு செய்யுங்கள் என்று
சொன்னேன். அவளும் தன் விருப்பமின்மையை கோடிட்டுக் காட்
டத்தவறி விட்டாள். நகை, புடவை என்று சகஜமாய் தான் இருந்தாள்.
ஆனால் பழைய கேலியும், கிண்டலும் இல்லாமல் ஒரு அமைதியு
டன்! சரி கல்யாணம் ஆவப்போவதால் வெட்கம் என்று நினைத்



தேன்.''

''அவள் விருப்பம் அறியாமல் நான் எதுவுமே செய்ததில்லை
தெரியுமா? என்னிடம் ஒரு வார்த்தை கோடிட்டு காட்டியிருந்தால் கூட
நான் புரிந்து கொண்டிருப்பேனே அதைச் சொல்லாமல் எல்லாக்
குழப்பத்துக்கும் காரணமாகி விட்டாள்.''

''தவறு அவளுடைய தாய் மட்டும் இருக்க வாய்ப்பில்லையோ?
உங்களுடன் அன்புடன் பழகி அது திருமணம் வரை வந்ததால்
சொல்ல தயங்கி இருக்கலாமோ! வேற வழியில்லாம பயத்திலே கூட
அப்படியொரு முடிவு எடுத்திருக்கலாம் இல்லையா? அவளையே
மன்னிக்கத் தயாராகி விட்ட நீங்கள் இன்னமும் பெற்றவர்களை ஏன்
கஷ்டப்படுத்த வேண்டும்?''

''வர்ணா எனக்கும் அப்போது 24 வயது தான் எதிலும் வேகம்
எதையும் அடையத் துடிக்கும் உள்ளம், தொழிலில் சாதிக்கத் துவங்
கினேன். சரியான பக்குவம் இல்லாததால் எல்லோரிடத்திலும்
வெறுப்பும் கசப்பும் உண்டானது.''

''எங்கேபோனாலும் துக்கம் விசாரிக்கிற மாதிரி இதைப் பற்
றியே பேசிப் பேசி, அப்படி யாராச்சும் நிஜமான அக்கறையா பேச
றது கூட எனக்கு கேலியும், கிண்டலுமாத்தான் தெரியும். அப்போ
வெல்லாம் தான் அடைஞ்ச வேதனைக்கு அளவே இல்லை வர்ணா,''
அவன் குரல் தழுதழுத்தது.

''அதற்குப் பிறகு ஏமாற்றத்தை விழுங்கிட்டு தொழில் முழுவ
தும் கவனம் வைத்தேன். படிப்படியா உயர உயர எல்லோரும் தேடி
வந்தாங்க. ஆனா கல்யாணம் பெண்கள் என்றாலே வெறுப்பு அலர்ஜி,
பயம்.

காலையில சந்தியா ஆபீசுக்கு வந்தா. அவ புருஷன் ராஜாவுக்கு
ஆக்ஸிடெண்ட்டாம். அவ செய்தது தப்புதான். ஆனா மனசு தாங்
கலை, ராணி மாதிரி வாழ வேண்டிய பொண்ணு வயிற்றில் பிள்ளை
யோட யாரோ மாதிரி தாங்க முடியலைம்மா!''

''சந்தியா மேல உங்களுக்கு கோபம் வரலையா?''

''கோபத்தைக் காட்டிலும் ஆதங்கம் காதல்ங்கிற பேர்ல அவ
செய்த காரியத்தினால எல்லோருக்கும் அவமானம் சந்தியாவிற்கும்
குற்ற உணர்வு. இந்த பெயின்டிங் கூட அவ செலக்ட் பண்ணின கிரீட்
டிங் கார்டு பார்த்து வரைந்தது. அவளுக்கு பிரசண்ட் தருவதற்கு வைத்
திருந்தேன்.''

''இன்று வரிசையா நடந்த மனக்குழப்பத்தின் உச்சத்தை உன்
கிட்டே இழக்க வேண்டியதா போச்சு! மன்னிச்சிடும்மா! ஐயோ
என்னது முரட்டு விரல் பதிஞ்சு போச்சில்லே'' கவலையோட அவளின்
கன்னத்தை வருடிட, சில விநாடி திகைப்பிறகு பிறகு இயல்பிற்கு வந்
தது சித்தார்த்தன் தான்.

பின் தயங்கியபடி, அவனிடம் இருந்து விலகி எழுந்து வா அவன்

தடவிய கன்னத்தை ஆசையோடு வருடினாள் வர்ணிகா.
நடவிய கன்னத்தை ஆசையோடு வருடினாள் வர்ணிகா.
எண்ணங்கள் காட்டாறு போல எல்லையற்று பாயக்கூடியவை.
அப்படித்தான் இப்போது வர்ணிகாவின் மனமும் சித்தார்த்தனிடம்
பாயத்துவங்கி இருந்தது. அலைபாயும் மனமும் விழிகளும் அம்மு
கம் காணவே தவித்தது. அந்த தொடுதலையும், ஏதோவொன்றைத்
தேடும் கண்களும் அந்தப் பார்வையும் அவளையும் மீறி மனம் அவ
னிடம் ஓடத் துடித்தது.

அன்றைய நிகழ்விற்கு பிறகு, சித்தார்த்தன் மிகவும் இயல்பாகவே
இருந்தான். கூடுமானவரையில் பழைய உற்சாகத்தோடு திரிந்தான்
என்றே சொல்லலாம். இளங்கோவை சீண்டினான். தாயிடம் அதிக
நேரம் செலவிட்டான். தந்தையிடம் அலுவல் பற்றி விசாரித்தான்.

மற்றவர்களுக்கு அவன் போக்கு மிகுந்த வியப்பைத் தந்தாலும்,
ஆனால் யாருமே அதை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. மீறி எதா
வது கேட்டால் மீண்டும் நத்தையாய் கூட்டில் சுருண்டு விடுவானோ
என்ற பயத்தில் எல்லோருமே அமைதியாய் இருந்து விட்டனர். வர்
ணிகாவுடனும் நேரடியாக அவன் பேச முற்படவில்லை. எதிர்படும்
நேரங்களில் மெல்லிய புன்னகை மட்டுமே, அதரங்களில் படரும்.
ஆனால் மூடிய உதடுகளுக்குள் கோர்க்கப்பட்ட முத்துக்களாய் வார்த்
தைகள் அணிவகுக்கும்.

பிறர் பார்வையில் தள்ளித் தள்ளி இருந்தாலும், மனதளவில்
வெகு அருகாமையில், இணைந்த விழிகள் மீள இயலாமல் ஒன்
றோடு ஒன்று கட்டுண்டு கவிதை பாடி, பிரியும் சமயம் சொக்கிப்
போய் மயங்கி பின் மீண்டு, பால் முகத்தை மனதில் பதிய வைத்து
நினைத்துநினைத்து ரசித்து பூவாய் பூக்கும் மனம்.

அன்று அதிகாலை வழக்கம் போல் காபி கோப்பையை கையில்
பற்றியபடி ஈரக் கூந்தலை விரலால் அளந்தவாறே தோட்டத்து பூக்க
ளையும், அதிகாலைப் பனிபடர்ந்த எழிலையும் ரசித்தபடி இருந்தவ
ளின் கண்களில் பட்டது, சித்தார்த்தனின் உருவம்.

பெர்மடாஸும் இறுகப் பிடித்த பனியனுமாய் உடற்பயிற்சி
செய்து கொண்டு இருந்தான். வேகமாய் இழுத்த மூச்சுக்காற்று ஏறி
இறங்கி இறுகப் பிடித்திருந்த இடங்களை பார்த்து ஏங்கச் செய்தன.
முத்து முத்தாய் வியர்வைகள் பயிற்சியில் தோன்றிய மெல்லிய
களைப்பு கூட அவனுக்கு கம்பீரத்தையே தந்தது.

அந்த நெடிய கரங்களுக்கும், அகன்று விரிந்த மார்பிற்கும் அவ்
வலிமை அடைய இப்பயிற்சி அவசியம்தான். சில தினங்களாய் அவ
ளைத் தவிக்க விட்டு பல்வேறு கற்பனைகளை வளர செய்த கண்கள்
இன்று தரைதாழ்ந்து கிடந்தன.

பூத்துவாலை மூலம் உடம்பில் பெருகிய வியர்வை முத்துக்களை
ஒற்றியெடுத்தான். நிமிர்ந்தவனின் பார்வையில் அவள் படவும், உட
லில் ஒரு குறுகுறுப்பு. அவன் இதழ்களில் விரிந்த புன்னகையில்



மனம் குளிர்ந்தாள் வர்ணிகா. கிண்டலாய் கோபமாய் எடக்கென
வார்த்தைக்கு வார்த்தை பேசிய போது ஏற்படாத சர்ப்பும் தயக்கமும்
இன்று இதழோரப் புன்னகையில் தோன்றிவிட்டது. ஓசையின்றி
மறைந்து விட்டாள். இது புது அவஸ்தைதான் இந்நிலை எப்போதி
ருந்து?

அவன் பார்வையை சந்திக்கும் நேரமெல்லாம், உச்சி முதல்
உள்ளங்கால் வரை மின்சாரம் போல் வேகமாய் ஊடுருவும், இவை
யெல்லாமே அவன் தொட்ட நாளில் இருந்துதான். ஆண்மகனின் சிறு
தீண்டலுக்கு இத்தனை மதிப்பா? அவனின் கோபத்தை தூண்டி
வலையில் இருந்து அவனை வெளிக்கொணர மட்டும்தான் எண்ணி
னாளே தவிர்த்து, இன்று இவளே அவன்புறம் சாய்ந்து விட்டாளே!

எதையும் வெளிப்படையாய் பேசும் அவளின் குணம், இந்த ஒரு
விஷயத்தில் மட்டும் பின்வாங்கி தயக்கம் கொள்கிறதே! அவனின்
பார்வைகளைக் கூட சந்திக்க மனமின்றி சரணடைந்து விடுகிறாளே?
இந்நிலை புதிதாய் இருப்பினும் பரவசமாய் இருந்தது வர்ணிகா
விற்கு!

முன்பெல்லாம் இரவு 10 மணிக்கு உறங்குகிறாளோ இல்லையோ?
அறைக்குள் வந்து முடங்கி விடுவாள். ஒரு சில நேரம் அதிசயமாய்
வெளியில் இருந்தாலும் அது சித்தார்த்தனை சந்தித்து, ஏடாகூடமாய்
பேசி பதிலுக்கு எதாவது வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டுமே
என்ற காரணத்தினால், உறக்கம் வருகிறதோ இல்லையோ? அறைக்
குள் சென்றுவிடுவாள். ஆனால் இன்று அதே சித்தார்த்தனுக்காய் காத்
திருக்க ஆரம்பித்தாள். சோமு அண்ணன் பிரஷர் காரணமாக சீக்கிரம்
உறங்கச் சென்றுவிட, சித்துவிற்கு சாப்பாடு இடும் பொறுப்பு அவள்
தலையில் விழுந்தது.

வியப்பாய் இருந்தது. இப்படி ஒரு காத்திருத்தல் யாருக்காவும்
இதுவரையில் நடந்ததில்லை. இன்றோ அவனிடம் என்ன பேசலாம்
என்று கூட மனம் ஒத்திகை செய்யத் துவங்கியது. நேரம் காத்திருக்கா

"நீங்க பெரும் பணக்கா
ரங்களா..."
"ஏன்..கேட்கிறே?"
"இது உங்க சொந்த கிரா
மம்னு சொன்னிங்களே"
-ராஜிராதா, பெங்களூர்.



மல் கடந்தது.
வெகுநேரம் கழிந்த பிறகு தான் சித்தார்த்தன் வந்து சேர்ந்தான்.
கதவை திறந்த நேரம் ஒரு விநாடி கண்களை மூடி கதவின் மேல்
சாய்ந்து இருந்தவனைக் கண்டதும் பாவமாய் தோன்ற ''சித்து?'' என்
றழைத்தாள்.

''ம்... வர்ணா நீ....

தூங்கப் போகலையா? நேரமாகுதே?'' கையை மடக்கி நேரம்
பார்த்தான்.

''தூக்கம் வரலை? டி.வி. பார்த்திட்டு இருந்தேன்''

''வாக் போக வேண்டியது தானே?''

கதவைத் தாழிட்ட படியே, ''இரவு நேரம் அதனால் வீட்டிற்குள்
ளேயே நடந்தேன்''

''ஏன்? தோட்டத்தில் பவர் கட்டா. இல்லை, விளக்குகளை எல்
லாம் மறைக்கும் அளவிற்கு மரங்கள் வளர்ந்து விட்டனவா?''

''ஏதாவது பூச்சி வந்தால்?....''

''புலியையே முறத்தால் அடித்த பெண்ணிடம் கேவலம் புழு,
பூச்சிக்கு பயப்படுவானேன். நினைக்கவே வேதனையாக இருக்கி
றது?''

''பகை கண்ணுக்கு தெரிந்தாலும் வீழ்த்துவது சுலபம் இல்
லையா?'' அதே கிண்டலான தொனியில் அவளும் கூறிட...

''பசிக்கிறது வர்ணா?''

''செவிக்கு உணவு இல்லாத போதுதான் வயிற்றுக்கு இட வேண்
டும். வள்ளுவர் வாக்குப்படி நடந்தால் வாழ்வு சிறக்கும்''

''இப்போது எனக்கிருக்கும் பசியில் எதிரில் நிற்பவரையே
கடித்து தின்றுவிடுவேன்'' என சைகையுடன் அவன் கூறிட,

''ஐய்யைய்யோ... !நான் இன்னும் நிறைய நாட்கள் வாழ வேண்
டும் ஸ்சுவாமி வாங்க பசியாறிவிட்டு பிறகு வாயாடலாம்!''

சிரித்தபடியே, ஹாட்பேக்கிலிருந்து சூடான இட்லியையும்,
இரண்டு விதமான சட்னியையும் பரிமாறி நெய்யில் குழைத்த
மிளகாய் பொடியையும் வைத்தாள். ''ஏன் இத்தனை நேரம் சித்து?''

''இரண்டு புது ஆர்டர் வந்தது அதனால்தான் தாமதம். வீட்டில்
எல்லோரும் சாப்பிட்டார்களா?''

''ஆச்சு..!''

''சாரிம்மா... பாவம் நீ என்னால உனக்கு சிரமம்.''

''சமைத்ததை எடுத்து வைக்கிறேன் இதிலென்ன சிரமம்.
நானென்ன சோம்பேறியா? இந்த சிறிய வேலையைக் கூட என்னால்
செய்ய முடியாதா?''

''உனக்கு சமைக்கத் தெரியுமா வர்ணா?''

மேலும் இரண்டு இட்லிகளை தட்டில் வைத்துவிட்டு, ''சுமாரா
சமைப்பேன்'' என்றாள்.



தினமும் சோமு அண்ணாவோட சமையல் அலுத்துப் போய் விட்
டது. முன்பெல்லாம் அம்மாதான் சமைப்பாங்க, அதை விடவும் பரி
மாறும் போது ஏதாவது பேசியபடியே ஒரு வாய் அதிகமா சாப்பிட
வைச்சிடுவாங்க. நீயும் அம்மா மாதிரி பேசிகிட்டே அதிகமா பரிமா
றிடுறே?'' கைகளை சுத்தம் செய்தபடியே? ''நீ ஒரு நாள் எங்களுக்
காக சமைக்கிறியா? என்றான்.

''நீங்களே ரிஸ்க் எடுக்க தயாராய் இருக்கும் போது நானேன்
யோசிக்கணும்? இதனால் வரும் பின்விளைவுகளுக்கு நான்
பொறுப்பு இல்லை.''

''எதையும் தாங்கும் மனதோடு துணிவோடு உன் சமையலை சாப்
பிட தயாராகிறோம்.''

''ஆர்டர் செய்திட்டீங்க? மெனு என்ன சித்து?''

''உனக்கு எது நல்லா செய்ய வருமோ அதையே பண்ணு. சமைச்ச
பரிமாறியதும் ஆம்புலன்ஸிக்கு ஒரு போன் பண்ணிடு''

''நானே பர்ஸ்ட் சாப்பிட்டு என்னை சோதனை பண்ணிடறேன்''
என்று சொல்ல இருவருமே இணைந்து நகைத்தார்கள்.

''உன்கூட பேசும்போது மனசு இலேசாகிடுது வர்ணா....!''

மென் முறுவலுடன், ''அதனால்தான் பார்க்கும் போதெல்லாம்
சண்டை போட்டீர்களாக்கும் என்று கேட்டான்.

''நீ மட்டும் சண்டையே போடலையா?''

''அதெப்படி நான் மறத் தமிழச்சி வம்பு சண்டைக்கு போகவும்
மாட்டேன் வந்த சண்டையை விடவும் மாட்டேன்''

''அதான் அன்னைக்கு கோவில் வாசலில் பார்த்தேனே''

''எப்போ?''

''குழந்தை மாதிரி கோவில் சிலையுடன் பேசியதையும், சில பசங்
ககிட்டே முறைச்சதையும்''

விழிகளை அகலமாய் விரித்து ''நீங்க பார்த்தீங்களா?''

''நம்பலையா? நீ அன்னைக்கு சிலைகிட்டே என்னென்ன பேசி
னேன்னு கூட நினைவிருக்கும், சொல்லட்டுமா....?'' குறும்புடன்
கூடிய முறுவலில் அவன் கேட்க, குழைவாய் பார்த்தாள். நான்கு ஜோடி
கண்களும் ஒன்றோடு ஒன்று நோக்கின.

''உனக்கு என்ன பிடிக்கும் வர்ணா?''

''ரசனைக்கு கணக்கு ஏது? இயற்கையின் நீண்டல் அதன் அழகு.
லவ்பேர்ட்ஸ் முக்கியமா கிளிகள் அதோட சப்தம் நாள் பூரா கேட்டுக்
கிட்டே இருக்கலாம்''

''அப்படியா?'' தலைசரித்து இயல்பாய் கேட்டு விட்டு பின் சரி
நேரமாகிறது போய் தூங்கு அதிக நேரம் விழித்தால் காலையில் நடக்க
முடியாது'' என்று அவன் கூறிட அவளும் வெகு சிரமப்பட்டு கண்
களை அவனிடம் இருந்து பிரித்து நடந்தாள் பதுமையாய்.

## 11

மறுநாள் காலையில் உடற்பயிற்சி முடித்து திரும்பியவன் தோட்டத்தின் தெற்கு மூலையில் எதையோ ஊன்றி கவனித்தபடி இருந்த வர்ணிகாவிடம் சென்றான்.

''என்ன வர்ணா?''

''ஷ்.........!'' ஆட்காட்டி விரலை சிவந்த அதரங்களில் பொருத்தி பார்வையை மட்டும் விரட்டினாள். அவள் காட்டிய திசையில் ஒரு சந்தன நிறத்தில் கறுப்பு வண்ண கோடுகளைத் தாங்கிய பூனை, சில தினங்களுக்கு முன் ஈன்ற குட்டிகளுக்கு, பாலூட்டிக் கொண்டும், பிறகு நடைபயில கற்று கொடுப்பதைக் காணவும் வெகு ரம்மியமாய் இருந்தது.

அவனும் அவளுடன் அமர்ந்து அதைக் கண்டான். அருகாமையிலிருந்து சிறிய செடியின் மறைவில் தன் குட்டிகளை சேர்த்து வைத்து விட்ட பிறகு, தாய்பூனை இரை தேட சென்றது போலவும்,

''பார்த்தீங்களா சித்து எந்த ஜீவராசிக்கும் தாய்மையென்பது எல்லாம் எத்தனை உன்னதம்''

''ஐந்தறிவுள்ள ஜீவன் தன் பிள்ளைகளுக்கு பசியாறச் செய்து, நடைபயில கற்றுக் கொடுத்து பாதுகாப்பு ஏற்பாடு செய்து என்று எத்தனை பாந்தம் இல்லை''

''ம்.. தாய்மையின் புனிதம் இதெல்லாம் உணரவே இனிக்கிறது வர்ணா.''

அதற்குள் மீண்டும் தாய்ப்பூனை சோர்ந்து போய் வர, மற்ற சிறிய பூனைகளெல்லாம் அதன் மடிப்பாகத்தை தங்கள் சிறிய நாக்கினால் வருடித் தந்து தங்கள் பசியை உணர்த்தின.

வர்ணிகா ஏதோ நினைப்பு வந்தவளாய், உள்ளே ஓடினாள். திரும்பி வரும் போது அவள் கைகளில் சின்னதும் பெரியதுமாய் மூன்று கிண்ணங்கள் அவற்றில் பதமான சூட்டில் பால் இருந்தது. அவற்றை அதன் முன்பு வைத்தாள். முதலில் யோசித்து அந்நியத்தனமாய் பார்வை பார்த்து மெல்ல முன்னேறி வந்து தன் நாவை நீட்டி பாலைக் குடிக்கத் துவங்கின.

அதையே ரசனையோடு பார்த்துக் கொண்டிருந்தனர் இருவரும். பிறகு சித்து ஒரு பெரிய இரும்பு கூண்டு ஒன்றினை கொண்டு வந்தான். மெல்ல அப்பூனையை தடவிக் கொடுத்து அவற்றை உள்ளே வைத்தான்.

''ஏன்? எதற்கு சித்து..''

''குட்டிகள் ரொம்பவும் சிறியது ஏதாவது தூக்கிக் கொண்டு போய் விட்டால், இதே போல் சோமு அண்ணாவிடம் சொல்லி அவ்வப்போது பால் வைக்கச் சொல்லலாம்.'' அந்த தாய்ப்பூனை அவர்கள்



இருவரையும் நன்றியோடு பார்ப்பது போல் இருந்தது.

''சரிம்மா, நான் குளிச்சிட்டு ஆபீஸ் கிளம்பறேன்'' அவள் தோளை ஒருமுறை அழுத்தி விட்டு பின் கிளம்பினான்.

வர்ணிகா குளித்து முடித்து கீழிறங்கிய போது சித்தார்த் அலுவலகம் போய் விட்டிருந்தான்.

''என்ன மகாராணிக்கு இப்போதான் விழிப்பு வந்ததா?''

''அவளையேன்டா கிண்டல் பண்றே? அவ காலையிலேயே எழுந்து வாக்கிங் எல்லாம் பண்றா? உன்னை மாதிரி குறட்டை விட்டு தூங்கலை''

''விடுங்க அத்தை! இளங்கோ இன்னும் வளரவே இல்லை குழந்தையாவே இருக்கார்''

''ஹேய் யாரைப் பார்த்து குழந்தைங்கிறே, என்னோட ஹைட் வெயிட் என்னென்னு உனக்குத் தெரியுமா?''

''வளர்ச்சிங்கிறது உடலை மட்டும் வைத்து சொல்வதில்லை இளங்கோ மனதையும் வைத்துதான். அந்த வகையில் நீயும் இன்னும் பச்சா தான்!'' கடியும் குரலில் அவள் கூறியதைக் கேட்ட ராமநாதன், ''என்னம்மா சொல்றே'' என்றார்.

''அங்கிள் இளங்கோவோட வயசு என்ன?''

''24 முடியப் போகுது இந்த தை வந்தா?''

''இந்த வயசுலே நீங்களும், சித்துவும் என்ன செய்துகிட்டு இருக்கீங்க?''

''தனியே தொழில் துவங்கி ஓரளவு வளர்ந்திட்டு இருந்தோம்''

''கரெக்ட் அந்த வளர்ச்சி இன்னமும் இளங்கோவிடம் வரலைன்னு தானே அர்த்தம். 24 வயது வரை பொறுப்பில்லாமல் ஊர் சுற்றும் இளங்கோவை எப்படி வளர்ந்திட்டாருன்னு சொல்ல முடியும்''

''வர்ணீ நான் எம்.பி.ஏ. முதல் வகுப்பு! என்னையா பொறுப்பில்லாதவன்னு சொல்றே?''

''இளங்கோ நீ ஒரு விஷயம் புரியாமல் பேசறே? சித்து இறுகிப்

''குழந்தைக்கு அப்படியே அப்பா குணம்...''

''எப்படி சொல்றே?''

''வேலைக்காரி ஊட்டினா தான் சாப்பிடுறான்''

-பி.பாலாஜிகணேஷ், சிதம்பரம்.



போறதுக்கு அவருடைய கல்யாண விஷயம் மட்டும் இல்லை, பிஸினஸ் டென்ஷன். ம்.. காரணம், யோசி, இப்போ இருக்கிறே மார்க்கெட் காம்படீஷன்ஸ் இதிலே இரண்டு பிராஞ்ச் மெயின்டென் பண்றது ஒண்ணும் அத்தனை சுலபமான காரியம் இல்லையே?''

''எத்தனை பிராப்ளம்சை தனியா பேஸ் பண்ணிருப்பார். நீ படிச்சு முடிச்சது பர்ஸ்ட் கிளாஸ் தான் ஆனா என்ன யூஸ்? சித்து மாதிரி நீ இன்னமும் சாதிக்கலையே?''

''சரியா சொன்னேம்மா ஊர் சுத்தறதை நிறுத்திட்டு உருப்படியா ஒரு வேலையைத் தேடிக் கோன்னு நானும் பலமுறை சொல்லிட்டேன். ஆனா இவன் கேட்டபாடில்லை.''

''என்னப்பா நீங்களும் இப்படி பேசறீங்க?'' ஆதங்கமாய் கேட்டான் இளையவன்.

இளங்கோவின் தோளில் கைவைத்தாள் வர்ணிகா. ''சித்தார்த் தோட மனசு இப்போ கொஞ்சம் கொஞ்சமா இளகிட்டு வர்றதை நீ உணர்றியோ இல்லையோ?''

''அவன் மட்டும் இல்லேம்மா, நாங்களும்தான். முன்பெல்லாம் மருந்து சாப்பிடுங்க, ரெஸ்ட் எடுங்கன்னு மட்டும்தான் பேசுவான். ஆனா இப்போ எத்தனை அக்கறையாய் அன்பா பேசறான். அவனுக்குமே இளங்கோவைப் பற்றிய கவலைகள் உண்டு.''

''இளங்கோ! சித்துவுக்கு தன்னோட வாழ்க்கையைப் பற்றி கற்பனை செய்யக் கூட நேரமில்லை. அந்த அளவுக்கு மூச்சுமுட்டும் படி வேலைப்பளு. சந்தியாவுடைய விஷயமும் மனசைப் போட்டு குடைஞ்சப்போ இந்த பிஸினஸ் தான் அவரை எந்த தப்பான முடிவிற்கும் போக விடாமல் தடுத்தது.''

''ஏமாற்றங்கிறது மனதை எப்படி பாதிக்கும் தெரியுமா? சிலர் அதிலிருந்து மீளவே முடியாமல், பாதாளத்திற்குப் போய்விடறாங்க. ஆனா அந்த மாதிரி ஒழுக்கம் தவறாமல் வாழ்ந்ததே பெரிய விஷயம் இல்லையா?''

''ஆனா இப்போ மனதுக்குள் இருக்கும் இறுக்கம் கொஞ்சம் தளர்ந்தாலும் தன் எதிர்காலம் பற்றிய எண்ணங்களை சிந்திக்க விடாமல் செய்யறதும் இதே பிஸினஸ் டென்ஷன்தான். நீயும் கொஞ்சம் இன்ட்ரஸ்ட் எடுத்திட்டு பிஸினஸ்ல நீ இன்வால்வ் ஆகிட்டா அவருக்கும் கொஞ்சம் ரிலீப் ஆக வாய்ப்பிருக்கு''

''அது சரி ஆனா பழைய பாதிப்பு..!''

''உண்மையை சொல்லணுமின்னா, சந்தியா பண்ணிட்டு போன துரோகத்தை அவரே மறந்திட்டார். நிஜம்தான் இளங்கோ. உங்களுக்கு எல்லாம் தெரியாத விஷயத்தை இப்போ நான் சொல்றேன். சந்தியாவோட புருஷனுக்கு ஆக்ஸிடெண்ட் இப்போ ஆஸ்பிட்டலில் இருக்கார், அதுக்கு ஆகுற அத்தனை உதவியும் செலவும் பாக்குறது சித்தார்த்தான்.''



அனைவரின் முகங்களிலும் வியப்பு.

''சித்து மனசால ரொம்பவும் நல்லவர். இப்போ பிரச்சனையை அவரே மறந்திட்டார். நாலு இடம் உறவுகள்னு வரும் போது அவர் மனமும் மாறிட வாய்ப்பிருக்கு இல்லையா?''

''நடக்குமா வர்ணி? அண்ணா மாறிடுவானா?'' வர்ணிகாவின் கைகளைப் பற்றியபடி கேட்டான் இளங்கோ.

''ஏன்? நடக்காது? இதே சித்தார்த் இதுக்கு முன்னாடி எப்படி இருந்தார். இப்போ அவர்கிட்டே ஒரு மாற்றம் தெரியுது இல்லையா? அதேபோல் இதுவும் நடக்கும். ஆனா நீங்களும் அதுக்கு ஒத்துழைக்கணும்..''

''கட்டாயம்! அதுக்கு நான்..?''

''பிஸினஸ்ல ஈடுபடணும் சித்துவோட மைன்டை கொஞ்சம் குடும்பம் பக்கம் திருப்பணும்''

''கண்டிப்பா வர்ணி நீ சொல்றபடி நடப்பேன். அண்ணன் பழைய மாதிரி மாறுவான்னா நான் எது செய்யவும் தயார்'' உறுதியாய் சொல்லிவிட்டு கிளம்பினான் இளங்கோ.

ராமநாதன் வர்ணிகாவின் கைகளைப் பற்றிக் கொண்டார்.

''ரொம்ப நன்றி வர்ணிம்மா! என் மனசிலே இருந்து ஒவ்வொரு பாரமா இறங்கிட்டே வருது. நீ செய்யற இந்த உதவிக்கெல்லாம் நானென்ன கைம்மாறு செய்யப் போறேனோ?''

''ஏம் மாமா பெரிய பெரிய வார்த்தை எல்லாம் பேசறீங்க?''

''இல்லேம்மா, இழந்த என்னோட நிம்மதியை நீ கொஞ்ச கொஞ்சமா மீட்டுத்தர்றேம்மா? உன் மேல் நான் வைத்த நம்பிக்கையை நீ காப்பாத்திட்டே!''

அதே நேரம் வீட்டு வாயிலில் வந்து நின்றான். பணியாள் ஒருவன்.

''மேடம் இங்கே வர்ணிகான்னு?''

''மைஷெல்ப்? நீங்க?''

''நான் ... பரீடெம் பேசஸ் பொட்டிக்கில் இருந்து வர்றேன். லவ் பேட்ஸ், கிளிகள் குருவின்னு ஆர்டர் பண்ணியிருக்காங்க, இடம்காட்டினா ரெடி பண்ணிடுவோம்''

''யார் ஆர்டர் பண்ணியது?''

''மிஸ்டர் சித்தார்த்தன் சார்தான்''

ஒரு கணம் மௌனம் நிலவியது. ராமநாதன் அப்பறவைகளை அமைக்க லிட்-அவுட்டில் இடம் காட்டிட செல்ல, வந்தவன் அவளிடம் ஒரு கார்டைத் திணித்தான்.

அன்புப் பறவைக்கு இனிய பரிசு என்று இருந்தது. சித்தார்த்தனின் கையெழுத்து. மனம் இறக்கை கட்டிப் பறந்தது. துள்ளிக் குதித்து ஆட வேண்டும் போல் இருந்தது.

''காலையில்தான் என்னை பிடிக்குமா என்று கேட்டான்? அதை

உடனே செய்தும் முடித்து விட்டான். ஆனால் இதற்கு என்ன காரணம்?'' குழம்பித் தவித்தாள்.

மஞ்சள் கலந்த பச்சை, நீலம், ஊதா என்று அழகழகாய் தன் சிறிய அலகுகளை விரித்து வீச் வீச்சென்று கத்துவதும், உடைந்த பானைக்குள் ஒன்றோடு ஒன்று துரத்துவதும், இரண்டு பச்சைக் கிளிகள் வேறு. அதன் கோபுரக் கலசம் போன்று வடிவமைக்கப்பட்டு இருந்த கூண்டில் சிறிய ஊஞ்சல் வேறு.

அக்கிளிகள் இரண்டும் அதில் ஆடி முத்தமிடுவதும், ஊஞ்சலில் ஆடுவதும் பார்க்கவே பரவசம் ஊட்டியது.

அப்பரிசு மனதை மிகவும் நெகிழ வைத்தது. நன்றி தெரிவிக்க வேண்டும் அவனிற்கு எனும் உந்துதல் வேறு!

ராமநாதனும், கலாவும் கோவிலுக்கு செல்வதாய் கிளம்பிவிட, இவள் அந்த கிளிகளோடும், பறவைகளோடும் விளையாடிக் கொண்டு இருந்தாள். இரையைப் போடும் போது அழகழகாய் அது தன் சிறு அலகுகளைக் கண்டு விரிப்பதும், பின்மூடுவதும் குரலை மூப்புவதும் நீருக்குள் தலையை அசைத்து நீர் சிந்தவும் என ஆசைதீர பார்த்துப் பருகினாள்.

கார் வந்து நின்றதையோ அதற்குள் இருந்து சித்தார்த்தன் அந்த பறவைகளோடு அவள் விளையாடுவதை ரசித்து பார்த்ததையோ அவள் அறியவில்லை. அவனும் அதை தடுக்கவில்லை. மாறாய், வர்ணிகா அக்குருவிகளின் தலையைத் தடவியும், கிளியின் மூக்கைத் தட்டுவதையும் அதற்கு இரை தருவதையும் அதை தூக்கித் தன் இதழில் வைத்து முத்தமிடுவது என அவளின் ஒவ்வொரு செயலையும் ரசனையோடு கண்டான்.

எதேச்சையாய் திரும்பியவள் அவனைக் கண்டதும், புன்னகைத்தான் ''பிடிச்சிருக்கா?''

''ரொம்ப... தேங்க்ஸ் சித்து. எவ்வளவு அழகு பாருங்களேன்'' என்று அவன் கைபிடித்து இழுத்து வந்ததோடு மட்டுமில்லாமல், கிளிகள் ஊஞ்சலில் ஆடி கூண்டில் தலைகீழாய் செய்யும் சாகசங்களைக் கண்டு சந்தோஷ மிகுதியில் அவன் கையை தன் நெஞ்சோடு இழுத்து தோளில் சரிந்து கொள்ள, சித்தார்த்தன் தன் வசம் இழந்து தான் போனான். ஒரு பெண்ணின் ஸ்பரிசம், அவளின் வாசனை, பூவுடலின் மென்மை, குழந்தையின் குதூகலம், கைகள் பற்றியிருந்த மார்பின் சீரான மூச்சு என அவளின் அருகாமையை அனுபவித்தபடி நின்றிருக்க, சந்தியாவும் அவனிடம் நெருக்கமாய் இதுபோல முன்னெல்லாம் அமர்ந்துண்டு, தொட்டுப் பழகியதுண்டு.

ஆனால் அப்போதெல்லாம், மனம் அலைபாய்ந்தது இல்லை. அந்த தொடுகையை விரும்பியோ, எதிர்பார்த்தோ இல்லை. ஆனால் வர்ணிகாவிடம் சர்ப்பு ஏற்பட்டதில் அவனும் வியந்துதான் போனான்.



அதற்குள் ஏதோ நினைவு பெற்றவளாய் சட்டென அவனை விட்டு நகர்ந்தாள்.

''சாரி..!''

''எதுக்கு சாரி..!'' குனிந்து சிவந்த அவள் மோவாயைப் பிடித்தபடி கேட்டான்.

''ஏதோ நினைப்பில் உங்களை...!'' அலஸ்தையாய் அவள் வார்த்தைகளைத் தேட.....!

சித்தார்த் மென்று விழுங்கிய சிரிப்போடு! பெரிய பெரிய வேலையெல்லாம் செய்கிறாய் போலா! என்றான்.

''என்னவாம்?'' இரையை பறவைகளுக்கு போட்டபடி வினவிட..,

''வீட்டுக்குள் வந்த முதல் நாளே என்னை கைகூப்ப வைத்தாய்! அம்மாவுடைய அத்தனை கவலைகளையும் மெல்ல மெல்ல மறக்கடித்து நடமாடி திரிய வைத்தாய், அப்பாவின் முகத்தில் பழைய சிரிப்பு, இதற்கெல்லாம் மேல இளங்கோவின் மனமாற்றம்!''

''நேற்று ஆபீஸில் வந்திட்டு அண்ணா எனக்கு டிரைனிங் கொடு நான் வேலையை கத்துக்கறேன் வந்தானா? என்னால நம்பவே முடியலை. நானும் எத்தனையோ முறை கூப்பிட்டு இருக்கேன். அப்போவெல்லாம் அலட்சியப்படுத்தியவன் நீ சொன்ன ஒரே வார்த்தையைக் கேட்டு வந்திட்டானே எப்படி வர்ணா''

''அன்பால எதையும் சாதிக்க முடியும்''

''நம்புகிறேன் இறுகிய பாறையாய் இருந்த என்னையே இளக்கி விட்டாயே!''

''சரி இந்த பறவைகள் எதற்கு திடீர்னு? நான் எதிர்பார்க்கவே இல்லை! காலையிலே ஏதோ சாதாரணமாய் சொன்னேன். அதுவும் அத்தையும், மாமாவும் வேற கூட இருந்தாங்களா? என்னாலே எதை

''என்ன சார் இது நீங்க பேங்க் மேனேஜர் பிச்சைக்காரனுக்கு போய் இப்படி பயப்படுறீங்க''

''சத்தமா சொல்லாதீங்க எங்க பேங்க்குல அவர்தான் நிறைய முதலீடு செஞ்சிருக்கார்''

-பி.பாலாஜிகணேஷ்,
சிதம்பரம்



யும் சொல்லவே முடியலை''
அவன் சிரிக்க.. இப்போ என்ன திமிர் பரிசு? கண்களில் ஒருவித குழைவோடு அவள் கேட்க,
''அதையே கேட்டால் சொல்லி இருக்குமே!''
''கேட்டேன் உங்களைப் போலவே நல்ல முசுடு போல...! பேசவே இல்லை.''
''அதனால்தான் முத்தமிட்டு உன் வசப்படுத்த முயன்றாயோ..!'' அவன் கேள்வியின் உள்ளர்த்தம் என்னவென்று கண்டுபிடிக்க முடியாமல் வர்ணிகா திணறினாள்.
''நான் கிளியை கூறினேன். முகம் திருப்பி சென்றதும், இன்று உனக்கு முத்தமிடவும் ஆசையாய் வருகிறதே'' என்றான்.
''ம்.. இதை நான் எதிர்பார்க்கவும் இல்லை உண்மையைக் கூறினால் நம்பவே முடியவில்லை?''
''ஏன்?''
''பெண் என்றாலே கசப்பவர், அதிலும் ஒரு நிமிடம் கூட வீணாய் செலவழிக்காதவர் எப்போதும் தன்னிடம் வம்பு சண்டை போடும் பெண்ணிற்கு பரிசளிப்பது என்றால்... எப்படி நம்ப முடியும்?'' தலையைச் சரித்து வில் போன்ற ஒற்றைப் புருவம் தூக்கி அவள் கேட்டிட,
''அப்படியா? நம்ப வைக்க ஒரு வழி உண்டு செய்யவா?''
''என்னது?''
அவளின் புஜத்தில் கிள்ளினான்.
''ஸ்.. ஆ.... வலிக்குது''
''இப்போ நம்புறியா? நிஜம்தான் என்று! கற்பனையில் வாழ எனக்குத் தெரியாது கண்மணி!''
சில விநாடிகள் இருவரின் பார்வைகளும் இமைக்காமல் சந்தித்துக் கொண்டன.
''வர்ணா உனக்கு காரோட்டத் தெரியுமா?''
இவன் யோசனையோடு ''தெரியாது. இன்பாக்ட் எனக்கு சைக்கிள் கூட ஓட்ட வராது'' என்றான் வெகு அப்பாவித்தனமாய்!
''இஸிட்! இப்போ இல்லேன்னாலும் எப்போதாவது தேவைப்படும். வா நான் கத்துத் தர்றேன்''
''வேண்டாம் சித்து பரவாயில்லை. நீங்க பிரீயா இருக்கும் போது பார்த்துக் கொள்ளலாமே!''
''எனக்கு இப்போ வேலை ஒண்ணும் இல்லை. நான் தாராளமா கத்துதர்றேன்.''

## 12

இண்டி காவில் அவளை ஓட்டுநர் இடத்தில் அமர வைத்தான் ''பிரேக்கில் கால்வைத்து



அழுத்திவிட்டு கியர் போட்ட பின், ஸ்டேரிங்கை திருப்பிட வேண்டும். ஏதாவது வண்டி பின்னாலோ, சைடிலோ வந்தால்! பின்பக்க மிரர்ல பார்த்து ஹார்ன் தாணும்!''
என்று கூறிக் கொண்டே வண்டியை இயக்கிட,.. அவளின் முகம் வெகு அருகில் சித்தார்த்தனின் முகம் காதருகில் கிசுகிசுப்பாய் உருக வைக்கும் குரல், ஸ்டேரிங் வளையும் போது தோள்கள் விரல்கள் ஒன்றோடு ஒன்று உரசிக் கொண்டன. அவனிடம் இருந்து வெளிப்பட்ட பர்ப்யூம் மணமும் இலேசான வியர்வை வாசனையும் ஆண்மையின் அருகாமை எல்லாம் சேர்ந்து வர்ணிகாவை இம்சித்தது.
''ஏதாவது பேசேன் வரு...! என் அமைதியா வர்றணும்?''
குழைவான மிருதுவாய் வெளிவந்த அக்குரலின் கருக்கம் மயக்கத்தை தந்தாலும், ''என்ன பேசணும்?''
''நல்லவேளை எதுக்கு பேசணுன்னு கேட்காம இருந்தியே?''
''சந்தியாவுடைய கணவர் இப்போ எப்படி இருக்கிறார்?''
''ம்...! ஹி இஸ் பைன்.
காலல பிளேட் வைச்சு தைச்சு இருக்காங்க இன்னும் 15 நாளில் ராஜாடிஸ்சார்ஜ் ஆக வாய்ப்பு இருக்குன்னு டாக்டர் சொன்னார். சந்தியாவும் போன் பண்ணினா.''
''சந்தியா ரொம்பவும் பாவம் சித்து. பாவம் ஒரு இக்கட்டான சூழ்நிலையிலே தான் அந்த முடிவை அவ எடுத்திருக்கா! இத்தனை வளர்ந்த இடம் மனிதர்கள் இடையில் வந்த காதல், இதெல்லாம் மனசிலே போட்டு குழம்பி தெளிவில்லாம தான் அந்த முடிவை எடுத்திட்டா!''
''உண்மை. நீ மாலதி விஷயத்தில் சொன்னா மாதிரி சந்தியாவும் ஏதோ ஒரு அவசரத்தில் என்னை கல்யாணம் பண்ணியிருந்தா எங்க இரண்டு பேருடைய வாழ்வுமே வீணாப்போயிருக்கும். முன்னாருத்தும் வலியோடு ரணமாகி போக விடாமல் அந்த கல்யாணம் நின்னு போனதும் நல்லதுதான்'' அவனிடம் இருந்து பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது.
''கல்யாணம் நடக்கலைன்னு கூட நான் கலங்கலை, ஏமாற்றப்பட்டேன்னு தான் பீல் பண்ணேன். அதுதான் என் கண்ணை மறைச்சிட்டது. என் கலக்கம் பிறருக்கு தெரியக் கூடாதுன்னுதான் கோபங்கிற போர்வையை போர்த்திக் கொண்டேன். ஆனா உன்கிட்டே மாட்டிக்கிட்டேன்''
இத்தனை பெரிய புகைமூட்டத்தில் இருந்து என்னை மீட்டதற்கு நன்றிம்மா!''
''நன்றியெல்லாம் எதுக்கு? இன்பேக்ட் நான் வரலைன்னாலும் நீங்க இன்னும் கொஞ்ச நாளில் கிளியர் ஆகி இருப்பீங்க?''
அவன் மறுப்பதைப் போல் தலையசைத்து விட்டு, வண்டியின் வேகத்தை மேலும் சிராக்கி, ''நீ பெண்ணை உறைய வைத்து விட்டாய்.''

''சந்தியா பற்றி வீட்லே எதும் சொல்லலையா? சித்து?''

''சொன்னா அப்பாவும், அம்மாவும் எப்படி எத்துப்பாங்கன்னு தெரியலை. அவமேல இன்னமும் அவங்களுக்கு கோபம் இருக்கலாம்.''

''தப்பு சித்து....! சந்தியாவாலே கஷ்டப்பட்ட நீங்களே எல்லாத்தையும் மறந்த பிறகு அவங்க என்ன பேசப் போறாங்க? இப்போதைக்கு சந்தியாவுக்கு உறவுகள் அருகே இருப்பது தைரியம் தரும் இல்லையா?''

''நான் பேசுறேன் வரு...! கொஞ்ச நேரத்திலேயே நீ ரொம்ப நல்லா டிரைவ் பண்றே?''

இப்படியே பிராக்டீஸ் செய்தால்? இன்னமும் சீக்கிரம் கத்துக்கலாம்.''

''நீங்க வேற பக்கத்திலே இருப்பதால் பயமில்லாம ஓட்டறேன் இல்லேன்னா தொடவே மாட்டேன்.''

அவளின் பயந்து போன குரலில் இருவரும் இணைந்து நகைக்க, எதிரே வந்த ராமநாதனும் கலாவும் மிகுந்த வியப்பு கொண்டனர்.

பெற்றோரைக் கண்ட சித்தார்த்தனும் வர்ணிகாவும் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கினார்கள். ஒன்றாய் நின்றிருந்த இளையவர்களைக் கண்டதும் பெரியவர்களுக்கு மனம் இனித்தது. அதே முகமலர்ச்சியுடனேயே மகனிடம்,

''என்னடா தம்பி இரண்டு பேரும் காரை எடுத்திட்டு வெளியே போயிட்டு வர வேண்டியதுதானே ஏன்? தோட்டத்தையே பற்றி சுற்றி வர்றீங்க?''

''இல்லேம்மா வர்ணாவுக்கு டிரைவிங் தெரியாதுன்னு சொன்னா அதான் கற்றுத் தாலாம்னு?''

மகன் பேசியதைக் கண்ட தந்தை குறும்புச் சிரிப்புடன்

''வர்ணிகாவுக்கு, டிரைவிங் தெரியாதுன்னு உனக்கு யார் சொன்னது?''

''ஏன்? அவளேதான்?!''

''என்னம்மா இது எல்லாம் உன்னோட குறும்பா?''

வர்ணிகா தந்தையிடம் கண் சிமிட்டி சிரிப்பதைக் கண்டு



''இவர் பாடினதும் ஒரே கைதட்டல்''

''மறுபடியும்... பாடச் சொல்லியா?''

''பாடவே முடியாத படி கையைத் தட்டிக் கிட்டே கலைஞ்சு போயிட்டாங்க!''

-எம்.அசோக்ராஜா, திருச்சி





இதைப்போடு அவனிடம் திரும்பினான். வேலின் கூர்மையோடு பாய்ந்து வந்து விழிகளைக் கண்டு நகைத்தவன் ''எனக்கு டூ-வீலர், கார் டிரைவிங் எல்லாமே எப்பவோ தெரியும்.உங்களுக்கு ஒழுங்க ஓட்ட தெரியுதான்னு பார்த்தேன்''. அவன் முகத்தில் அசடு வழிந்தது.

''எதையும் ஆழ்ந்து யோசிக்கணும் சித்து? இப்போதான் புரியுது. உங்க மேல் மாடி கொஞ்சம் காலியா இருக்குதுன்னு'' அவள் நெற்றிப் பொட்டைத் தட்டியபடி கேட்க, சித்தார்த்தன் ''ஏய்?'' என்று கையை உயர்த்தி அடிக்க வருவது போல் பாவனையோடு வர இவன் அவன் பிடிக்கும் முன் அகப்படாமல் ஓடினாள்.

சித்தார்த்தன் அவளை ஆசையுடன் விரட்டிட ஒருவித லயிப்போடு அதனைப், பெற்றோர்கள் இருவரும் ஒருவரையொருவர் வியப்போடு பார்த்தனர்.

''ஏங்க என் மனசிலே ஒரு எண்ணம் தோணுது.''

இளசுகள் போகும் திசையைப் பார்த்தபடி பேசிய மனைவியின் முகத்தை பார்த்தவாறு, ''நீ எதைப்பற்றி பேசவர்றேன்னு எனக்கும் புரியுது. கலா... இவங்க இரண்டு பேரையும் வாழ்க்கையிலே சேர்த்தா என்னான்னு?....!''

''ஆமாங்க.... எத்தனை பொருத்தம் பார்த்தீங்களா?''

''வர்ணிகாவைப் பார்த்த அப்பவே எனக்கு இது தோணிச்சு. ஆனால் உன் பையன் என்ன சொல்லுவானோ?''

''ஏங்க அவன் முன்னே மாதிரி இல்லையே, உண்மையிலேயே ஒரு மாற்றமும் செயலில் ஒரு தெளிவும் இருக்குதே ஆனா உங்க நண்பர் இதை ஒப்புக் கொள்வாரா?''

''என்ன பேசற கலா? உன் மகளை எங்கூட அனுப்புறீயான்னு கேட்டப்போ பதில் பேசாதவன் இதுக்கா மறுக்கப்போறான்?என் பயமே வேறே?''

கேள்வியாய் நோக்கி மனைவியிடம்,

''உன் பிள்ளை?''

''யாரு? பெரியவனா?''

''அவனேதான். இப்போ ஏதோ கொஞ்சம் இறங்கி வந்திட்டான். இது நிரந்தரமான்னு புரியலை. கொஞ்சம் யோசி, நாமனா ஏதாவது பேசிட்டு நாளைக்கு நடக்கலைன்னா அதை தாங்கிக்கக்கூடிய சக்தி நமக்கு இல்லையே?''

கலாவும் கணவரின் பேச்சை ஆமோதித்தார்.

''எனக்கென்னவோ, சித்துவுக்கும் வர்ணிகாவுக்கும் இடையிலே ஏதோ இருக்குன்னு தோணுது.''

''சரிம்மா. இதைப்பற்றி அவனிடம் பேசக் கூடிய ஒரே ஆள் யார் தெரியுமா?''

''யார்?''

''இளங்கோ''



''என்னங்க இது அவன் சின்னப் பையன்.''

''இல்லேம்மா இந்த விளையாட்டுத்தனமே பெரிய பிரச்சனையை தைரியமா அசட்டுத் துணிச்சலோட கையில் எடுக்கும்.''

கணவரின் பேச்சிற்கு பாதி அசைந்து தந்தார் கலா. ''இருந்தாலும், இளங்கோ ஏதாவது பேசப் போய் உள்ளதும் கெட்டுப் போன கதையாய் ஆகிவிடக்கூடாதே.''

தாய்க்கு தலைமகன் மேல் சடில்லா பயம் இருப்பது தவிர்க்க முடியாததல்லவா. அவன் இத்தனைப் பாதிப்பில் விழுந்ததில் மனம் குமைந்தது அவர்தான். இதிலிருந்து ஒரு விடிவு பிறக்காதா என்ற தவிப்பில் இருந்தவருக்கு வர்ணிகாவின் வரவு அமிர்தமாய் இருந்தது.

ஆனாலும் மகனின் கணிப்பு என்னவாயிருக்கும் என்று அவரால் யூகிக்க முடியவில்லை. பார்வைக்கு இருவரும் நெருங்கி பிணைந்திருப்பதைப் போல் தோன்றினாலும் மனம் இசையுமா? ஏராளமான கேள்வியோடு விடையை எதிர்பார்த்து காத்திருந்தார் கலா.

வர்ணிகா சொன்னது போலவே சித்தார்த்தன் பெற்றோரிடம் பேசி சந்தியாவையும், ராஜாவையும் வீட்டிற்கு அழைத்துவர சகல விசாரிப்புகள், உணர்வு குவியல்களுக்கு நடுவில் அவர்களை அங்கேயே அவுட் ஹவுசில் தங்கிட சொல்லி வற்புறுத்தவும் செய்தனர்.

முதலில் குற்ற உணர்வுடன் வந்த சந்தியா கூட பின் இயல்பாய் மாறிவிட்டாள். தான் இருக்கும் இடத்தையே கலகலப்பாய் மாற்றிவிடும் இளங்கோவும், வர்ணிகாவும் வேறு சேர்ந்து கொள்ள உற்சாகத்திற்கு கேட்காவா வேண்டும் பொழுதுகள் இனிமையாய் கழிந்தன. மாலை நேரங்களில் ஆண்கள் மூவரும் ராஜாவிடம் இயல்பாய் பேசி அவனையும் தங்கள் தொழிலில் இணையச் சொன்னார்கள்.

தோட்டத்தில் அமர்ந்து பூதொடுத்துக் கொண்டு இருந்தனர். மென்மையான மலர்களை அதற்கு வலிக்காதபடி பற்றியவள் கலாவிடம் பேசத் துவங்கினாள். ''அத்தே நிஜமாவே எம்மேல உங்களுக்கு எந்த விதமான கோபமும் இல்லையா?''

சந்தியாவின் கேள்விக்கு முறுவல் தேக்கியபடி, ''நீ எங்க வீட்டுப் பொண்ணுடா ஒரு தப்பு பண்ணின காரணத்தினாலே உன்னை வெறுத்திடுவோமா யென்ன? அதுவும் வாயும் வயிறுமா இருக்கிற இந்த நேரத்திலே!''

''அத்தே மன்னிப்பை விடவும் பெரிய தண்டனை வேற எதுவும் இல்லை.

நான் பண்ணியது சாதாரண தவறு இல்லையே?

உங்க எல்லாருக்கும் எவ்வளவு பெரிய அவமானத்தை தேடித் தந்திட்டேன்.''

''விடு சந்தியா நீ ஒண்ணும் ஊர்லே உலகத்திலே நடக்காத விஷயத்தை செய்திடலையே? அன்றைய சூழ்நிலைலே அப்படி நடந்திட்

டது. எங்க மனசிலே எந்த ஆதங்கமும் இல்லை. எதையும் நினைச்சுக் கவலைப்படாதே!''

தொடுத்திருந்த பூவை சந்தியாவின் தலையில் சூட்டினார்.

பீதியை வர்ணிகாவிற்கு என்று பத்திரப்படுத்தி வைத்தார்.

வந்த சில தினங்களில் இருந்தே வர்ணிகாவைப் பற்றிய முழு விவரம் அறிய வேண்டும் என்ற ஆவலில் இருந்த சந்தியாவிற்கு அது ஒரு நல்ல சந்தர்ப்பமாகப்பட்டது. ''அத்தே வர்ணிகா மாமாவுடைய நண்பர் மகள்ன்னு சொன்னீங்க? என்ன விஷயமா நம்ம வீட்லே இருக்கா? ரொம்ப நல்ல பெண்ணா வேற தெரியறா?''

''ஆமா சந்தியா நானே சொல்லணுமின்னு நினைச்சேன், வர்ணிகா தங்கமான பொண்ணு!'' என்றார் கலா.

''எவ்வளவு பெரிய இக்கட்டில் இருந்து எங்களை மீட்டு இருக்கா தெரியுமா? உள்ளபடி சொல்லணும்னா சித்து பழையபடி மாறிட காரணமே அவதான். இழந்த எங்க நிம்மதியை மீட்டுத் தந்திட்டா.''

''அதுக்கு நன்றிக்கடனா ஏதாவது செய்யணுமுன்னு மனசு கிடந்து அடிக்கக்குது. நன்றி மறந்தா மனுஷங்களுக்கு என்ன மரியாதை?'' கலா ஏதோ எதேச்சையாக சொல்லிக் கொண்டே போக சந்தியாவிற்கு சுருக்கென்று இருந்தது. அதை உணராமல் கலா வேறு பேசிக் கொண்டே போனார்.

''என் மனசிலேயும், மாமா மனசிலேயும் ஒரு ஆசையிருக்கு சந்தியா! இவங்க இரண்டு பேரையும் வாழ்க்கையிலே ஒண்ணா சேர்த்து வைக்கணுமுன்னு ஆசையா இருக்கு?''

''இதுக்கு அத்தான் என்ன சொல்றார்?''

''விருப்பம் மாதிரிதான் தெரியுது. ஆனா மேற்கொண்டு பேசிட தயக்கமா இருக்கு.''

''கவலைப்படாதீங்க அத்தே. எல்லாமே நல்லபடியா நடக்கும்.'' கலா சந்தியாவின் கைகளைப் பற்றிக் கொண்டார். ''உன் வாய் முகூர்த்தம் பலிக்கணும்மா!'' என்றார்.

''எங்க வீட்டுல நான் தான் கில்லாடி! வேணுமனா என் மனைவிகிட்டேயே கேட்டுப்பாரேன்!''

''எதுலடா கில்லாடி''

''சமையல்ல தான்!''

-ஆர்.ஜி.காயத்ரி,
திசையன் விளை





ஆனால் சந்தியாவின் மனதில் வர்ணிகாவை அந்தக் குடும்பம் தூக்கிக் கொண்டாடுவது கொஞ்சம் பொறாமையைக்கூட ஏற்படுத்தியது.

மனித மனமும், இயல்பும் வியப்பும் விசித்திரமானது. அருகில் இல்லாததை தேடித்தேடி அலைபாயும் கையில் இருக்கும் பொருளின் மதிப்பு யாருக்கும் தெரிவதில்லை. அது கைவிட்டு போன பிறகுதான் அந்த உறவின் ஆழம் புரியும். பிரியும் போது தானே உறவின் உன்னதம் தெரியும். அப்படித்தான் ஆகி போனது சந்தியாவின் நிலையும். தானே மகாராணியைப் போல் வளைய வந்த வீடுதான் என்றாலும், சில மாத விலகலுக்குப் பிறகு திரும்பவும் இங்கு ஒட்டி உறவாட முடியாத நிலையில் அவளை விதி வேறு வழியின்றி கொண்டு வந்து விட்டதால் தனது முந்தைய அந்தஸ்துக்கும் இன்றைய நிலைக்கும் இடையே மலைக்கு மடுவுக்கு ம் உள்ள நிலை என்பதை நினைக்கையில் ஒரு சலனம் வரத்தான் செய்தது.

ராஜாவுடன் ஏற்பட்ட காதலில், தன் பிறந்தவீட்டை, இக்குடும்பத்து மனிதர்களை விட்டுப் பிரிய நேர்ந்தது. அன்று தெய்வீகமாய் புனிதமாய் உயர்வாய் தோன்றிய காதல் இன்று இத்தனை கஷ்டங்களையும் அனுபவித்த பிறகு சராசரி வாழ்க்கைக்கு வந்த பிறகு அத்தனை உயர்வாகத் தெரியவில்லை.

சித்தார்த், ராஜாவுக்கு இடையே உள்ள குண நலன்கள் அந்தஸ்து ஒவ்வொன்றாக எடை போட்டுப்பார்க்க தொடங்கினாள்.

வசதியான குடும்பத்தில் ஒற்றையாய் பிறந்து இங்கும் அவள் வைத்ததுதான் சட்டம் என்று தான் ஒருநாள் இருந்தது. எத்தனை அன்பு அன்னியோன்யம்.

ராஜாவுடன் திருமணத்துக்கு பிறகு அவள் அனுபவித்த துன்பங்கள் சோதனைகள் எத்தனை. வசதி வாய்ப்பை இழந்த போதும் ஆரம்ப காலத்தில் அந்த இன்பத்தில் சோதனைகளை மோசமாய் உணரவில்லை எனினும் ராஜாவின் சொற்ப சம்பளம் அவளின் சராசரி தேவைகளைக் கூட பூர்த்தி செய்யாது என்று உணரவும், திகைத்துதான் போனாள்.

அவ்வப்போது சிறு சிறு ஊடல்கள் பெரியதாய் உருவெடுக்க ஆரம்பித்து இறுதியில் ராஜா விபத்துக் குள்ளாகிப் போய்விட ஒட்டு மொத்தமும் இவள் தலையில் விழ மிரண்டுதான் போனாள். இறுதியில் எங்கேயிருந்து பிரிந்தாளோ அங்கேயே ஒரு மோசமான சூழ்நிலையில் யாசகம் கேட்க நேர்ந்து விட்டதேயென்று ஏங்கியது நிஜமே!

மன்னிப்பு வழங்குபவர்களுக்கு உயரியதானாலும் பெறுபவர்களுக்கு அதன் பின் வாழும் வாழ்வு நரகமே! சித்துவின் வீட்டில் எக்குறையும் இல்லாமல் போனாலும் பழைய சந்தியாவாக அவளால் வளைய வர முடியவில்லை என்பது அன்றாடம் மனதை உறுத்தும் ஆதங்கம் தான்.

அவளுக்கே உரிய இடம் வர்ணிகாவிடம் பறிபோனதாய் உண

ரந் தொடங்கினாள் அன்பு பொழியும் மாமா கூட எப்போதும் வர்ணிகாவிடம் தான் பேசுகிறார். அத்தை பேசும் பத்து வார்த்தைகளில் எட்டு வார்த்தைகள் அவளைப் பற்றித்தான் பெரிதும் இருந்தது.

முதலில் அது விகல்பமாய் தெரியவில்லை என்றாலும், நாள்பட நாள்பட அவளால் ஜீரணிக்க இயலவில்லை. ஏதேதோ குருட்டுத்தனமான யோசனைகளோடு தவித்தாள் சந்தியா.

## 13

**கா**லையில் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள் வர்ணிகா! இரவு வெகுநேரம் உறக்கம் இல்லாமல் தவித்து இருந்து விட்டு காலையில் மெல்ல விழிகளைத் தழுவிய உறக்கம் முழுமையும் முற்று பெறாமல் இமைகளுக்குள் வந்து இம்சித்தான் சித்தார்த்தன். அவன் உருவம் கண்களின் வழியாய் மனதிற்குள் இதமாய் நிலைத்திருந்தது.

அசாதாரண உயரமும் அதற்கு தகுந்தாற் போல் பரந்து விரிந்த நெஞ்சும் வட்ட வடிவமான ஒளிவீசும் முகம் கதிர்வீச்சினை பாய்ச்சுவதைப் போன்ற கண்களும், சிவந்த உதடுகள் நெடிய கரங்கள் என முழுமையான கம்பீரம் பொருந்திய ஆண்மகன், வசீகரமானவன், எது அவனில் ஈர்த்தது? குற்றம் குறையில்லாத அவனின் குணமா? பண்பான வார்த்தைகளை பகுத்துப் பேசுவதா. அவன் அடித்த போது சுருண்ட மனம் மன்னிப்பு கோரிய முறையில் துளிர்த்து எழுந்ததே?

சித்து என்ற ஒரு ஆணின் அருகாமைக்கும் நீண்ட நுக்கும் எத்தனை ஈர்ப்பு இரும்புக் குண்டாய் இதயத்தை அழுத்தும் இம்சையானாலும் இதமே, அதிலிருந்து விடுபட தெரியாமல் தவிக்கிறேன்! நெஞ்சக் கூட்டிற்குள் இனம்புரியாத படபடப்பு! ஓசையின்றி பேசிடும் ஒவ்வொரு வார்த்தைகளையும் கேட்டிட ஏங்குகிறது செவிகள்.

நீயும் நானும் களிப்போடு இன்புற்று சுற்றித் திரிந்த காலங்கள் எத்தனை. அன்பான பார்வைகள் அனுசரணை சீண்டல்கள் எனை அள்ளிக் கொள்ள நீ துடித்த துடிப்புகள். இமைகளின் ஏக்கம் இதழ்களில் இணைந்து விரல்பிடித்து வழிகாட்டி வியப்பு கடலில் என்னை ஏந்திக் கொண்டாய் உன் கைகளில்! மறக்க முடியவில்லை உனை மறுக்கவும் தோணவில்லை.

கட்டிலில் புரண்டபடியே படுத்திருந்தவளின் அரைக்கண்களை திறக்க எதிரே சித்தார்த்தனின் உருவமும், தெரிந்தது. கற்பனையோ நிஜமோ கண்களிலே வழியும் நின்முகம். ''வர்ணா'' என்ற அவனின் அழைப்பில் கலைந்தாள். ஆனாலும் எழ மனமில்லை.

சித்தார்த்தனின் மனநிலையோ வேறு மாதிரி இருந்தது. உடற்பயிற்சி முடிந்து வந்தவனின் கவனம் டெலிபோனில் பதிய வர்ணாவின் தந்தை மகளிற்கு பிறந்த நாள் வாழ்த்து கூறிட, தன் மனங்கவர் நாயகிக்கு வாழ்த்து சொல்லிட வந்தான் அவன்.

கண்முன்னே கலைந்த ஓவியமாய் இரவு உடையில் விலகிய ஆடையில் துயில் கொண்ட நிலவைப் போல், பெரு மூச்சுதனில் ஏங்கி இறங்கிய நெஞ்சமும், பாதி திறந்து மூடிய கண்களில் வாவென்ற அழைப்பும் கிறங்கடித்தன அவனை.

''வரு...!'' என்ற இதயம் துடித்த அழைப்பில் துடித்து எழுந்தாள் அவள் பிம்பம் அல்ல நிஜம், கண்முன்னே தன் கனவு நாயகன், காதல் தேரினில் ஏறிட வந்தவன், ''ஸாரி'' என்று எழுந்தமர்ந்து உடைகளை நேராக்கினாள்.

செம்மை படர்ந்த கன்னச்சிவப்பும் இறுகப் பற்றிய உடையில் அவளின் செழுமையும் திணற வைத்தன.

சில விநாடி தயக்கம் தவிர்த்து ''ஐ லவ் யூ'' என்று வந்த வார்த்தைகளை புதைத்து ''மெனி மோர் ஹேப்பி ரிட்டர்ன்ஸ் ஆப் த டே..!'' என்றான்.

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''உன் அப்பா சொன்னார் அதான் விஷ் பண்ணலான்னு வந்தேன்.''

''நன்றி...'' அந்தரங்கமாய் ரசித்த அழகிய உருவம் உடற்பயிற்சி முடித்து இறுகிய பனியனோடு வியர்வைத் துளிகள் ஆங்காங்கே முத்துக்களாய் பூத்திருக்க, தலைகுனிந்த படி நின்றவளிடம் தன் வலக்கையை நீட்டினான்.

சிறு தயக்கத்திற்குப் பின், நீண்ட மெல்லிய விரல்களை சிறைபிடித்துக் கொண்டு அவ்விரலை உதடு நோக்கி கொண்டு சென்று மென்மையாய் முத்தமிட்டான்.

அடர்த்தியான அம்மீசை குறுகுறு வென்று தைத்தது. சிலிர்த்தபடியே அவன் மேல் சாய்ந்தாள் சித்தார்த்தனின் மார்பில் அவள் கன்னம் உராய்ந்தது. இடது கையினால் அவளை அணைத்தான். வலது கையால் செழுமையான கன்னத்தை தழுவிவிட்டு கூந்தல் முடிக்கற்றைகளை வருடிக் கொடுத்தான். அந்த மோனமான நிலையில் இருந்து மீள முயன்று மனமின்றி பிரித்தது. சித்தார்த்தன் தான் பற்றிய கரங்களை விலக்கிட கண்டு இன்பத்தில் லயித்திருந்த நிலை மீண்டும் அவளை அள்ளிக் கொள்ளத் தூண்டின! காதருகில் குனிந்து ''பிறந்த நாள் வாழ்த்துக்கள்'' என்றான்.

கனவிலிருந்து மீண்டவள் போல் திகைப்புடன் கண்களைத் திறந்தாள் நடந்தயாவும் கனவல்ல நிஜம். அந்த அணைப்பில் லயித்ததும் நிஜமே. அவனைப் பார்க்க இயலாமல் ஒருவித அவஸ்தையுடன் கண்கள் தரைதாழ்ந்தன.

குங்குமமாய் சிவந்திருந்த முகம் அலைபாய்ந்த கேசமும், துடித்த

அதரங்களும் குழைந்த அவள் உருவமும் சித்தார்த்தனை இம்சித்தன.
''குட் மார்னிங்'' என்ற இளங்கோவின் குரலில் இருவருமே
கலைந்தார்கள்.
''என்ன அண்ணா காலையிலேயே வர்ணி ரூமிற்கு வந்திருக்கா?''
''அது... வந்து..! இன்னைக்கு வர்ணிகாவுடைய பிறந்த நாளாம்.
வாழ்த்து சொல்லலாம்னு வந்தேன்.''
''இஸிட், எனக்கு இது தெரியாதே? நிஜமா வர்ணி?'' இளங்கோ
வன் குரலை தவிர்த்து. கண்களில் வியப்பு மினிர,
''உங்களுக்கு எப்படித் தெரியும்?''
''காலையில் உங்க அப்பா போன் பண்ணினார். அதனால் விஷ்
பண்ணிட வந்தேன்.''
''மெனி மோர் ஹேப்பி ரிட்டர்ன்ஸ்!'' எனும் வாழ்த்தோடு அவள்
விரல்களைப் பற்றி வெகு சுவாதீனமாய் வாழ்த்துரைத்தான்.
இளங்கோவுடன் சேர்ந்திருந்த விரல்களைப் பார்க்க ஆவலும் ஏக்
கமுமாய் பார்த்தான் சித்தார்த்தனன் இதே போல் தன்னால் அவளிடம்
சகஜமாய் பழக முடியவில்லையே என்று மனம் குமைந்தான். வெகு
இயல்பாய் வாழ்த்து சொல்லும் எண்ணத்தோடு உள்ளே நுழைந்தவன்
தான்.

ஆனால் அவளருகில் சென்றவுடன் மனம் முரண்டு பிடிக்கிறது.
உற்சாகமா, தயக்கமா, தவிப்பா என்று இனம் காண முடியாத
அளவிற்கு இதயம் துடிக்கிறது. அவள் தலை சாய்ந்த இடத்தை தட
விக்கொடுத்தான்.

அலுவலகம் செல்லும் வழியெங்கிலும் வர்ணிகாவின் நினைப்
புதான். அவன் கண்ட வரையில் அவள் அதிகமாய் ஒப்பனை புனைந்
தது இல்லை யென்றாலும் அதிகாலையில் எவ்விதமான ஒப்பனை
யும் இன்றி மிளிர்ந்த அந்த அழகினை பருகிட மனம் துடித்தது
நிஜமே? தயங்கி தயங்கி நான் பேச எண்ணிய விஷயங்களை
இளங்கோ எத்தனை இயல்பாய் அவள் கையைப் பற்றி சொல்லிவிட்
டான் அந்த சரகம் என்னிடம் இல்லாமல் போனதேன்!
சிக்னலில் நின்றவனின் நினைவில் எதேச்சையாய் பட்டது. எதி
ரேயிருந்த ஜவுளிக்கடை . அதில் மெருன் கலரில் மஞ்சள் கற்கள்
பதித்த புடவை மனதை நெகிழ்த்தியது. இது வர்ணிகாவிற்கு பாந்த
மாய் இருக்குமென தோன்றிட, வண்டியை ஓரம் நிறுத்தி, டிஷ்யூ
வொர்க் செய்த புடவையை வாங்கிக் கொண்டான். இதை அவளிடம்
தந்தால் எத்தனை சந்தோஷப்படுவான் கட்டாயமாய் இன்ப அதிர்
வாய் இருக்கும் என்று கற்பனையிலேயே வண்டியை நகர்த்தினான்.
வர்ணிகாவின் மனநிலையும் அன்று வெகு உற்சாகமாய் இருந்
தது. பிறந்தநாள் என்று விமரிசியாய் இல்லாமற் போனாலும், தந்தை
கண் விழித்ததும் பரிசுடன் வாழ்த்து சொல்வதும், தாயின் அன்பு முத்
தத்தோடு ஒரு இனிப்பும் கட்டாயமாய் இருக்கும்.



நண்பர்களின் வாழ்த்து, மாலை மொட்டை மாடியில், பெற்றோ
ருடன் ஜாலியாய் பொழுதைக் கழிப்பது என அன்றைய தினம்
இறக்கை கட்டியபடி பறக்கும். அதிலும் இந்தப் பிறந்த நாளின்
தொடக்கமே அவள் மனம் கவர்ந்தவனின் வாழ்த்தோடு அல்லவா?
காலையில் எழ மனமின்றி படுக்கையிலேயே புரண்டதும், கனவில்
நினைத்த அவளின் நாயகன் நேரில் வந்து, விரல் தொடும் நேரம் உட
லில் தன்னாலே ஒரு குழைவும் தோன்றி மனதை மயக்கி அவன்
அணைப்பையும் தேடியதே.
ராமநாதனும், கலாவும் அவளை வாழ்த்தி பட்டுப்புடவையும்,
வைர அட்டிகையையும் தந்து செல்ல, மாலை அதை அணிந்து கொண்
டாள். புடவையின் கனம் கூட மனதிற்கு சுகமாய் இருந்தது. நீண்ட
கூந்தலை தளர்வாய் பின்னலிட்டு, மலர் சூடி கண்ணாடியைக் கண்ட
போது, மணப்பெண் போல தோன்றியது. அருகில் சித்தார்த்தன்
கைகட்டி அவளையே வைத்த கண் வாங்காமல் பார்ப்பது போல்
தோன்றியது. உடல் சிலிர்த்தது.
''வர்ணி''- இளங்கோவின் உற்சாகத்துள்ளல் குரலில் நினைவை
அகற்றிவிட்டு திரும்பினாள்,
''ஹார்ட்டி விஷ்ஷஸ் டியர் வர்ணி''
''தேங்க்ஸ்...! என்ன இளங்கோ
பார்சல் எல்லாம் பலமாயிருக்கு. பரிசுகளில் மயங்குகிற ஆள்
நானில்லை தெரியுமா?''
''பர்த்டே பேபிக்கு கிப்ட்.''
''கிப்ட் ஆ...''
''எஸ்...'' அவள் பார்சலைப்பிரித்து, பொம்மை வடிவில் இருந்த

''என் மாமியார் காலி குடத்தை
தூக்கி கொண்டு தண்ணீர் லாரி பக்கம்
போய் விட்டால் போதும் அனைவரும்
விலகி வழி விட்டு விடுவார்கள்.''
''உன் மாமியாரிடம் எல்லோருக்கும்
அவ்வளவு மரியாதையா?''
''மண்ணாங்கட்டி நான்கு மாதத்
திற்கு ஒரு முறைதான் குளிப்பாள் அத
னால உடம்பில் வீசுகின்ற துர்நாற்றத்தை
சகிக்காமல் சுற்றியுள்ளவர்கள் ஓடி
ஒளிந்து கொள்ளுவார்கள்.''
-பி.ரேவதி, சுசீந்திரம்.



கேக்கை வைத்தான் நடுவில் நீலநிற மெழுகுவர்த்தியை வைத்து
விட்டு ''கமான் டியர் ஊது 'கட்' கட்பண்ணு.''
''இரு இளங்கோ வீட்லே எல்லாரும் வந்திடட்டும்.''
''நீ யாரைத் தேடுறேன்னு தெரியும். அவன் ஆபீஸிலே பயங்கர
பிஸி. அம்மாவும், அப்பாவும் கோவிலுக்குப் போயிருக்காங்க அத
னால நாம மட்டும்தான் வா!'' அவள் கைகளில் கத்தியைத் திணித்
தான்.
''வர்ணி ஒரு சின்ன ஆப்ளிகேஷன் பிறந்தநாள் அன்னைக்கு
கேட்டாதிட்டமாட்டேன்னு நினைக்கிறேன்.''
''என்ன விஷயம்? பீடிகை எல்லாம் பலமா இருக்கு? மொத்த
கேக்கும் வேணுமா?''
''என்னை என்ன சாப்பாட்டு ராமன்னு நினைச்சியா? இது லவ்
கம் வைப் மேட்டர்.''
''இனிட்....லவ் மேட்டர் வெரிகுட் அப்போ நீயும் லவ்வில்
விழுந்திட்டியா?'' யாரு பொண்ணு?'' கண்களில் குறும்பு கொப்ப
ளிக்க அவள் கேட்க.
''நீதான்'' என்றான் அவனும் அதே குறும்புடன்!
''என்னது?''
''அதிர்ச்சி அடையாதே, பொண்ணு நீதான். ஆனா உன்மேல் காத
லாகி கசிந்துருகியது நான் இல்லை?!'' வர்ணா குழப்ப பார்வை பார்த்
திட...
''அண்ணன் மேன்மை தங்கிய சித்தார்த்தன்.''
''சித்துவா? விளையாடாதே இளங்கோ!''
மனதில் பொங்கிய ஆவலையும், முகமலர்ச்சியையும் அவன்
அறிந்து விடக் கூடாதென்று மறுபக்கம் திரும்பினாள்.
''உண்மை. அண்ணா உன்னை விரும்புகிறான். வர்ணி, அவன்
நடை உடை பாவனைகளைக் கண்டாலே புரியவில்லையா?''
''எதையும் தெளிவு படுத்தாமல்.... நாமாக...!''
''முட்டாள் பெண்ணே! அண்ணா தயங்குவதில் அர்த்தம் உண்டு
ஏற்கனவே ஒரு விஷயத்தில் அடிபட்டவன் உணர்வுகளை அடக்கத்
தெரிந்தவன். உன் ரூமில் காலையில் பார்த்தேனே டண்டன்னாய் அசடு
வழிந்ததை.''
''ச்சீ...!''
''அடி சக்கை! உனக்கும் வெட்கமா? உனக்கு சம்மதம்தானே
வர்ணி''
''என் சம்மதம் மட்டும் முக்கியம் இல்லையே அத்தையும் மாமா
வும்...!''
''ராகம் பாடாதே இதை பேசச் சொன்னதே அவர்கள்தான்.''
''நிஜமா...!'' முகம் முழுக்க சந்தோஷப் பூக்களை சுமந்தபடி கேட்
டாள் வர்ணிகா.



''நீ சம்மதிக்கும் பட்சத்தில் நாளையே அண்ணனிடம் பேசவேன்
பிறகென்ன கல்யாணம்தான். அதுக்குப்பிறகு, நானும் பூர்ணாவோசந்
திராவோ யாரையாவது இழுத்திட்டு வருவேன்.''
''எய்!'' இளங்கோவன் பேச்சு தித்தித்தது. சிறு தலையசைப்பில் தன்
சம்மதத்தை ஒப்புக்கொள்ள வால் சந்தோஷ மிகுதியில் கேக்கை
அவள் அதரங்களில் ஊட்டியும் விட, இருவரும் இணைந்து நகைத்த
னர்.
இருவரின் நகைப்பொலியும் இனிமையாய் எதிரொலிக்க,
கையில் தன் காதல் தேவதைக்கு வாழ்த்து சொல்லிட, வந்த சித்துவின்
மனம் கசந்து போனது. தன் உள்ளக் கிடக்கை அவளிடம் கூறி, அவன்
மேல் கொண்ட ஆழமான நேசம் உரைக்க வர்ணாவின் முகம் செந்
தாமரையாய் மாறு வதைக்காண வேண்டும் என்ற நினைப்பில் அல்
லவா வந்தான். ஆனால் இங்கே நிலைமையே தலைகீழாய் இருந்
ததே. கையில் ஏதோ கனத்தோடும் மனதில் பெரும் குழப்பத்தோடும்
நின்றிருந்த சித்தார்த்தனைக் கண்ட சந்தியா அவன் கண்கள் சென்ற
திசையைப் பார்த்தாள்.
அங்கே வர்ணாவும், இளங்கோவும் சிரித்து பேசியபடி இருப்ப
தைக் கண்டவுடன் அவள் மனத்தில் வேறு வன்மம் தோன்றியது.
குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கத் தீர்மானித்தாள்.
''என்ன அத்தான் அப்படியே நின்னுட்டீங்க? சாப்பிட வையா?''
அவன் கையிலிருந்த பார்சலைப் பார்த்தபடியே கேட்டாள்.
''பசியில்லை,'' சித்துவின் பார்வை போன திக்கைக்கண்டு, ''இன்
னைக்கு வர்ணிகாவிற்கு பிறந்த நாளாம். அதான் இளங்கோ பரிசு எல்
லாம் தந்து ஒரே கொண்டாட்டம்தான். உங்களுக்கும் தெரியுமா?
அதான் பரிசுப் பொருளோட வந்து இருக்கீங்களோ?''
''இப்போதான் அத்தான் மனசு ரொம்பவும் நிறைவாயிருக்கு
நான் செய்த தவறால் நீங்க மனசு ரொம்பவும் நொந்து போனீங்க.
இந்த வீட்லே எந்த நல்லது கெட்டதும் நடக்கலை''
''......''
''இப்போவாவது நடக்கட்டுமே. இளங்கோ போல நீங்களும்
ஒரு நல்ல துணையை தேடிகிட்டா அத்தை மனசு நிறைஞ்சுடும், எனக்
கும் குற்ற உணர்ச்சி தீர்ந்துடும்.''
''இளங்கோவிற்கு துணையா? நீ சொல்ல வர்றது எனக்குப் புரி
யலை!'' சித்தார்த்தனின் கண்கள் தீர்க்கமாய் அவளை நோக்கின.
''இது... வர்ணிகாவும் இளங்கோவும் ஒருவரையொருவர் விரும்
புறாங்க அத்தான்.'' அதன் பிறகு சந்தியா பேசிய எதுவும் அவன்
காதில் விழவில்லை. வர்ணியின் புரிப்பு கலந்த வெட்கமும், இளங்
கோவின் சிரிப்பும் இணைந்து கேட்டிட, எத்தனையோ ஆசைக்கன
வுகளோடு வந்த அவனின் இதயக்கோட்டை சரிந்தது.
''தன் மேல் கொண்ட ஆழமான நேசத்தை கூறி செந்தாமரையாய்

மலர்வதைக் காண வேண்டுமென்ற நினைப்பு இங்கே, தன் சகோதர வின் கையைப்பற்றி அவனுடன் இணைந்து! ஆணும் சரி பெண்ணும் சரி. எத்தனையோ உறவுகளை விட்டுதரும் மனிதமனம் காதலின் இணைப்பறவையை மட்டும் பிரியவோ விட்டுத்தரவும் தயங்குகிறது.

இணையில் அன்பிற்கும், அரவணைப்பிற்கும் ஏங்கும், பிறருடன் சாதாரணமாகப் பேசினால் கூட மனம் பொறாமையாய்ப் பார்க்கும். அது காதலின் விதி, இங்கே அறிவிற்கோ, படிப்பிற்கோ வேலையில்லை. உணர்வுகளே மேலோங்கி நிற்கிறது. அந்நிலையில்தான் தற்போது சித்துவும் இருந்தான்.

இளங்கோவிற்கும் அவன் நல்லப் பொருத்தம்தான். ஆனால் ஏன் மனதில் மேலும் ஏன் ஆசைகளை வளர்க்க வேண்டும். தன்னையும் மீறி எரிச்சலும் கோபமும் சேர்த்து அவன் மனம் எரிமலையாக மாறிப்போனான்.

## 14

வர்ணிகா... இளங்கோவின் விளையாட்டு பேச்சினை ரசித்தபடியே மாடியேறியவள் சித்துவின் அறைக்கதவு திறந்திருக்க கண்டு மனம் குதூகலிக்க உள்ளே நுழைந்தாள்.

''சித்து...!''

''ம்...!''

மணப்பெண் போன்ற அலங்காரத்தில் தன் அன்பிற்கினியவனைக் காண வேண்டுமென்ற தவிப்பில் பட்டுப் புடவையில் பளீரென்ற ஒப்பனையில் வந்தவள் அந்த கூரிய கண்களில் காதலைத் தேடினாள்.

வெட்கம் பூசிய மினுமினுப்பில் உடல் குழைந்து, கன்னம் சிவக்க, மெல்லிய விரல் அணைப்பினை எதிர்பார்த்து காத்திருந்தவள் ஏமாந்துதான் போனாள். சித்துவின் விழிகளில் மிதமிஞ்சிய கோபம் தெரிந்தது.

மேற்கொண்டு அவனும் ஏதோ பேசாமல் போக என்ன செய்வதென்று தெரியவில்லை. காலையில் மலர்ந்திருந்த முகம் இப்போது இறுகிப் போக என்ன காரணமென்று தெரியாமல் தவித்தாள். தன் காதலை சொல்லிட இது தகுந்த தருணம் இல்லையோ? சற்றுநேரம் காத்து இருந்து விட்டு மீண்டும் அவளே பேச்சைத் துவங்கினாள்.

''ஆபீஸில் ஏதும் பிரச்சனையா? ரொம்பவும் டல்லா தெரியறீங்களே?''

''நத்திங்...!''

''காபி கொண்டு வரட்டுமா?''



''வேண்டாம்...'' சற்றே நகர்ந்து பால்கனி புறமாய் போக, கட்டிலில் கவனிப்பாரற்று கிடந்த அவனின் பெட்டியும் அருகில் ஒரு பார்சலும் இருந்தது. அதைக் கண்டவுடன் புன்னகையால் மலர்ந்தாள்.

''என் டிரஸ் எப்படியிருக்குன்னு நீங்க சொல்லவே இல்லையே?'' கொஞ்சலாய் வெளிவந்த வார்த்தைகளில் பொருள் அறியாதவன் போல பார்த்தான்.

''நல்லாயிருக்கு!''

''கேக் இந்தாங்க?''

''எதுக்கு?''

''இதென்ன கேள்வி காலையில் பர்த்டேக்கு விஷ் பண்ணீங்களே? அதுக்குள்ளாகவா மறந்து போச்சு? பர்த்டேக்கு இளங்கோ ஆர்டர் பண்ணினான். சித்து நீங்க ஏதும் பரிசு வாங்கித் தரமாட்டீங்களா?''

''உனக்கு பரிசுதரா நான் யார்? அது தான் இளங்கோ இருக்கானே?'' வெறுப்புடன் வெளிவந்தது அவன் குரல்.

''சித்து...! உங்க பேச்சு புரியலை?''

''கடை கடையா ஏறி இறங்கி அலைஞ்சு திரிஞ்சு உனக்காகவே வாங்கியதும், ஊட்டி விட்டதும் கைகோர்த்துகிட்டு வர்ற ஆள் கூட மட்டும் போதாது மனசும் அழகா இருக்கணும். ச்சே! அழகாய் உடை உடுத்தினா மட்டும் போதாது மனசும் அழகா இருக்கணும்.''

நெருப்பென வந்த விழுந்த வார்த்தைகளின் வீச்சு தாங்கிட இயலாமல் வர்ணிகாவின் கண்களில் நீர் திரையிட்டது.

''இளங்கோ...!''

''எதுவும் பேச வேண்டாம், என்கிட்டே உருகி உருகி பேசிட்டு, இப்போ அவன் கைபிடிச்சு நிக்குறீயே? உனக்கு வெட்கமா இல்லை கடைசியிலே நீயும் பெண்புத்தியை காமிச்சிட்டியே?''

விலுக்கென்று நிமிர்ந்தாள் வர்ணிகா. ''நிறுத்துங்க உங்க அசிங்க

''ஏங்க யானைப்பாகனை வீட்டிற்கு கூட்டிட்டு வந்திருக்கீங்க?''

''இவரு மதம் பிடிச்சு அலையுறதை அடக்கிறதுல வல்லவராம்!

அதான் கூட்டிட்டு வந்திருக்கேன்.''

-பழ.கவிதா சிவமணி,
புன்செய்புளியம்பட்டி



மான பேச்சை! அவன் என்ன பேசினான்னு உங்களுக்குத் தெரியுமா? நான் என் சிரிச்சேன்னு தெரியுமா? எதையும் பூதக்கண்ணாடி போட்டு பாக்கிற உங்க மனசு மாறிடுச்சன்னு தப்புக் கணக்குப் போட்டுட்டேன். வார்த்தையாலே என் மனசைக் குத்தி கிழிச்சிட்டீங்களே?''

''எனக்கு பேச மட்டும்தான் தெரியும். பசப்ப தெரியாது. அவன் தான் வேணும்னா என்கிட்டே ஏன் பழகணும்? அதுதான் காதலிதல்ன்னு உளறினாயே?''

இளங்கோ பேசியதை தவறாய்ப் புரிந்து கொண்டிருக்கிறான். புரிய வைத்து விடலாம். இப்போ கோபமா இருக்கும் போது பேசுவதைக் காட்டிலும் காலையில் பேசுவது நலம் என்று எண்ணி, ''விடுங்க சித்து கோபமா இருக்கும் போது நான் என்ன பேசினாலும் புரியாது தேவை இல்லாத சிக்கல்தான் வரும் நான் அப்புறமா வர்றேன்.'' அவள் மெல்ல நகர்ந்திட

''எங்கே போறே?'' வழிமறித்தவன் அவளின் வியந்த புருவ அழகைக் கண்டு புஜத்தை அழுந்தப் பற்றினான்.

''விடுங்க சித்து வலிக்குது.''

''வலிக்கட்டும் என் மனவலியை விடவும் இது பெரிதல்ல'' அவன் பிடி மேலும் இறுகியது.

''சித்து பிளீஸ் புரியாம வார்த்தையை கொட்டாதீங்க அள்ள முடியாது.''

''உனக்கு பிறந்தநாள்னு எத்தனை ஆசையா... ச்சே எல்லாம் நீ ஏமாத்திட்டே? ஆனா நான் விடப் போவதில்லை.''

''சித்து..!''

''இந்த கண்கள் தானே எனை இம்சித்தது. இந்த உதடுகள் தானே கொஞ்சிப் பேசி மயங்க வைத்தது'' வேகமாய் இழுத்து வர்ணிகாவை கட்டிலில் தள்ளினான். மூர்க்கமாய் அவள் மேல் சரிந்து இதழை நோக்கி குனிந்தான். அவள் திமிரத்திமிர முத்தமிட்டான். அந்த இரும்பு பிடிக்குள் அகப்பட்டு எத்தனை முயன்றும் முடியாமல் தவித்து இறுதியாய் பலங்கொண்ட மட்டும் அவனைப் பிடித்துத் தள்ளினாள்.

''ச்சீ...!''

''இனியும் யாரிடமும் வழிந்து கொண்டு நிற்கமாட்டாய் அல்லவா?'' அவன் முகத்தில் ஏளன புன்னகையொன்று பூத்தது.

உடல் நடுங்கியது வர்ணிகாவிற்கு! உதடுகள் பற்றி எரிந்தன. அதற்கு மேல் அங்கே நிற்க விருப்பம் இல்லாமல் நேராக அறைக்குள் சென்று தாளிட்டுக் கொண்டாள். கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது. உதடுகளில் லேசாய் ரத்தம் கசிந்தது.

சற்று நேரத்திற்கு முன்பு இருந்த ஆனந்தமும், மகிழ்வும் இருந்த இடம் தெரியாமல் போயின. இளங்கோ அவளிடம் பேசியதை தவறாய்ப் புரிந்து கொண்டு எத்தனை மோசமாய் அணுகி விட்டான். முட்



டாள்! காதலை புரிந்து கொள்ள வார்த்தையே தேவையில்லையே! பார்வையும், உடல்மொழியும் போதுமே!. அதைக்கூட உணராத இவன் என்ன மனிதன், தவறுகள் அனைத்தையும் தன் மேல் வைத்துக் கொண்டு மற்றவர்களை இம்சிப்பதையே வாடிக்கையாய் கொண்டவன்.

இவனை எண்ணி ஏங்கினாள் தான், இன்று உடலால் தீண்டி இனி யாரையும் விரும்பமாட்டாய் எனில், வெறும் உடல் இச்சையை மட்டுமா இவனிடம் இருந்து எதிர்பார்க்கிறேன். இனி சித்துவை எண்ணவே கூடாது. எனும் எண்ணம் எழும்போது. கூடவே அது தன்னால் முடியாது என்றும் தோன்றியது.

பலவிதமான நினைவுத் துளிகள் புயலாய் மழையாய் மனதை அலைக்கழிக்க மூச்சுவிடக் கூடத் திணறித் தவித்தாள் வர்ணிகா!

வாழ்க்கைப் பெட்டகம் மூடிக்கிடக்கிறது இரும்புக் கம்பிகளால், எங்கும் இருள் எதிலும் இருள், முள்ளும், கற்களும் புரையோடிய பாதையில் ரத்தம் கசியும் பாதங்கள் செம்மண் பூமியில் கவிதை வரைந்தன். ரோஜாப் பாதையில் விரித்திடும் முட்கள்..'' என்று கவிஞர் நா.காமராசனின் கவிதை வரிகள் அவளுக்கு நினைவிலாடின.

இரும்பு குண்டாய் இதயத்தை அழுத்தும் இம்சையில் இருந்து விடுபடத் தெரியாமல் தவிக்கிறேன்! ஓசையின்றி பேசிடும் ஒவ்வொரு வார்த்தைகளையும் கேட்டிட ஏங்குகிறதே செவிகள். நீயும், நானும் களிப்போடு இன்புற்று சுற்றித் திரிந்த காலங்கள் எத்தனை? அன்பான பார்வைகள் அனுசரனை சீண்டல்கள் எனை அள்ளிக் கொஞ்சிட நீ துடித்த துடிப்புகள். உனை மறுக்கவும் தோணவில்லை. மறக்கவும் முடியவில்லை.

சந்தியாவின் திட்டம் நல்லபடியாக நிறைவேறி இருந்தது. அவள் எண்ணினாற் போலவே வர்ணிகாவிற்கும் சித்தார்த்தனுக்கும் விரிசல் விழுந்து விட்டது. அறைக்குள் என்ன நிகழ்ந்தது என்பதை அவள் அறியாவிட்டாலும், சித்தார்த்தனின் அறையில் இருந்து அழுதபடி அவள் வெளிவந்த காட்சியைக் கண்டவுடனே தான் வெற்றியடைந்து விட்டதாய் எண்ணிக் கொண்டாள்.

''விடிந்து இத்தனை நேரமாகியும் வர்ணிகா வெளியே வரவில்லையே?'' ஆளாளுக்கு கேள்வி கேட்டபோதும், காலை உணவை பரிமாறியபடியே, ''நேற்று பிறந்தநாள் விழா கொண்டாட்டம் முடியவே நேரமாகிவிட்டதே அந்தக் களைப்பாக இருக்கும்'' நமுட்டுச்சிரிப்புடன் பேசியவளை

''என்ன கொண்டாட்டம் பெரிது? இத்தனை தாமதமாய் அவள் எழவே மாட்டாள்? ஒருவேளை உடல் நலமில்லையோ என்னவோ?'' எழுந்தவனை

''விடு! இளங்கோ அவளைப் பார்த்துக் கொள்ள அம்மாவும், சந்தியாவும் இருப்பாங்க? நீ கிளம்பு அதை விடவும் முக்கியமான வேலை நிறையவே இருக்கு'' இறுகிய முகத்துடன் அண்ணனின்

பேச்சை கேட்ட இளையவன் மனம் கலங்கினான் கூடவே பெரிய வர்களும்!

''சாப்பிடும் போது என்ன தேவையில்லாத விவாதம்? சாப்பி டுங்க'' இளங்கோவின் தட்டில் மேலும் ஒரு தோசையைப் போட்டு சித்துவின் முகம் அருகில் சந்தியா குனிந்து உரசி பரிமாற இளங்கோ பொருமினான். ''சம்திங் ராங்! என்னவோ நடந்திருக்கிறது? அது என்ன? எதுவாய் இருந்தாலும் அம்மா அப்பா முன்னாடி பேச வேண் டாம்'' என்று முடிவு செய்தவனாய்,

''சந்தியா அண்ணனை கவனித்தது போதும் உன் கணவரையும் கவனி! உடம்புக்கும் முடியாதவர் பார்!''

''ம்... அவருக்கென்ன? இத்தனை நாள் ஆஸ்பிட்டல் மருந்தோ டும், நம்ம வீட்டு சாப்பாடும், சேர்ந்து நல்லா தேறிட்டுத்தானே வர் றார்.'' சந்தியா பேசவும் ராஜாவின் முகம் களையிழந்து போய் இருந் தது.

சித்து கிளம்பிட கூடவே இளங்கோவும் கிளம்பினான்.

''ஏன்? சந்தியா இப்படி பேசுறே? உன் நடவடிக்கையில் நிறைய மாற்றம் தெரிகிறதே?'' கணவரின் கேள்விக்கு நிதானமாய் பதில் பேசினாள் சந்தியா.

''என்ன தப்பா பேசிட்டேன்? இந்த வீட்டுக்கு நான் பண்ணின துரோகத்துக்கு செய்யும் கைம்மாறு

''தப்பு சந்தியா? ஏதோ கஷ்டகாலம் நமக்கு இவங்க உதவி பண்ணி இருக்காங்க! அதுக்காக இனியும் அவங்களுக்கு பாரமா நாம இருக்கக்கூடாது?''

''பேசாம இருங்க? காதல்ங்கிற பேர்ல ஒருமுறை நான் பண்ணின தப்பு போதும்! உங்களை நம்பி கூட வந்ததுக்கு நான் என்ன சுகத்தைக் கண்டேன்?''

''உண்மையான காதல்? என் அன்பும் நேசமும் முழுமையா உனக் குத்தான் இது புரியலையா? இந்த விபத்துக்கு முன்பு நான் உன்னை

''ஏங்க கபாலி உங்களை திட்டிட்டு போறார்? மாமூல் அதி கமா கேட்டிங்களா?''

''இல்லை. எம் பையனுக்கு கபாலி பொண்ணைக் கேட் டேன். 'என் கவுரவம் என்னாகி றது'ன்னு கோபமா பேசறான்!''

-பழ.கவிதாசிவமணி,
புன்செய்புளியம்பட்டி





நல்லபடியா கவனிச்சிக்கலையா?''

''அன்பும் பாசமும் இருந்தப்போ ஆஸ்பிட்டலில் வக்கில்லாம இருந்தோமே? மறந்திடலையே?''

''நான் போவதா முடிவு பண்ணிட்டேன் நீ...''

''கட்டாயம் வரமாட்டேன். இனியும் இந்த வசதிகள் இல்லாமல் என்னால் வாழ முடியாது. எங்க அத்தான்கிட்டே பேசி பேக்டரியில் வேலை வாங்கித் தர்றேன். இங்கேயே இருங்க. அது முடியாதுன்னா நீங்க தாராளமா போகலாம்'' அவள் முடிவாய் சொல்லி கிளம்பிட,

ராஜா அதற்கு மேல் ஏதும் பேசவில்லை. அவன் உள்ளம் ரணப் பட்டுப் போய் இருந்தது. கணவனை அடக்கிய கையோடு, தன் சூழ்ச் சியை யாருமே கவனிக்கவில்லை என்னும் இருமாப்பில் இருந்தாள் சந்தியா.

அடுத்த சில நாட்களில் பெரிதாய் எந்த மாற்றமும் இல்லை. அம் மாவும், அப்பாவும் வர்ணிகாவின் வீட்டிற்குச் சென்றிட, வீட்டிற்குள் ஒரு கண்ணாமூச்சி ஆட்டம் நடப்பதை நன்றாக உணர முடிந்தது. அண்ணன் மீண்டும் இறுகி விட்டான். வர்ணியிடம் பழைய துள்ளல் இல்லை, அருகில் சென்று ஏதாவது பேசத் துவங்கினாலும் நத்தை யாய் சுருண்டு கொள்கிறாள்.

அண்ணனுக்கும், அவளுக்கும் திருமணம் என்றதும் அவள் முகம் தாமரையாய் மலர்ந்ததை நினைவு கூர்ந்தான். இதில் ஏதோ பிரச் சனை உள்ளது. வர்ணியிடம் எத்தனை கேட்டும் பிடி கொடுக்க வில்லை.

''பிளீஸ்! இளங்கோ எதைப் பற்றியும் எங்கிட்ட பேசாதே! மாமா வும் அத்தையும் வந்ததும் நான் இங்கிருந்து கிளம்பப் போறேன்''

''நீ பேசுவது சரியில்லை வர்ணி! வீடே பழைய கலகலப்பிற்கு மாறியிருக்கு. எல்லாம் பேசி முடிவு பண்ணின பிறகு, இப்படி முகத்தை திருப்பிகிட்டு போனா என்ன அர்த்தம்? அண்ணன் ஏதாவது தப்பா பேசிட்டானா? சொல்லும்மா''

''நீயும் ஆண்வர்க்கம்தானே! உங்களுக்கு எல்லாம் பொம்பளை மனசை புரிஞ்சுக்கத் தெரியாது தயவுசெய்து எதுவும் பேசாதே இளங்கோ! நான் பட்ட வரையில் போதும்'' முகத்தில் அடித்தாற் போல் பேசிவிட்டு நகர்ந்து விட்டாள் வர்ணிகா.

15

இளங்கோ தவித்துப் போனான்.

என்ன நடந்திருக்க முடியும்? இனியும் யோசித்துப் பலனில்லை. நான் அண்ணனிடம் பேசியே தீர வேண்டும் என்ற முடிவிற்கு வந் தவனாய் ஆபீசிற்கு கிளம்பினான். வந்த நேரத்தில் இருந்து வேலை அதிகப்படி ஆன தால் சித்துவுடன் எதும் தனித்துப் பேச இயல

வில்லை இளங்கோவால்! சரி மதியம் உணவு இடைவெளியில் பேச லாம் என்று காத்திருந்தான்.

''சேகர் பிராஜெக்ட் முடிந்ததா?''

''எஸ் சார்.. சாப்ட்வேர் சொல்யூஷனில் இருந்து மானேஜர் வர் றார்.''

''எப்போ?''

''நான்கு மணிக்கு''

''இளங்கோ மணிக்கட்டைப் பார்த்தான். 2.30 ஆகியிருந்தது. அண்ணன் எங்கே?''

''மேடம் லன்ஞ் கொண்டு வந்தாங்க?''

''மேடமா? யாரு''

''சந்தியா மேடம்''

''எப்போ?''

''அரைமணி இருக்கும்!'' சேகர் சொல்லிவிட்டு போக, இளங்கோ விற்கு மெல்ல ஏதோ புரியத் துவங்கியது. ஆனால் அப்படியும் இருக் குமோ? சந்தியாவின் போக்கில் சில மாற்றங்கள் தெரிகிறது உண்மை தான். சித்துவிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்கிறாள். ஒருவேளை அது ஏதும் வர்ணியைப் பாதித்து இருக்குமோ?

யோசனையோடு சித்துவின் அறைக்கு சென்றவனை சந்தியாவின் முதல் குரல் தடுத்து நிறுத்தியது. ''என்ன அத்தான் நான் இத்தனை பேச றேன். நீங்க கம்மாவே இருக்கீங்க? வர்ணிகா ஒரு வயசுப்பொண்ணு, என்னதான் நெருங்கிய உறவா இருந்தாலும் இப்படி வந்து தங்கியி ருப்பது நல்லாவா இருக்கு. கூடிய சீக்கிரம் அவளை வீட்டுக்குத் திருப் பிடுங்க. பிறந்த நாள் அன்னிக்கு நடந்ததை பார்த்திங்க இல்லே, நாளைக்கு நாலு பேர் ஏதும் பேசறதுக்கு நாமே சந்தர்ப்பம் ஏற்படுத்தி தரக்கூடாது. இளங்கோவிற்கும் கல்யாண ஏற்பாடு பண்ணுங்க.''

அதற்கு மேல் தாங்க முடியாதவனாய் உள்ளே நுழைந்தான் இளங்கோ.

''வர்ணிகா எதற்காக போகணும்?''

''நீ சின்ன பையன் இளங்கோ. உனக்கு உலகம் புரியாது. வர்ணிகா கல்யாணமாகாத பொண்ணு, நாளைக்கு நம்ம குடும்பத்திற்கு ஒரு அவப்பெயர் வந்திடக் கூடாது பாரு?''

''அதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம் சந்தியா! ஏற்கனவே அவமானப்பட்டு இருந்த நம்மளை மீட்டதே அவதான். வர்ணி இருப் பதால் கௌரவம் கெட்டால் பரவாயில்லை''

''என்னை குத்தி காட்டறதைப் பார்த்தீங்களா அத்தான். நேத்து வந் தவ அவளுக்காக இங்கேயே பிறந்து வளர்ந்த என்னைப்போய்!''

''இங்கே நடப்பது உரிமைப்போர் இல்லை, யார் முக்கியமின்னு போர்க்கொடி தூக்கிட! நேற்று வந்தவ சாதித்தது நிறைய சந்தியா, அதை உனக்கு எடுத்துச் சொல்லிட, இங்கே இருப்பவர்கள் மறந்து



விட்டார்கள் போலும், சரி போகட்டும். ஆமா எனக்கும், வர்ணிக்கும் கல்யாணம் பேசச் சொல்லி உனைத் தூண்டியது யார்?''

''நீங்க இரண்டு பேரும் நடந்துக்கிறதைப் பார்க்க அப்படித்தானே இருக்கு. சிரிக்க பேசறதும் ஒட்டி உறவாடுவதும்..!''

''திருத்து காமாலைக்காரனுக்கு கண்டது எல்லாம் மஞ்சளா தெரி யுறா மாதிரி உனக்கு எதுவும் நேராகவே தெரியாதா?''

''இளங்கோ''

''நீ சும்மாயிரு அண்ணா வர்ணி முகத்தில் சிரிப்பே காணோம். சரியா பேசுவதும் இல்லை, இதுக்கு காரணம் நீதானே சந்தியா''

''இதென்ன வீண்பழி?''

''இது ஆபீஸ் உங்க பிரச்சனையை வீட்லே போய் வச்சுக்கோங்க''

''அத்தான் வரவர இளங்கோவுக்கு என்னைப் பிடிக்கவே இல்லை. நான் வர்றேன்னு விருட்டென்று கிளம்ப?''

இளங்கோ தமையனிடம் திரும்பினான். அண்ணா சந்தியா பேச றதை நீ நம்பாதே''

''எதைச் சொல்றே? எனக்கு எதைப் பற்றியும் அக்கறையில்லை.''

''கோபப்படாதே அண்ணா எனக்கும் வர்ணாவுக்கும் எந்த நெருக் கமும் இல்லை.''

''நெருக்கம் இல்லாமல் தான் பிறந்தநாளன்று வரும் ஆள் கூட கண்ணுக்குத் தெரியாமல் அத்தனை கொஞ்சினீர்களோ!''

''அண்ணா உன் மனசை எது இப்படி பேச தூண்டுகிறதென்பது புரிகிறது.''

''முட்டாள் என்ன புரிகிறது?''

''முட்டாள் நானில்லை, மனது முழுக்க அன்பை வைத்துக் கொண்டு குழம்பும் நீயும் வர்ணியும் தான்! உங்க இரண்டு பேரு டைய அன்பும், பார்வைப் பரிமாற்றங்களும் எனக்குப் புரியாமல் இல்லை. அம்மாவும் கூட உங்க கல்யாணம் விஷயம் பற்றி என்னை உங்களிடம் விசாரிக்க சொன்னாங்க''

''பிறந்தநாள் அன்று வர்ணியும் நானும் பேசின விஷயம் என் னன்னு தெரியுமா? வர்ணிகிட்டே உன்னை மணம் புரிய சம்மத மான்னு கேட்டேன். அவ எத்தனை சந்தோஷப்பட்டாத் தெரியுமா? மனசு முழுக்க சந்தோஷத்தோட தன் காதலை வெளிப்படுத்தினா!

நான் உன்னிடம் பேசப் போறேன்னு சொன்னதற்கு? இளங்கோ என்மேல் விருப்பங்கிறதை அவர் மொழியில் நானே கேட்கணு மின்னு சொன்னா? ஆனா அப்போ என்ன நடந்ததுன்னு தெரியலை? அதிலிருந்தே வர்ணி சரியில்லை, ரொம்பவும் மனசு உடைஞ்சு பேசறா.''

''அப்படீன்னா நீங்க இரண்டு பேரும்?''

''அண்ணா நானும் அவளும் நல்ல நண்பர்கள். ஒரே வயசும் ஒத்த ரசனையும் இருப்பதால் சற்று நெருங்கிப் பழகினோம். மற்றபடி

எதும் இல்லை.''

''ஐ ம் ஸாரி இளங்கோ! ஏற்கனவே ஏமாந்த மனசு. வர்ணிகா மேல உள்ள அன்பு என் கண்ணை மறைச்சிருச்சு. கூடவே சந்தியாவும்!''

''அண்ணா நெருக்கம் வேற அன்பு வேற, நானும், வர்ணியும் எப்பவாவது தப்பா பழகி பார்த்து இருக்கியா? ஆனா நீயும் அவளும் பலமுறை ஒருவரையொருவர் மெய்மறந்து நின்றதைநாங்களே அறிவோம்.''

''கடவுளே! ஏதேதோ தப்பாய் புரிந்து ஆசையாய் வந்தவளை கஷ்டப்படுத்திட்டேனே!'' தலையில் கைவைத்தபடி உட்கார்ந்து விட்டான் சித்தார்த்.

''கவலைப்படாதே அண்ணா, வர்ணியிடம் நேரடியாக போய் பேசு. இன்னும் காலம் கடந்து போய்விட வில்லை. அப்புறம் இன்னுமொரு விஷயம். சந்தியா ரொம்பவும் நல்லவதான். நடந்த சில சம்பவங்கள் அவளை ரொம்பவும் குழப்பத்தில் தள்ளி விட்டதே தவிர வேறொன்றும் இல்லை. ஆனாலும், அவளை நம் வீட்டை விட்டு தள்ளி வைப்பது நல்லதுண்ணா. வர்ணி மேல் அவளுக்குள்ள பொறாமை நீங்கணும். அது வரையிலாவது!''

''பாவம்டா சந்தியா காதல் பெரியதுன்னு போயி! சராசரி சுகங்களை இழந்திட்டு இப்போ அதை தக்கவைக்க போராடுகிறாள்.''

''எனக்கு ஒரு யோசனை அண்ணா, ராஜாவுக்கு நம்ம பெங்களூர் பேக்டரியில் ஒரு வேலை போட்டு கொடு அங்கே இருக்கிற கெஸ்ட் ஹவுசில் சந்தியா ராஜாவை தங்க வைக்கலாமே!''

''நல்ல யோசனை இளங்கோ. செய்திடலாம்.''

''சரி அண்ணா நீ முதல்ல வீட்டுக்குப் போய் வர்ணியிடம் பேசு!'' இளையவன் துரத்திட, மனதில் ஏற்பட்ட குழப்பம் நீங்கி தம்பியை ஆரத்தழுவி புன்னகையுடன் புறப்பட்டான் சித்தார்த்தன்.

''அன்புள்ள அத்தானுக்கு,

''மாப்ள ரொம்ப பிசியா? சரியா தாலி கட்ற நேரத்துக்குத் தான் வர்றாரு?''

''ஜாமீன் இப்பத்தான் கெடச்சுதாம்!''

-பழ.கவிதாசிவமணி,
புன்செய்புளியம்பட்டி





உங்களை பெயர் சொல்லியே அழைத்துவிட்டு, இப்போது இப்படி விளிப்பது வியப்பு தான். மனதில் தோன்றிய எண்ணங்களை எங்கே இறுதிவரை சொல்லவே தருணம் வாய்க்காதோ எனும் தினைப்பில்தான் இக்கடிதம்.''

''நிதம் நிதம் நாம் எத்தனையோ புதுமுகங்களை சந்திக்கிறோம். ஆனால், வெகு சிலது மட்டும் நம்முள் ஆழப் பதிந்து விடுகிறது. அப்படித்தான் உங்களின் முகம், நீங்கள் முகம் திருப்பி வார்த்தைகளில் நெருப்பு உமிழும் சமயங்களில் எல்லாம் உங்கள் விழிகளில் மெல்லிய காதலை கண்டு இருக்கிறேன்.

அதெல்லாம் என் கற்பனை என்று கூட எண்ணியதுண்டு. ஆனால், யாரிடமும் இளகாத இரும்பு என்னிடம் இளகியது.

உங்கள் மெல்லிய கன்னத்தின் வருடல்கள். எனை வேதனைப்படுத்தி விட்டோமே என்று கசிந்த விழிகள் அன்றே முழு அன்பை புரிந்து கொண்டேன். நீங்கள் எனக்களித்த அன்பு பரிசு, மனம் பூரித்து விட்டேன். எனக்குள் பூத்த காதல் வேர் வளர்ந்தது.

வீட்டிலும் எல்லோருக்கும் விருப்பம் என்று இளங்கோ சொன்ன போது கூட, உங்கள் குரலில் நேருக்கு நேர் அதை கேட்க வேண்டும் என்று விரும்பி வந்தேன். ஆனால் நீங்கள்?''

அர்த்தமற்றதைப் பேசி தவறாய் புரிந்து கொண்டு என் கனவுகளையும், ஆசைகளையும் நொறுக்கி விட்டீர்கள். இறந்து போனாற் போல் உடைந்து விட்டேன் சித்து. உங்களிடம் பரிசுத்தமான அன்பு தானே வேண்டினேன். உடலால் அணைத்து விட்டால், என்னை மறக்கமாட்டாய் என்றால் எத்தனை கொடுமையான வார்த்தைகள்.

'இதை தங்கள் வாயால் கேட்டது செந்தணலில் தள்ளியது போல் இருந்தது. உண்மையில் உங்கள் அணைப்பை எதிர்பார்த்துதான் வந்தேன் சித்து.'

அன்பாய், காதலாய் நீ என்னவளென்னும் உரிமையான அணைப்பை, ஆனால் நீங்கள்.. இந்நிகழ்வு ஆறா ரணமாகிவிட்டதே சித்து, உங்கள் கடு சொற்களை தாங்கிய மனம் இந்த அணைப்பை ஏற்க முடியவில்லை. உடனே இங்கிருந்து கிளம்பிட வேண்டுமென்று வேண்டினேன். அதுவும் என்னால் முடியவில்லை

இக்கடிதம் கூட உங்களிடம் சேர்ப்பிப்பேனா அதுவும் தெரியவில்லை..!''

கடிதம் அதிகமான கமாக்களோடு, முற்றுப் பெறாமல் இருந்தது. சித்தார்த்தனின் விரல்கள் நடுங்கின. கண்கள் லேசாய் கசிந்தன. ''கண்மணி உனை எத்தனை கஷ்டப்படுத்தி விட்டேன்.''

ஆபிஸிலிருந்து கிளம்பி நேராக வர்ணிகாவின் அறைக்குள் நுழைய, அங்கே அவள் இல்லாதது ஏமாற்றம் அளித்தாலும், டேபிளின் மேல் இரண்டாய் மடிக்கப்பட்ட காகிதம் அவனை ஈர்த்தது. ஒருவேளை வர்ணா ஏதும் தவறான முடிவெடுத்து விட்டாளோவென்ற

பயத்தில் கடிதத்தை எடுத்தான். படித்து முடித்ததும் நெஞ்சில் டன் கணக்காய் பாரம் ஏறியது.

பதறிய உள்ளத்துடன் தோட்டத்தின் புறம் விரைந்தான். அங்கே அவன் தேவதை அந்த காதல் பறவைகளோடு கொஞ்சிக் கொண்டிருந்தாள். அவள் முகம் பார்க்கவே கூச்சமாக இருந்தது.

16

"வரு..!" காற்றில் கலந்த குரல் அவள் காதோரம் உரச, விருட்டென திரும்பினாள். எதிரே சித்து கனிவும், காதலும் கலந்த பார்வையோடு...!"

வர்ஷிகாவின் கண்களில் நீர் திரையிட உருண்டோடிய முத்துகளை ஓடோடி வந்து துடைத்து விட்டான் சித்தார்த்தன்.

"மன்னித்து விடு கண்ணம்மா, உன் அன்பை உணர்ந்தும் பொறாமைத் தீயில் மனம் பொசுங்கி உனையும் சுட்டுவிட்டேன். வரு... பிளீஸ் எங்கே நீயெனை விட்டு சென்று விடுவாயோ என்று பயந்துதான் நான் அப்படி நடந்து கொண்டேனே தவிர தவறான நோக்கத்தோடு இல்லை."

வர்ஷிகா ஏதும் பேசாமல் அவனையே பார்த்தாள்.

"ஏற்கனவே ஏமாந்தமனது இன்னும் இன்னொரு ஏமாற்றத்தை தாங்க முடியவில்லை, அதிலும் உன் மேல் காதல் பூத்த பிறகு, நம்ப முடியவில்லையா வரு...!"

"உன்னை முதன்முதலில் கோவிலில் சந்தித்த போது, நீ பேசியதை ரசனையோடு ரசித்தேன் கண்மணி"

"மறுமுறை கல்யாண மண்டபத்தில் பார்த்த போது உன் தைரியம் பிடித்து இருந்தாலும், எனக்கு நடந்த அதே சூழ்நிலை ஆனால் நீ அந்தப் பெண்ணிற்கு சப்போர்ட் பண்ணியதும் உன் மேல் இனம் புரியாத கோபம் வந்ததும், வார்த்தையால் கீறினேன். உன்னைப் பார்க்கும் போதெல்லாம் மனது அலைபாய்ந்தது."

"உண்மையா சித்து..!"

"சத்தியம்"

"நானும்..!"

"கடிதம் படித்தேன் வரு...!"

"உன்னை எத்தனை காயப்படுத்தி இருக்கிறேன் என்று உணர்ந்து மன்னிப்பு கேட்கத்தான் வந்து இருக்கிறேன்" அவன் அருகில் வந்து தன் காதலியை நெஞ்சில் சாய்த்துக் கொண்டான்.

"இறுகிய பாறையில் உன் உருவம் பதிந்தவுடன் நேரில் சொல்லவும் தயக்கம் ஒருவேளை நீயும் வேறு யாரையாவது மனதில் வைத்து மறுபடியும் ஏமாற நினைத்தால் தாங்கிட மாட்டேன். ஆனாலும், மனதில் ஆசையை வளர்க்கக் கூடாதுன்னுதான் உனைப் பார்க்கும் போதெல்லாம் எரிந்து விழுந்தேன். ஆனால் உன்னை முதலில் தொட்ட போது அணைத்த போது என் வாழ்நாள் முழுமைக்கும் நீதான் என்று முடிவு பண்ணிட்டேன். சொல்லிட தயக்கம்."

"ஏனாம்? ஆண்மகன் மனதில் பட்டதை சட்டென சொல்லிட வேண்டியது தானே! பெண்கள் தான் மனதை திறக்க தயங்குவார்கள்."

"கோபமே உருவாய் காட்டி விட்டு, திடீரென காதலிக்கிறேன் என்று எப்படி சொல்ல இயலும்? முடியாதே, அதனால் என் மனதை மெல்ல மெல்ல திறந்தேன்."

"எல்லாம் சரி சித்து, இத்தனை அன்பையும் வைத்துக் கொண்டு ஏன் அத்தனை வன்மம் இளங்கோவுடன் சேர்ந்து எத்தனை துடித்தேன் தெரியுமா?"

"மறுபடியும் மன்னித்துவிடு கண்ணம்மா. இளங்கோவுடன் ஆரம்பம் முதலே நீ நன்றாய் பழகினாய்தான். ஆனால் உன் பிறந்த நாள் அன்று காலை வாழ்த்து கூறிட ஆவலாய் வந்தவனிடம், நீங்கள் இருவரும் திரும்பிக் கூட பாராமல் சீண்டி விளையாடிட அந்த நேரத்தில் சந்தியா வேறு இளங்கோவும், வர்ஷிகாவும் காதலர்கள் விரைவில் மணமுடிக்க வேண்டுமென சொல்லிட ரொம்பவும் இடிந்து போனேன் நான்."

"அன்று என்னால் உன்னிடம் இயல்பாய் இருக்க முடியவில்லை. ஆனால் இளங்கோ சர்வ சாதாரணமாய் உன் கை பற்றினான். என்ன தான் படித்திருந்தாலும் பொறாமை கண்ணை மறைத்து விட்டது.

என்னிடம் இல்லாத எது இளங்கோவிடம் என்ற பொறாமை சட்டென்று பண்பட்டிருந்த உள்ளத்தையும் நொடியில் கலைத்துவிட்டது. சந்தியா போட்ட தூபம் நொடியில் தீயாகப் பிடித்துவிட்டது"

"சித்து! உங்க முரட்டுக் கோபம் இப்ப எப்படி தீர்ந்தது?"

"ம்... கோபமல்லடா ஆதங்கம் உன்னை தொலைத்து விடுவேனோ என்ற பயம்.

"அந்த பேஷன்ட் ஏன் கத்தறார்?"

"அவரு ரயில்வே ஸ்டேசன் மாஸ்டராம். ஆபரேசன் செய்ய நீங்க பச்சை துணி போட்டுட்டு வந்ததை பார்த்து அபசகுணம்னு நினைச்சு கத்தறார்!"

-பழ.கவிதா சிவமணி, புன்செய்ப்புளியம்பட்டி.



எல்லாம்தான் சேர்த்து என்னை குழப்பிவிட்டது அதைத் தீர்த்து வைத்து இளங்கோ என் மனதில் பால் வார்த்து விட்டான்''

''இப்ப என்ன நிலையில் இருக்கிறே சித்து''

தெளிந்த மனதுடன் உன்னிடம் மன்னிப்புக்கோரி உன் புண்பட்ட மனதை எப்படி தேத்துவேன்! நான் மிருகம் தான்.. வரு.. நடந்த கசப்பை மறந்து விட முடியுமா உன்னால்?''

அவன் கைகளைப் பற்றிக் கொண்டாள் வர்ணிகா என் மனம் என்றுமே உங்கள் வசம்தான் சித்து என்று சொல்வதைப் போல! வார்த்தைகளால் சொல்ல முடியாத நிலையில் அவனை அணைத்து அவன் உதடுகளோடு தேன் இதழ்களை அவள் பொருத்த அவன் நெகிழ்ந்து போய் இனிய அதரங்களை சுவைத்தான்.



''வாடகை பாக்கி கூடிட்டேப் போனதுக்கு அடிக்கடி வீட்டை காலி செய்யுன்னு கத்துன வீட்டுக்காரரை காலி பண்ணிட்டானாமே கபாலி... இப்ப எங்கேயிருக்கான்?''

''வாடகையே இல்லாத மாமியார் வீட்டுல!''

-ஆர்.ஜி.காயத்ரி,
திசையன் விளை.

''அப்பப்பா... என்ன முரட்டுத்தனம்!''

பொய்யான சலிப்போடு விலகினாலும் அவள் கைகள் அணைப்பை விடுவிக்காததால் அவள் விருப்பம் அறிந்து மீண்டும் முகம் பொருத்த இந்த முறை முரட்டுத்தனம் அவளிடமிருந்தது!

''ஊடலில் கூட நாம் பிரியக்கூடாது வரு!''

''சரிடா! என் கணவனே!'' அவன் கன்னம் கிள்ளினாள்.

''ம்.. அம்மாவும் அப்பாவும் நம் திருமண விஷயம் பேசத்தான் சென்றிருக்கிறார்கள். அந்த நிலையில் இங்கே சந்தியா மனம் புகைந்ததால் கண்கள் கரிக்கும் அளவில் ஏதேதோ நடந்துவிட்டது. இப்போதான் இளங்கோ எல்லா விவரமும் கூறினான்.''

''அவனுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும் சித்து. இங்கு வந்த நாள் முதலே என்னுடன் தோழனாக துணை நின்றவன். இன்று என் வாழ்வையே தந்துவிட்டான்.''

''நன்றியை நேரில் சொல்கிறீர்களா? இல்லை போய் போன் பண்ணட்டுமா'' இளங்கோவின் குரல் கேட்க இருவரும் கலைந்தார்கள்.

எதிரில் இளங்கோ இருவரின் பெற்றோர்கள், ராஜா என அனைவரும் நிற்க, சித்துவின் முதுகிற்குப் பின்னால், பதுங்கினாள் வர்ணிகா.

''அடடா என் பொண்ணு கூட வெட்கப்படறாளே?'' பரிமளா குரல் எழுப்பிட,

அனைவரும் சிரித்தனர்.

''போங்கம்மா...!''

''மனசு நிறைஞ்சிடுச்சு சித்து- உன்னைப் பற்றிய கவலையெல்லாம் தீர்ந்து போச்சு. இனியெல்லாம் சந்தோஷம்தான்.'' கலா மகனின் கைகளைப் பற்றிட,

வர்ணிகாவும், சித்துவும் பெரியவர்கள் காலில் விழுந்தனர்.

''நான்தான் பெரியவன், உங்கள் இருவரையும் சேர்த்தவனே நான் தானே!'' இளங்கோ காலரைத் தூக்கி விட்டுக் கொள்ள,

''நான் வேணா விழவா..''-வர்ணிகா.

''வேண்டாம் தாயே! வருங்கால அண்ணியாரிடம் வம்பை ஏன் விலைக்கு வாங்க வேண்டும்?''

''படவா ராஸ்கல்!'' சித்து அவன் காதைத் திருகிட அங்கே புன்னகை அலை பரவியது.

அமைதியாய் இருந்த சந்தியாவின் கையை ஆறுதலாய் பற்றினான் ராஜா. சித்துவின் அம்மாவிடம் இருவரும் வணங்கினர். அம்மா இத்தனை நாள் எங்களுக்கு அடைக்கலம் தந்த உங்களை என்றுமே மறக்கமாட்டேன். நாங்க போறோம்.''

''என்ன ராஜா இது? எங்கே போறீங்க?''

''ஸார்..! உடம்பு நலமாகிவிட்டது. இனி வேறு வேலையைத் தேடிக்கொண்டு என் குடும்பத்தை காப்பாற்ற வேண்டுமே!''

''சந்தியா எங்க வீட்டுப் பெண், நீங்க மாப்பிள்ளை அப்படி போகவிட மனம் வருமா! உங்க சங்கடம் எனக்குப் புரியுது. எனக்கு பெங்களூரில் ஒரு பிராஞ்ச் இருக்கு. அதை நீங்க பார்த்துக் கோங்க. அங்க இருக்கிற கெஸ்ட்ஹவுஸில் தங்கிக்கலாம்.''

சந்தியாவின் கண்களில் நீர் திரையிட்டது. இத்தனை நல்லவர்களுக்கு ஒரு நொடியில் தீங்கு நினைத்தேனே என்ற எண்ணம் மேலோங்க, கணவன் தோளில் ஆதரவாய் சாய்ந்து கொண்டாள்.

''எல்லார் மனமும் நிறைஞ்சு போயிருக்கு. வாங்க கோவிலுக்குப் போய் சாமி கும்பிட்டு திருமணத் தேதியையும் முடிவு பண்ணிட்டு வரலாம்.'' பெரியவர்கள் சொல்லிட எல்லோரும் கிளம்பினார்கள்.

சித்துவும், வர்ணிகாவும் பார்வையாலேயே விழுங்கிக் கொள்ள, ''உன் பெயர் சொல்லும் போதே இனிக்கிறது மனம்!'' என்று காதல் வரி பாடினான் அவன்!

**முற்றும்**